

# பலாமரம்

பாலகுமாரன்

# பலாமரம்

பாலகுமாரன்

விசா பப்ளிகேஷன்ஸ்
55, வெங்கட்நாராயணா சாலை,
தி. நகர், சென்னை-600 017

முதற்பதிப்பு : நவம்பர், 1989
இரண்டாம் பதிப்பு : ஜனவரி, 1991
மூன்றாம் பதிப்பு : ஆகஸ்டு, 1993 (விசா வெளியீடு)
நான்காம் பதிப்பு : பிப்ரவரி, 1998 ''

உரிமை : ஆசிரியருக்கு

---

**விசா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு**

---

**PALAMARAM**

**By: BALAKUMARAN**

**Fourth Edition : Feb. 1998**

**Pages** : *184*

**11.6 kg. Cream wove**

# விலை : ரூ. 42-00

**THIRUMAGAL NILAYAM**
**CHENNAI - 600 017**

கிடைக்குமிடம் :

**திருமகள் நிலையம்**
55, வெங்கட் நாராயணா சாலை,
தி. நகர், சென்னை-600 017
போன் : 4342899, **Fax** : 91-44-4341559

அச்சிட்டோர்
யோகி ராம்சுரத்குமார் பிரிண்டர்ஸ்
12, கஜபதி தெரு, சென்னை-5

# முன்னுரை

இனிய பாலகுமாரன்,

நமஸ்காரம். நலம். நலம் நாடுவதும் அஃதே. கல்லூரி நாட்களுக்குப் பிறகு இப்போதுதான் உங்களுக்கு நீண்ட கடிதம் எழுதுகிறேன்...

பாலகுமாரனால் அதிக பட்சம் எத்தனை வாசக வாசகிகளை நினைவில் வைத்துக்கொள்ள முடியும்...? ஒவ்வொரு வாசகனின் நினைவுகளும், மூளையில் பதிவு செய்யப்பட்டு-இதனால் உங்களுக்குச் சுமை கூடிப் போகுமோ என்று நான் கவலைப்பட்டதுண்டு...ஆனால் எழுதுகிறவனுக்கு, வாசிப்பவனின் நட்பு சுகமான விஷயம் என்பதை உங்களை முதன் முதலில் சந்தித்தபோது நான் தெரிந்து கொண்டேன். பாலகுமாரன் என்கிற எழுத்தாளருக்கும், பகவதி என்கிற பத்திரிகையாளருக்கும் உள்ள சிநேகம், சிங்கத்தைவிட வலிமையானது, பூவைவிட மென்மையானது நான் சொல்வது சரிதானே பாலா...?

கதிரவன் எட்டிப் பார்க்காத, அந்த அதிகாலை வேளையில்; கடற்கரையில் காற்றடிக்கிற திசையில் ஓடிக் கொண்டே பாலாவுடன் நடத்திய இலக்கிய சர்ச்சைகள் இன்றும் பசுமையாய் நெஞ்சுள்...பாலகுமாரனின் எழுத்துகள் இலக்கியங்களா...? இல்லை...படித்துவிட்டு தூக்கிப் போடுகிற வெறும் வார்த்தை ஜால குப்பைகளா...? ஒவ்வொரு முறையும் நான் தராசு வைத்து, சீர் தூக்கிப் பார்க்கிறவள் குரங்கு அப்பம் தின்ற கதையாய். அத்தனையும் படித்துவிட்டு, முகத்துக்கு நேரே இலக்கிய விமர்சனம் செய்பவள்.

இலக்கியத்துக்கு **Definition** உண்டா...? ஆண்-பெண் பேதம் உண்டா...? என்றெல்லாம் எழுத்தாளன் யோசிப்பதில்லை...எதைப் படிக்கிறபோது மனது சுக மடைகிறதோ, எந்த எழுத்து ஏதேனும் ஒரு சிறு பாதிப்பையாவது மனத்தில் உண்டாக்குகிறதோ-அவைதான் இலக்கியங்கள் என்று நான் கூறுவேன். ஒரு எழுத்தாளனை, ஆண் எழுத்தாளர்-பெண் எழுத்தாளர் என்று கட்டங்கட்டி வரையறுப்பது சரியில்லை...எழுத்து வடிவத்தில் கூறப்படுகிற விஷயங்கள்தான் முக்கியம்... இருப்பினும், பெண் எழுத்தாளர்களால் படைக்கப்படுகின்ற கதாநாயகிகளை விடவும், ஆண் எழுத்தாளர்களின் பெண் பாத்திரங்கள் போற்றப்படுகின்றன. பொன்னியின் செல்வன்-குந்தவை சிவகாமியின் சபதம்—சிவகாமி, மோகமுள்—யமுனா, மரப்பசு—அம்மணி etc etc...இதற்குக் காரணம் என்னவாயிருக்கும்...? பெண்கள்-சக பெண்களை அறிந்ததை விடவும், ஆண்களுக்குப் பெண்களைப் பற்றி நிறைய தெரியுமோ...? இது எனக்குப் புரிபடாத விஷயம்.

பாலாவின் கதாநாயகிகள் ஏதோவொரு வகையில் என்னைப் பாதித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். பெண்கள் எளிதில் வசப்படுகிறவர்கள் அன்பு வசப்படுகிறவர்கள்...காதல் வசப்படுகிறவர்கள் ஆனால், பாலாவின் நாயகிகள் எளிதில் வலையில் சிக்க மாட்டார்கள்... என்னைப் போல... அந்தப் பெண்களுக்குள் இருக்கும் 'ஆண் தன்மை' எனக்குப் பிடித்தமான ஒன்று கரையோர முதலைகள்—ஸ்வப்னா, இரும்புக் குதிரைகள்—காயத்ரி தாயுமானவன்—சரசு, பயணிகள் கவனிக்கவும்-ஜார்ஜினா, உள்ளங் கவர் கள்வன்-நந்தினி இப்படி அடுக்கிக் கொண்டே போனால் நானொரு **Thesis** எழுதி டாக்டர் பட்டம் வாங்க வேண்டி வரும்.

நாயகிகள் இப்படியென்றால், உங்களின் நா..யகர்கள் மிகவும் மென்மையாய் இருக்கிறார்களே...? பெண்மை

வின் சூட்சுமத்தை ஆதியோடு அந்தமாய் நீங்கள் அறிந்திருக்க வேண்டும்... பெண்களை மிகவும் மென்மையாகத் தான் அணுக வேண்டும் என்பதை எங்கே கற்றுக் கொண்டீர்கள் பாலகுமாரன்...? இந்த விஷயத்தில் உங்களுக்கு அனுபவம் மிக அதிகம். பெண் என்பவள் ஒரு போதிமரம். இம்மரத்துக்கடியில் உட்காருகிறவர்களுக்கு அன்பு, பாசம், பிரிவு, காதல், கருணை, விவேகம்...கடைசியாய் ஞானம் வரை அனைத்தும் கிடைக்கும் இல்லையா...? பாலாவின் நாயகர்கள் பெண்களை ஆராதிக்கிறவர்களாக இருக்கிறார்கள். பார்வைக்கு 'பலாமர' முள்ளாய் பயமெடுத்தாலும், உள்ளுக்குள் தேன் சுளையாய் தித்திக்கிறார்கள் 'பலாமரம்' சரவணன் மாதிரி சரவணனின் மூல ஸ்வரூபம் நூறு சதவீதம் பாலகுமாரன்தான். காரணம்...தாடி,மீசைக்குள் மறைந்திருக்கும் பூப்போன்ற பாலாவை நானறிவேன். முரட்டுத்தனத்துக்குள் முழு நிலவு.

சரவணன் போல அதிசயமான பிறவிகள் எங்கோ ஒன்று இருக்கத்தான் செய்கின்றன. காதலை விடவும், கடமையைப் பெரிதாக நினைப்பவர்கள் (இதுவரை அப்படி யாரையும் நான் சந்திக்கவில்லை என்பது வேறு விஷயம்) எனக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணுகிறார்கள் இராணுவ வீரர்களுக்கு மிகுந்த கடமையுணர்ச்சி உண்டு என்று கேள்விப் பட்டிருக்கிறேன். அதே இராணுவ நெஞ்சுக்குள் அளவுக்கு மீறிய காதலும் உண்டு என்றும் படித்திருக்கிறேன். இதில் எது சரி? எது தவறு? என்றெல்லாம் ஆராய்ந்து பார்க்க எனக்குப் பிடிப்பதில்லை...அளவுக்கு மீறிய காதலும், அளவுக்கு மீறிய கடமையும் நடைமுறைக்கு ஒத்து வராது என்பது என்னுடைய வாதம். 'பலாமரம்' சரவணன் மாதிரி என்னால நிச்சயம் இருக்க முடியாது. தனித்து நின்று **'eccentric'** பட்டம் வாங்க நான் தயாரில்லை...பரந்த மனம் படைத்த

வளாக இருக்கலாம்...அதற்காக பரந்து விரிந்த இவ்வுலகை விட்டுத் தனியே இயங்க முடியாது.

'அவன்தான் மனிதன்'—சிவாஜி கணேசனை நினைத்துப் பார்க்கிறேன். அப்படியொரு **Noble character**-ஐ நாம் வாழ்க்கையில் சந்தித்திருக்கவே முடியாது...கையிலிருப்பதையெல்லாம் பிறருக்காகக் கொடுப்பவன்தான் மனிதன் என்றால், இவ்வுலகில் எவருமே மனிதனாக இருக்க முடியாது. தனக்கு மிஞ்சியதைத்தான், பிறருக்குக் கொடுத்து உதவ வேண்டும்...ஏனென்றால் வாழ்ந்தாலும் ஏசும்; தாழ்ந்தாலும் ஏசும் தன்மையுடையதாயிற்றே இந்த உலகம்.

மாதம் ஒரு 'க்ரைம்'களுக்கு நடுவில் உங்களின் 'பலாமரம்' ஓங்கி உயர்ந்து நிற்கிறது சரவணனின் மனதுக்குள் நூலிழையாய் ஓடிய நிறைவேறாத காதல் என் நெஞ்சில் சோகச் சுமையாய் அழுத்துகிறது...அந்த் தொழில் நுட்ப ஆய்வுகள்—சிறுவர் குற்றப் பள்ளியாக இருக்கட்டும், விமானப் போக்குவரத்து சம்பந்தப்பட்டவையாக இருக்கட்டும்? கார் லாரி மெக்கானிஸமாக இருக்கட்டும். இதைத் தகுந்த **Ratio**-க்களில் கலந்து கொடுப்பதில்தான் ஒரு எழுத்தாளனின் வெற்றி அமைகிறது என்பதை உங்கள் கதைகள் பறைசாற்றுகின்றன.

எல்லாவற்றுக்கும் மேல் குதிரையையும், முதலையையும், இன்னும் எத்தனையோ ஜீவராசிகளையும் மனிதனுக்கு இணையாக நேசிக்கின்ற பாலகுமாரனின் ஸ்நேகிதம் என்னைப் பிரமிக்க வைக்கிறது. ஒரு குதிரைக்குள்ளும், முதலைக்குள்ளும் சிநேகம் இருப்பதை எங்கு கண்டு கொண்டீர்கள் பாலகுமாரன்...? காற்றைப் போல் சிநேகம் எல்லாருக்கும் பொது...இதற்கு எதற்கு **Jender** ஒரு பெண் சக தோழியை நேசிப்பது போலத்தான் தோழனையும் நேசிக்கிறாள்...இதில் என்ன தவறு இருக்க முடியும்...? மகளிர் மட்டும்—ஆண்கள் மட்டும் என்கிற **Parallel lines** எதற்கு...?

ஒரு ஆணுக்குள் பெண்ணும், பெண்மைக்குள் ஆண்மையும் கலந்திருப்பது இயற்கை. இறைவனே அர்த்தநாரீஸ்வரனாய் இருக்கும்போது, மனிதர்கள் மட்டும் ஏன் உப்புச் சப்பில்லாத விஷயத்துக்கு மாய்ந்து போகிறார்கள்?

ஆண்—பெண் சிநேகம் பற்றி இங்கு எத்தனை பேருக்கு உண்மையாய்த் தெரியும். எனக்குத் தெரியும் முழுமையாய்...! சிநேகிதிகளைவிடவும், சிநேகிதர்கள் அதிகம் என்பதாலா...? கோ-எஜுகேஷனில் படித்த தாலா...? இல்லை...அண்ணன், தம்பியோடு ஒரு பெண்ணாய் பிறந்ததலா...? தெரியவில்லை...சிநேகம் என்கிற விஷயத்தை ஆண்—எனக்கிருப்பதால்தான் இவை சாத்திய மாகிறது' என்ற உண்மை மட்டும் புரிகிறது!

என் நண்பர்கள் மிக அற்புதமானவர்கள்...காதலாய் கசிந்து கண்ணீர் மல்கி...என்று கூறுவார்களே அந்த டைப். எனக்கு நல்லதோ, கெட்டதோ எதுவாக இருப் பினும், என்னோடு சிரித்து, துக்கித்து என் உணர்வு களைப் பகிர்ந்து கொள்பவர்கள்... இத்தனையும் ஒரு எல்லைக்குள் கட்டுக் கோப்பாயிருப்பது ஆச்சரிய மில்லையா...? நான் காதல் மணம் செய்து கொண்டவள். என் கணவர் என்னுடைய வாசகர்...நண்பர்...எங்களு டைய நட்பு வளர்ந்து, காதல் வயப்பட்டு தந்தை மடியில் அமர்ந்து சம்பிரதாயக் கல்யாணத்தில் முடிந்தது. காத லுக்கும், சிநேகத்துக்கும் ஓரிழைதான் வித்தியாசம் என்பதை அனுபவரீதியாய் உணர்ந்தவள்... காதலில் சிநேகம் கலந்து இருந்தாலும், அதை மீறிய ஒரு இனக் கவர்ச்சி அதில் உண்டு...நம்மோடு கடைசிவரை வாழ் வைப் பகிர்ந்து கொள்பவனோடு மட்டுந்தான் காதல் சாத்தியம் என்பது என்னுடைய வாதம் எல்லோரையும் சிநேகம் செய்து கொள்ள முடியும்...ஆனால் கணவனை மட்டும்தான் காதலிக்க முடியம். காதல் கணவனல்லாத வேறு எவரிடத்திலும் தோன்றக் கூடாது என்று நான் சொல்ல வரவில்லை. அது அவரவர் மனத்தைப் பொறுத்த விஷயம்.

என்னைப் பொறுத்தவரை ஆண்-பெண் சிநேகம் கம்பிமேல் நடப்பது போன்றது. நூலிழை தவறினால் கூட அதல பாதாளத்தில் விழுந்துவிட நேரிடும் அந்த அதி அற்புதமான சிநேகம் இழை இழையாய்ப் பின்னப் படுவது சுகம்...இறுகிக் கயிறாவது கொடுப்பினை...! இந்தக் கொடுப்பினை நிறைய பேருக்கு இங்கு கிடைக்க வில்லை என்பதினாலோ என்னவோ, எல்லோரும் இவ் விஷயத்தைச் கொச்சைப்படுத்துகிறார்கள். மானுடம் இன்னும் நிறைய பக்குவப்பட வேண்டும்,

இந்த சிநேகம் வெளியில்தான் கிடைக்க வேண்டும் என்பதில்லை... வீட்டுக்குள்ளும் இருக்க வேண்டும். கணவனும்-மனைவியும் ஆத்மார்த்தமானசிநேகிதர்களாய் இருப்பது பாக்கியமில்லையா...? அந்த அற்புத சிநேகம் பாலகுமாரனுக்கு வீட்டுக்குள் கிடைத்திருப்பதுதான் அவருடைய வெற்றிக்குக் காரணம் என்பதில் எனக்கு எவ்வித ஐயமுமில்லை.

புரிந்து கொண்ட கமலா...இதந்தரும் சாந்தா... தோளுக்கு மேல் வளர்ந்து தோழியாய் நிற்கும் மகள் கௌரி...சான்றோன் என்ற பெயர் வாங்கப் போகும் செல்ல மகன் சூர்யா—இது போதுமப்பா... வேறென்ன வேண்டும். உறவுகளும், அவைதரும் சுகங்களும்தானே வாழ்க்கையின் வெற்றிக்குக் காரணம்...

அந்த வெற்றி மாலைதான் எப்போதும் உங்கள் கை யில் இருக்கிறதே... பாலகுமாரன் இன்று போல் என்றும் இருக்க அவரின் சற்குரு அண்ணாமலை அருட்பிரகாச வள்ளல் அவருக்கு அருள் புரிவார்.

தேக்கிய அணைநீராய் என்னுள் சுமந்த பாலகுமார னின் நினைவுகள் தொடரும்...

இடம் : சென்னை — மிக்க அன்புடன்

தேதி : 26-7-93 — **பகவதி**

# பலா மரம்

## 1

''அம்மா, நான் வயசானவன்தானே...இங்க உட்கார்ந்துக்கட்டுமா...'' அந்த நரைத்த தலை மனிதர் பவ்யமாகக் கேட்டார்.

அந்தப் பெண் அவரை நிமிர்ந்து பார்த்துவிட்டு ஜன்னல் பக்கம் திருப்பிக் கொண்டது.

''ஆம்பளைக்குன்னு ஸ்பெஷல் பஸ் விடணும். அதுல லேடீஸ் ஏறப்படாது இல்லையா? பாம்பேல இருக்கற மாதிரி எங்க வேணா, யார் வேணா உட்காரலாம்னு இருக்கணும். இத்துணூண்டு பொண்...கேட்டா மூஞ்சிய திருப்பிக்கறது மரியாதை தெரியாம...இப்பல்லாம் உரசறவனுக்குத்தான் காலம்...ஊம்...ம்''

''பரவாயில்லை. உட்காருங்கோ. ஏம்மா பெரியவர் உட்கார்ந்தா என்ன—வில்லேஜ் கேர்ள் போல இருக்கு. உட்காருங்கோ.'' பின்னால் உட்கார்ந்திருந்த மத்திய தர வகுப்புப் பெண்மணி உதவிக்கு வந்தாள்.

அந்தப் பெண் ஜன்னலோரம் ஒண்டிக் கொண்டது.

''தாங்க் யூ'' என்று உதவி செய்தவளுக்குப் புன்முறுவல் கொடுத்துவிட்டு, அந்தப்பெண் அருகே உட்கார்ந்தார். மணி பார்த்தார். பஸ் கிளம்ப ஐந்து நிமிடங்கள் இருந்தன.

**''மூவருக்கும் முதற் பிறப்பு நின்**
**முக்குணக் கடல் என்று உன்...''**

நரைத்த தலை மனிதர் சௌந்தர்ய லஹரி சொல்லத் துவங்கினார். பின் சீட்டிலிருந்து ஒரு பெரிய கிராமத்துக் கிழவன் எழுந்திருந்தான்.

**''உன் சேவடிக் கண் இருப்பர் சென்னிக்**
**குவித்த செங்கை பிரிக்கிலார்''**

அருகே வந்து அந்தப் பெண்ணையே வேதனையுடன் பார்த்தான். அவள் ஜன்னலை விட்டு முகம் திருப்பாமல் இருந்தாள்.

**''பூ எடுத்தவர் சென்னி வைத்திடு**
**போதமுற்றவர் அம்மை நின்''**

''த்த...இங்க பாரு'' கிழவன் அவளை அதட்டினான். பெரியவர் இவளை ஏறிட்டுப் பார்த்தார். அவள் அசையாது இருந்தாள்.

**''கா அலர் பொதி தாளில் வைக்கவும்**
**மூவர் சென்னி களிக்குமே''**

''டீ குடிச்சுட்டு அடுத்த பஸ்ல போவமா, வவுறு குழையுதும்மே''

' வேணாம்.''

''உனக்குப் பசிக்கலை?''

''இல்லை.''

''வா...இறங்கி டீ சாப்பிட்டுட்டு போலாம்.''

''வேணாம்.''

''நரைத்தலை பெரியவருக்கு அடுத்த ஸ்லோகம் மனசுக்கு வரவில்லை. இருவரையும் மாறி மாறிப் பார்த்தார்.

''வாடின்றனில்ல...'' கிழவன் அதட்டினான்.

எனக்குப் பசிக்கலை. உனக்கு வேணும்னா நீ போய் டீ குடியேன், போ.''

''எங்கடி போறது?''

''எங்கனா போ.''

' நார முண்ட. கொழுப்புடி உனக்கு'' நரைத்த தலை பெரியவரைத் தாண்டி கிழவன் அவள் தலையில் படீரென்று அடித்தான்.

பெரியவர் அலண்டு போனார். பஸ்ஸில் இருந்தவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். அவள் இவ்விதம் நிறைய அடி வாங்கியிருப்பாள் போலும். தலையைத் தடவி விட்டு மறுபடி ஜன்னல் பக்கம் பார்த்தாள்.

''வாடி...அறுதலி முண்ட...'' அவள் தலைமயிரைப் பற்றி கொத்தாய் இழுத்தான். அவள் திமிறினாள், எழுந்து அந்தக் கிழவன் நெஞ்சில் கை வைத்துத் தள்ளினாள்.

கிழவன் தடுமாறிச் சுதாரித்து ஆத்திரத்தோடு அவள் முகத்தில் பல முறை அடித்தான்.

ஸ்லோகம் சொன்னவர் மிரண்டு போனார்.

''வேண்டாம்பா... அடிக்காத. பொம்பளைய நடு பஸ்ல கை நீட்டி அடிக்கிறியே...நான் வேணா நின்னுண்டு வரேன். நான் வய'சானவன்னு உட்கார்ந்தேன். இது தப்பா...''

''அட, நீங்க உட்காருங்க. உங்களை யாரு என்னா சொன்னாங்க? இந்தத் துடப்பக்கட்டை திமிர் பிடிச்சு ஆடுதுன்னா...''

''சின்ன பொண்ணுப்பா...பாவம்.''

''சின்ன பொண்ணா...கொழுப்பெடுத்த நாயி... கருக்கல்ல கிளம்புனது. ஒரு வா நீச்சத் தண்ணிக்கூட குடிக்காத கிளம்பினோங்க. நின்னு டீத் தண்ணி ஊத்திக்கினு போலாண்டின்னா ராங்கிக் காட்டறா—ராங்கி.''

''கெல்லீசுக்குப் போய் குடிச்சுக்கலாங்கறேனில்ல...''

''என்னடி... கெல்லீஸு...கெல்லீஸுல என்னா, கொட்டியா வச்சிருக்கு?''

''அதான் எங்கயோ போய் குடிக்கலாம்னு சொல்லுதே...வுடேம்ப்பா. போய் உட்காரு. இடம் போயிடப் போவுது.''

''மானம் மரியாதை எல்லாமே போயிடுச்சு...இடம் போனா என்ன... போவட்டும்.'' அலுத்துக் கொண்டு அவசரமாய் அவன் இடத்துக்குப் போய் அமர்ந்தான்.

வண்டி நிறுத்தமாயிற்று.

''ரொம்ப வலிக்கறதாம்மா? பாவம் மொட்டு மொட்டுன்னு போட்டு அடிச்சுட்டானே...''

''எங்கப்பாருதான்.''

''இருக்கட்டும். கோவம்னா ஏதோ அதட்டுவா. அடிக்கிறேம் பாருன்னு கை ஓங்குவா... இப்படியா... அதுவும் பொது இடத்துலே...ராட்சசன்.''

அந்தப் பெண் முதல் முறையாய் முழுமையாய் அருகில் உட்கார்ந்தவரை ஏறிட்டுப் பார்த்தது.

''எங்கம்மா போற...கெல்லீஸ்ல?''

''குத்தப் பள்ளிக்கு.''

''குத்தப் பள்ளியா... கெல்லீஸ்லயா? அப்படி ஒரு இடமே கேள்விப்பட்டதே இல்லையே...பேட்டை நகர்னு தானே இடம் உண்டு. மெட்ராஸ்ல பள்ளின்னு...''

''அது செயிலு.''

''என்ன?''

''செயிலு குத்தம் பண்ணவங்களை அடைச்சு வைக்கற இடம்.''

''ஜெயிலா... ஆமாமா... ஜுவனைல் கோர்ட்டா என்னமோ உண்டே...பேர் ஞாபகம் வரலை...யார் இருக்கா அங்கே, எதுக்கு?''

''எங்க முறை ஆளு இருக்கு. என்னிய கட்டிக்கப் போறவரு...''

''அட, கஷ்டகாலமே...ஏன்... என்ன ஆச்சு?''

''இரண்டு பேரை வெட்டிப் போட்டார்னு கேஸு முடியற மட்டும் வேலூர்ல வச்சு இப்ப இங்க மாத்திட்டாங்க.''

''யாரை வெட்டிப் போட்டான்...?''

''அது அப்பாரையும் ஆத்தாளையும்.''

''ஐயோ...ஏன்?''

''என்னிய கட்டிக்கக் கூடாதுன்னாங்க. எடுத் தெறிஞ்ச சிறுக்கி...எடுபட்ட சிறுக்கின்னு ஏசுனாங்க. உன்னிய கட்டறது என்னடா...நான் கேட்டா என்னியக் கூட கட்டிக்கிறேன்னுவா அவ...பாக்கறியா? போய் பாக்கு வெத்தலை மாத்திட்டு வரேன்னாராம்.''

''யாரு?''

''அவங்கப்பாரு'

''ம்ம்......''

''இது தட்டிப் பேசுச்சாம். அவங்க அப்பாரு மடக்கிக் குத்தினாராம். இது அரிவா எடுத்து அப்பாவை ஒரு வெட்டு... தடுக்க வந்த அவங்க ஆத்தாளுக்கும் ஒரு வெட்டு... அங்கேயே போயிடுச்சு இரண்டு உசிரும்.''

''ஆண்டவா... என்ன வயசு புள்ளையாண்டா னுக்கு.''

''வர மாளய அம்மாசிக்குப் பதினேழு.''

''அடப் பாவமே.''

''நேத்து கோர்ட்ல தீர்ப்பானதும் ரொம்ப அழுதுச்சு. நான் தாங்காம உடனே கிளம்பிட்டேன். எங்கப்பாருக்கு ஆத்திரம். நான் புறப்பட்டு வர்றது புடிக்கலை. வழியெல்லாம் நொங்கு நொங்குன்னு குத்தி அடிச்சு...''

''வாஸ்தவம்தானேம்மா... ஜெயிலுக்குப் போன வனை, அதும் அப்பா அம்மாவைக் கொன்னுட்டு எப்படி மாப்பிள்ளையா...கஷ்டம்தானே...''

''பொம்பளையா பொறந்தவ ஒருத்தனுக்குத்தான் முந்தானை விரிக்க முடியும். அப்படி வாழச் சொல்லவே எடுபட்ட பொம்பளைன்றாங்க...''

''அது வேற செய்துட்டியா...பகவானே. என்ன சோதனைடா இது.''

"எத்தனை சோதனை வந்தாலும் அதான் எனக்குப் புருஷன். என்னிக்கு வந்தாலும் நான்தான் அதுக்குப் பொண்டாட்டி '

"அதுக்குள்ள அடிபட்டே செத்துருவ போல இருக்கே?"

' அடிச்சுட்டுப் போவட்டம். எனக்கோசரம் பெத்த வங்களை வெட்டிப் போடற உரம் ஆம்பிளைக்கு இருக் கறப்ப, எனக்கு இருக்காதா... என்னிய உருட்டுக்கட்டை எடுத்து அடிச்சாலும், நான்..."

அவளால் பேச முடியவில்லை கிழவன் அடித்தது இப்போதுதான் வலித்தது போலும். இடது தலையைப் பொத்திக் கொண்டு அழத் துவங்கினாள்.

நரைத்த தலைப் பெரியவருக்கு கண்ணில் நீர் திரண்டது.

"அழாத... அழாத... அம்மாடி...அழாத... எல்லாம் சரியா போயிடும். அழாத...இன்னிக்கு நான் சொல்ற ஸ்லோகம் முழுக்க உனக்கு...உன்பேருக்கு...உன்னோட நல்லதுக்கு. உனக்குத் தமிழ் நன்னா தெரியுமா சொல்லு?"

"மூவருக்கும் முதற் பிறப்பு—நின்
முக் குணக் கடல் என்றும்..."

வேண்டாம். நானே உனக்கோசரம் சொல்றேன்.

"மூவருக்கும் முதற் பிறப்பு—நின்
முக்குணக்கடல் என்றும் உன்
சேவடிக் கண் இருப்பர் சென்னி
குவித்த செங்கை பிரிக்கலார்
பூ எடுத்தவர் சென்னி வைத்திடு
போத முற்றவர் அம்மைநின்
கா அலர் பொதி தாளில் வைக்கவும்
மூவர் சென்னி களிக்குமே"

''இதோ பார், அம்பாளை மனசார நினைச்சுக்கோ. இரண்டு கை நிறைய வழிய வழிய பூ எடுத்து அவ பாதத்துல வச்சுடற மாதிரி அடிக்கடி நினைச்சுக்கோ.''

''யாராவது கை ஓங்கற போதோ...கடிஞ்சு பேசற போதோ நான் சொன்ன மாதிரி நினைச்சுக்கோ.''

அந்தப் பெண் அவரைக் கும்பிட்டது.

வண்டி கிளம்ப, அவர் மறுபடி முணுமுணுத்தார். அவளின் துக்கம் தாளாமல், அவளின் உடம்பு வேதனையைத் தாங்காமல் மறுபடி மறுபடி முணுமுணுத்தார்.

**மூவருக்கும் முதற் பிறப்பு—நின்**
**முக்குணக்கடல்...**

பஸ் கெல்லீஸ் நோக்கிப் போயிற்று.

# 2

**அ**வன் கண்கள் மூடி, தலையைப் பின்னுக்குத் தள்ளி சற்றே வாய் பிளந்து சுவரோரம் முதுகு சாய்த்து குந்தி உட்கார்ந்திருந்தான். வள்ளியை நினைக்க நினைக்க அழுகை வந்தது.

''பைல்.''

ஒரு பெரிய பையன் உரக்கக் கத்த மற்ற பையன்கள் எழுந்து நின்றார்கள்.

''பைல்.''

மறுபடி கத்த, வலது முஷ்டி மடக்கி ஒரு கை தூரம் இடம் விட்டுத் தனித்தனியே வரிசையானார்கள்.

எல்லோரும் சிகப்பு நிற அரை நிக்கரும், நீலச்சட்டையும் அணிந்திருந்தார்கள். வலது முழங்காலில் போலியோ வந்திருந்தவன் மட்டும் கோணலாக நின்றான்.

''அட்டேன்ஷன்'' கத்தினான்.

நேராய் நின்றார்கள்.

கோணலாய் நின்றவன் கோணலாகவே நின்றான்.

''தாமோதரன் நீ போகலாம்,'' அந்த பெரிய பையன் காலூனமானவனை நோக்கிச் சொன்னான். இவன் குரலுக்குக் காத்துக் கொண்டிருந்தது போல விந்தி—விந்தி அவன் சுவரருகே போய் நின்றான்.

இது தினமும் நடக்கும் விஷயம். 'பைல்' என்கிற போது எல்லோரும் வந்துவிட வேண்டும். இரண்டு கால்கள் இல்லையென்றாலும் வந்து அங்கே ஆஜராக வேண்டும். பிறகு 'போ' என்று ட்ரில்லுக்கு முன்விடுதலை கிடைக்கும்.

காலூனமானவன் இடம் காலியாக இருந்தது.

''ஏம்பா, புதுசா வந்தவங்க பைல்ல நிக்கத் தாவலையா...'' வரிசையில் உள்ளவன் கேட்க. அந்தப் பெரிய பையன் நிமிர்ந்தான்.

''யார் சொன்னது?''

''அப்ப அங்கன ஒருத்தன் இருக்கானில்ல, நேத்து ராத்திரி வுட்டாங்க. அழுதுக்கினே இருக்கான்.''

''ஏய்...வாடா இங்க''—பெரிய பையன் குரல் கொடுத்தான்.

அவனுக்கு எதுவும் தெரியவில்லை .எவர் பேச்சும் கேட்கவில்லை.

''த்தா...கூப்புடறேன். மானத்தைப் பார்த்து உட்கார்ந்திருக்கிறியே '' நாலே எட்டில் அவனை நெருங்கினான். வலக் காலால் உதைத்தான்.

''எழுந்திருடா.''

அவன் திடுக்கிட, மறுபடி ஒரு எத்து விழுந்தது.

''எதுக்கு என்னிய எத்துறீங்க?''

''எந்திரிடா.''

அவனைக் கொத்தாய் தூக்கினான். தரதர வென்று இழுத்து வந்தான். காலூனமானவன் காலி செய்த இடத்தில் நிறுத்தினான். "நில்லு, நேரா நில்லு. கால் சேர்த்து நில்லுடா."

"எனக்குப் பேதி ஆவுதுங்க."

"எல்லாருக்கும்தான் ஆவுது. நில்லுடான்றேன்.

"எனக்கு நிக்க முடியலீங்க."

"அடிச்சு வாய்க் கொழப்பிடுவேன். மரியாதையா நில்லு."

"மேல கைவச்சே...அதிகாரிங்கக் கிட்ட சொல்வேன்"

"உனக்கு அதிகாரி நான்தாண்டா. நில்லு பொத்திக்கினு."

"யப்பா...நெசம்மாவே அவனுக்குப் பேதி ஆவுது. ஐயோ...ஐயோ காலோட போறான்."

"மகனே...நீ செத்தாகூட வுடமாட்டேன். பைல்னு கூப்பிட்டவுடனே வந்து நின்னுட்டு செத்துபோ. புரியுதா?"

"என்னால முடியலீங்க."

"யோவ் நின்னுடு. நின்னுடு ரெண்டு நிமிஷம். வுட்டுருவாங்க "

"ஒன்னேய்...ரெண்டேய்... மூனேய்...நாலேய்...அஞ்சேய்...ஆறு...ஏழு...எட்டு...ஒன்பதேய்..."

"டென்."

"இன்னொரு தடவை இங்கிலீஷ்ல சொன்ன, அடி படுவ...சொல்லுடா."

பலமுறை பெரிய பையன் கை ஓங்கினான். அவன் கால் அகட்டி, உள்ளங்கை பிரித்து தயாராய் தாக்க நின்றான்.

"நரம்பா...உன்னை நான் கவனிச்சுக்கறேன். இரு... நெக்ஸ்ட்."

''பதினொன்னோய்... பன்னெண்டேய்... நாற்பத்தி ஏழேய்...'' என்ற கூச்சலோடு வரிசை முடிந்தது.

''உன்னிய எண்ணலையா...'' வரிசையிலிருந்து குரல் வந்தது.

''நாப்பத்தெட்டு...'' அவன் சொல்லி விட்டு கட்டடம் நோக்கிப் போனான்.

கிழவனுடன் வாசலில் வள்ளி வந்து நின்றாள்.

இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி.

அதன் வாசல் இரண்டு பக்க உயரச் சுவரோடு ஒரு லாரி போகும் அகலத்திற்கு உள்ளே போயிற்று. இரண்டு பக்கச் சுவர்களிலும் கண்ணாடி பதித்திருந்தது. சுவரின் கீழே குட்டையாய் குரோட்டன்ஸ் வளர்த்திருந்தார்கள். பாதை உள்ளே போய் அகலமாகி ஒரு கட்டடத்தில் முடிந்தது. வராண்டா இரண்டு பக்கமும் இரண்டு அலுவலறை. மறுபடி வராண்டா. திறந்தவெளி மண்திடல். திடல்தாண்டி உயரமான பழைய இரண்டடுக்குக் கட்டடம். அந்தக் கட்டடம் தாண்டி, தோட்டம். தோட்டத்துக்குப் பின்னே சுவர். பதினாலு அடி உயரச் சுவர். ஆங்கிள் நட்டு உள்பக்கமாய் வளைத்து முள்கம்பி மூன்று வரிசைகள் இழுத்து விடப்பட்டிருந்தன. சுவர் தாண்டி கூவத்தின் கிளை ஒன்று சேற்றுக் குழம்பாய் தேங்கியிருந்தது.

அது பள்ளிக்காகக் கட்டின கட்டடமல்ல, ஜெயில் என்றும் கட்டப்பட்டதல்ல, அயனாவரத்து துபாஷ் முதலியார் ஆசை நாயகிக்காகக் கட்டிய கட்டடம். வெளிப்பார்வை உள்ளே வரக்கூடாது என்பதற்காகவே நீளப்பாதை வைத்துப் பக்கவாட்டில் பதினாறு அடி உயரச்சுவர் எழுப்பிக் கட்டட வாசலை மறைத்திருந்தார். முதலியார் இறந்து ஆசை நாயகியின் மறு தலைமுறை தனித்தனியே பிரிந்து அசோக் நகரிலும் கே. கே. நகரிலும்

குடியேறி விட்டது. சிறிது நாள் காகித கொடவுனாக அந்த இடம் இருந்தது. சிறிய தீ விபத்து ஏற்பட்டு ஒரு வண்டிக்குப் பிறகு உள்ளே வேறு தீயணைப்பு வண்டிகள் வர முடியாமல் போகவே, அந்த 'கோடன்' ஆளும் உதறி விட்டுப் போனான். பூட்டப்பட்டு வெகுநாட்கள் கிடந்தது. தோட்டமும் வீடுமாய் உள்ள இடத்துக்கு சதுர அடிக்கு இத்தனை என்று மாநகராட்சி வரி விதிக்க பூட்டப்பட்ட வீட்டுக்கு ஏன் இத்தனை வரி என்று மறுதலை முறை அலட்சியம் காட்ட முதலியாரின் நேர் வாரிசும் ஆசை நாயகியின் தலைமுறையும் வீடு தனக்கே சொந்தம் என்று சண்டையிட, வக்கீல் நோட்டீஸ் பொறி பறக்க, வில்லங்க சொத்தாயிற்று. விற்பதில் சிரமம் இருந்தது. ஏழு வருடம் வரிகொடாத இடத்தை மாநகராட்சி கைப் பற்றிக் கொள்ள, வரிபோக சில ஆயிரங்கள் பெற்றுக் கொண்டு உடைமையாளர்கள் தலை முழுகினர்.

மாநகராட்சி அதைத் தமிழக அரசுக்கு விற்றது. தமிழக அரசு அதைத் தற்போதைக்கு இருக்கட்டும் என்று இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி என்று சிறைச் சாலை நிர்வாகத்துக்குக் கொடுத்தது. தற்போதைக்கு இருக்கட்டும், டெம்ப்ரரி என்கிற வார்த்தை இருபத்தியிரண்டு வருடமாக அந்த அலுவலகத்தில் டைப் செய்யப் பட்டு வருகிறது.

அதிகாரிகள் மாறினார்கள். குற்றவாளிகள் புதிதானார்கள். கட்டடம் அப்படியே இருந்தது. ஆயிரத்து எண்ணூற்று எண்பத்து நாலு, பார்த்திப வருடம் என்று பதிக்கப்பட்ட சலவைக்கல் பழுப்பேறியிருந்தது.

**''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு.''**

பையன்கள் கைகூப்பிப் பத்து திருக்குறள் சொன்னார்கள். கலைந்து கட்டடத்துக்குள்ளே போனார்கள்.

''நாலு பேர் தண்ணி ஊத்தப் போங்க. நாலு பேர் சூப்பிரண்ட் வூட்டுக்குப் போங்க, நாலுபேர் பெருக்கற முறைக்குப் போங்க. மிச்ச ஆளு குளிக்கப் போங்க.'' அந்தப் பெரிய பையன் கத்தினான்.

''யப்பா...கிணத்துல தண்ணியில்லே. மோட்டார் போடச் சொல்லு.'' குளிக்கப் போனவன் எட்டிப் பார்த்து கூவினான்.

பெரிய பையன் தயங்கினான்.

மோட்டார் சுவிட்ச் சூப்பரின்டென்டென்ட் வீட்டில் இருந்தது. சூப்பரின்டென்டென்ட் வீடு கட்டடத்துக்கு இடது பக்கம் ஒரு பத்திரிகை ஆபீஸ் முடிகிற இடத்தில் தனியே கேட் போட்டு பின் வாசல் சிறைச்சாலைக்கும், முன் வாசல உமா டாக்கீஸ் பக்கமாய் வரும் பாதைக்கு மாய் தனித்து நின்றது.

அதிகாரி மனைவி நேற்று மோட்டார் போட்டதுக்கு பேயாய் கத்தினாள். ''எங்க வூட்டுக்குன்னுதான் மோட்டார் போட்டுருக்கு. துடைப்பக் கட்டைங்களா...தினம் போட்டு அத பாழ் பண்ணிட்டா ரிப்பேர் பண்றது யாரு ...போங்கடா வெளியே'' என்று கூவினாள்.

சில சமயம் ''மோட்டாரா, போட்டுக்க?'' என்று சொல்லுவாள்.

பையன்கள் நேற்று கிணற்றில் ஊறியிருந்த அடித் தண்ணீரில் குளித்துவிட்டு, வெகு நேரம் உடம்பு சொறிந்து கொண்டிருந்தார்கள்.

''மோட்டார் போட்டா கத்தறாங்கடா. இருக்கற தண்ணில குளிங்க.''

''தண்ணி சுத்தமா இல்லை. இரண்டு பக்கெட் கூட தேறாது. கக்கூஸுக்கே தொட்டித் தண்ணிதான் எடுத்துக்கிட்டு போணும். தொட்டியும் காலியாயிருச்சு''

''ஐயா உட்டு குறுக்க கனெக்ஷன் கொடுக்கச் சொல்லு.'' ஒரு பையன் கத்தினான்.

''ஐயரு அதிகாரி வீட்டு முறைக்குப் போயிட் டானே...''

''வேணாம். நிறுத்து.''

''அங்க நாலு ஆள் போணம்டா.''

''புதுப் பையனை அனுப்பி ஐயரை மடக்கிடு.''

''ஐடியா...டேய் இங்க வா.''

அவன் வயிறு பிடித்து தவித்துக் கொண்டிருந்தான். அடி வயிறு முறுக்கிப் பிழிந்து அவஸ்தைப்படுத்தியது.

''உன் பேர் என்ன?''

''ஆறுமுகம்.''

''உனக்கு அதிகாரி வீட்ல வேலை; டேய் இவனைக் கூட்டிக்கிட்டு போங்கடா. ஐயரைத் திருப்பி வுட்டுறுங்க.''

கதவு திறந்து உள்ளே வீடு பார்த்து கத்தினான். படுக்கை அறை ஜன்னலுக்கு வெளியே சூப்பிரண்டென் டென்ட் புகைத்து வீசிய பாதி சிகரெட்டுகளைப் பொறுக்கி பழைய சிகரெட் டப்பாவில் பத்திரப்படுத்திய வர்கள் நிமிர்ந்தார்கள்.

''அண்ணே இன்னிக்குக் கூடவே சரக்குத் தேறுது.''

''சாமி, நீ வந்துரு. புதுப் பையனை அனுப்பறேன். மோட்டார் போடணும்.''

''வேணாம்பா. மாட்டிக்கினா அந்தப் பொம்பளை கரண்டியால தலையிலேயே அடிக்கும்.''

''வாடா.''

''முடியாது.''

''போன வாரம் மாதிரி உதைபடுவ...''

போன வாரம் சாமிநாதன் நாற்பத்தி நாலு குட்டு வாங்கினான். போன வாரமும் ஒரு முறை குளியல்

தப்பிப் போக, சாமிநாதன் மோட்டார் குறுக்குக் கனெக்ஷன் கொடுக்க மறுக்க, தூங்கப் போகும் போது ஆளுக்கொரு குட்டு வைத்தார்கள். கண் இருட்டிக் கொண்டு வந்து விட்டது இரண்டு நாட்கள் கனத்து வலித்தது.

''இந்தத் தடவை ஆளுக்கு இரண்டு குட்டு குட்டுவோம்.''

சாமிநாதன் வெறுப்போடு சிகரெட் பாக்கெட்டைத் தரையில் அடித்தான். கதவு தாண்டி சிறைப்பள்ளிக்குள் வந்தான்.

மோட்டார் பம்பு பள்ளிக்குள் இருந்தது. சுவிட்ச் அதிகாரி வீட்டில் இருந்தது. மோட்டாருக்கு அருகே கம்பியை அறுத்து இரண்டு ஈரச் சணலைக் கவனமாக இடைவெளியுடன் அருகே உள்ளே ப்ளக்கில் சொருகி, பிளாஸ்டிக் டம்ளரில் தண்ணீர் எடுத்து அவ்வப்போது சணலைக் கவனமாய் ஈரப்படுத்த, அரைமணி நேரம் மோட்டார் ஓடும். நடுவே பைப் ஜாயின்ட்டில் ஓட்டை போட்டிருந்தார்கள்.

துணி வைத்து அடைத்திருந்தார்கள். துணி இழுக்க மோட்டார் பம்பு ஜலம் பீறிட்டுக் கிளம்பும். நாலு நாலு பேராய் சுற்றி உட்கார்ந்து குளித்து விட்டுப் போய்விட வேண்டும்.

ஆனால் கண் கொத்திப் பாம்பாய் இந்தக் காரியம் செய்ய வேண்டும். நெட்டுக் குத்தலாய் ப்ளக்குக்குப் போகும் சணல் கயிறைச் சொட்டுச் சொட்டாய் நீர் விட்டு ஈரப்படுத்த வேண்டும். இரண்டு ஈரச் சணல்களும் அருகருகே போனால் ஷாக் ஆகிவிடும் என்பதால் பின் வராண்டாவில் நெகடிவ் எதிர்பக்கமும், பாஸிடிவ்வை மோட்டார் சுவர் பக்கமும் எடுத்துப் போய் நெருப்புக் குச்சிகள் வைத்து கயிறை அழுத்தி சாமிநாதன் பிளாஸ்டிக் டம்ளரில் நீர் எடுத்து ஈரப்படுத்துவான். ஈரம் முழுமையாக மோட்டார் ஓடும். மோட்டார் ஓட, துணிக்

கந்தையைப் பிய்த்து விடுவார்கள். உலர உலர சாமி நாதன் சொட்டுச் சொட்டாய் சணல் கயிறில் தண்ணீர் ஊற்றுவான்.

அதுதான் வித்தை. சடசடவென்று தண்ணீர் விட சாமிநாதனுக்கே ஷாக் அடிக்கும். சில சமயம் ஃப்யூஸ் போகும். ஒரு முறை ஃப்யூஸ் போனபோது சகலமும் வாரி எறிந்துவிட்டு, என்ன காரணம் தெரியலையே. என்று கை விரித்துவிட்டு சாமிநாதனே கட்டை ஒயராய் ஃப்யூஸ் போட்டு வைத்தான்.

அதற்குப் பிறகு நாலு முறை இப்படித் திருட்டு கனெக்ஷன் கொடுத்தாகி விட்டது.

அடுப்பு எரிக்க உபயோகப்படும் இரண்டு உருளைக் கட்டையைக் காலுக்குக் கீழே போட்டுக் கொண்டு இடது சுவருக்கும், வலது சுவருக்கும், ஈரச் சணல் எடுத்துப் போனான். நெகடிவை முதலில் கொடுத்து விட்டு பாஸிடிவுக்கு துடப்பக்குச்சி முனையில் கொண்டு போய்ச் சொருகினான்.

மோட்டார் சீறிக் கொண்டு ஓடத் துவங்கியது. பையன்கள் மல்லிகைப் புதர் பக்கம் உள்ள குழாய்த் துணியைப் பிடுங்கினார்கள்.

தண்ணீர் அரை ஆள் உயரத்துக்குப் பீச்சியடித்தது.

சாமிநாதன் உருளைக்கட்டையில் நின்றபடி சொட்டுச் சொட்டாய் சணல் கயிறுக்கு நீர் வார்த்தான்.

பையன்கள் பீச்சியடிக்கும் தண்ணீரில் சட்டையைக் கழட்டியபடி சுற்றி உட்கார்ந்துகொண்டார்கள். பெரிய கல்லைப் புரட்டி வந்து அங்கேயே சட்டையைக் கழற்றி குமுக்கினார்கள். ஒரே ஒரு சோப்புக் கட்டியை எல்லோரும் பகிர்ந்து கொண்டார்கள்.

**சி**றுவர் குற்றப் பள்ளி சூப்பரின்டென்டெண்ட் மாணிக்கவேலர் மனைவியை விட்டுப் பிரிந்து மல்லாந்துப் படுத்துக் கொண்டார்.

அவர் மனைவிக்குக் காலை வேளைகளில் இப்படி

புருஷனைக் கட்டிக்கொண்டு படுப்பது மிகவும் பிடித்த மான விஷயம். மாணிக்கவேலருக்கு அறவே பிடிக்காத விஷயம்.

மெல்லப் பிரிய, ''என்னைக் கண்டா பிடிக்கலையா'' என்று சீறுவாள். ''இது கூடவா முடியலை...ஆள் உசரத்தைப் பார்த்து, உடம்பைப் பார்த்து ஏமாந்துட் டேன்.'' என்று ஏளனம் பேசுவாள்...எல்லாவற்றையும் விட பெரிய கொடுமை, ''நாலு பசங்களை அனுப்புங்க... வேலைக்குத்தான்...என்னா பல்லு கடிக்கிறீங்க...வயசுப் பசங்களோட பொண்டாட்டி ஓடிடப் போறாளோன்னு பயமா இருக்கா...இந்த வயசுக்கு எவன் வருவான். பயப்படாம அனுப்புங்க'' என்று கேட்பதுதான். பதினெட்டு வருட குடித்தனத்துக்குப் பிறகும் மாணிக்க வேலருக்கு மனைவியின் உள்மனசு புரியவே இல்லை.

''என்ன புரண்டுட்டீங்க...பசங்க குரல் கொடுத்தப் புறம் போனாப் போறாதா...''

''ஒரு போன் எதிர்பார்க்கிறேன்.''

''யாரு...''

''மாத்தல் கேட்டிருந்தேன். நேத்து அது பத்தி பேசறதா சொன்னாங்க. என்ன முடிவுன்னு இன்னிக்குத் தெரியும்.''

''எங்கினா நல்ல இடமா போடச் சொல்றதுதான...''

''மதுவிலக்கு போட்டா நல்ல இடம். நாம கேட்டா போட்டுருவாங்களா...க்ரைமாவது கிடைக்கணும்.''

''ஊரு மாத்திடுவானா?''

''மெட்ராஸு பேஜார் புடிச்ச இடம். பந்தோ பஸ்துலியே பாதி உயிர் போயிடும்.''

''செங்கல்பட்டு, வட ஆர்க்காடு போட்டா நல்லா இருக்கும். புள்ளைங்களோட இருக்கலாம்.''

போன் மணி அடித்தது.

''மாணிக்கவேலன், ஐயா, வணக்கம். உங்க போனைத்தாங்க எதிர்பார்த்துட்டிருந்தேன். ரா முழுக்க

தூங்கலீங்க...ரொம்ப சந்தோஷமுங்க, மதுவிலக்கு எதிர் பார்த்தேன். இதுவும் பரவாயில்லீங்க. எப்ப உத்தரவு வரும். ரொம்ப நன்றிங்க, நேர்ல வரேன் ஐயா, பிற்பகல் வீட்ல பார்க்கட்டுங்களா? சரிங்க, வச்சுரட்டுங்களா?''

போனை வைத்து விட்டு 'ஹுரேய்' என்று கூவினார். மனைவியை அள்ளிக் கொண்டார்.

''என்னங்க...மாத்தலா?''

''ப்ரமோஷன்டீ...ப்ரமோஷனோட மாத்தல். செங்கல்பட்டு க்ரைம் பிராஞ்ச். தனிக் காட்டு ராஜா மாதிரி இருக்கலாம். ரெண்டு கோழி அடி. நாலு பேர் சாப்பிடற மாதிரி...நல்லா இருக்கணும். பெரியவரைப் போய் பார்த்துட்டு வரணும்..'

''நானுமா?''

''நீயும்தான். வந்து பெரிய மனுஷங்க ஊடு பார்த்துக்க நம்ம வீட்டையும் அப்படி வைச்சுக்கணும். பெரிய பங்களா கொடுப்பாங்க. ஆறேழு ரூம் இருக்கும். அந்தம்மா எப்படி பேசறாங்க பழகறாங்கன்னு கத்துக்க...''

''இங்க யாரு வராங்க? நாம எப்ப கிளம்பணும்?''

''தெரியலை. ரிலீவர் வந்ததும் கிளம்புன்னாரு. யாரு ரிலீவர்...வருவானா... மாட்டானா... போய்தான் தெரிஞ்சுக்கணும். எந்திரி...எதுக்கும் இப்பவே போய் ரிலீவிங்க்கு ஏற்பாடு பண்ணிடணும். நாம தயாரா இருக்கணும்.''

பல் தேய்த்து வெள்ளைச் சட்டையும், காக்கி பேண்ட்டும் போட்டுக் கொண்டார். சாக்ஸ் அணியாது ஷூ மாட்டிக் கொண்டார். மனைவி கொடுத்த காபியைக் குடித்தார். தோட்டக் கதவு திறந்து சிறையின் பின்பக்க வழியே நடந்து வராண்டாவுக்குள் ஏறினார்.

மோட்டார் பம்பு சத்தம் கேட்டது. சுவிட்ச் போட யாரும் வந்ததாகத் தெரியவில்லையே...ஒரு வேளை நேற்றுப் போட்டது இன்னும் ஓடுகிறதோ...ரிலீவர் வரும் போது இது உருப்படியாக இருக்கவேண்டுமே...பிளைவுட் கதவு திறக்க, உருட்டுக் கட்டையில் நின்றிருந்த சாமிநாதன் நிதானமாய் திரும்பிப் பார்த்தான்.

அவரைக் கண்டதும் தடுமாறினான்.

''என்னடா பண்ற இங்க?''

பயத்தில் அவன் திரும்ப, உருளைக்கட்டை வழுக் கியது. பிளாஸ்டிக் டம்ளர் தண்ணீர் சிதறியது. இரண்டு சணல் கயிறுகளும் அருகருகே போகும் இடத்தில் சிந்தி யது. சிந்தி நேர்க்கோடாய் வழிந்தது.

வினாடி நேரத்தில் மின்சாரம் பாய்ந்து அவனைத் தூக்கிப் போட்டது.

'படேர் படேர்' என்று மோட்டார் நீலமாய் துடித் தது. கனத்த ப்யூஸ் ஒயர் அறுபடாது போகவே உள்ளே உள்ள வைண்டிங் கம்பிகள் முறுக்கிச் சூடாயின. புகைந் தன. இன்ஸுலேஷன் கட்டு விட்டுப் பிரிய அவருக்குப் புரிந்து போயிற்று.

உருட்டைக் கட்டை எடுத்து கயிற்றுச் சணல் மீது தாக்க, சட்டென்று மின்சாரம் அறுந்து தடைபட்டது.

''டேய்...?'' அவர் குரல் சிறைச்சாலையை உலுக் கிற்று.

## 3

அந்தப் பையன் சட்டையைக் கொத்தாய் பிடித்து வந்து தோட்டத்தில் போட்டார். புரட்டி மூச்சு பார்த்

தார். மூச்சு வந்தது. பயமில்லை. அதிர்ச்சிதான். ஒரு அடி கொடுத்து தூக்கிப் போட்டுவிட்டது. நல்ல வேளை தள்ளி விழுந்தான்.

'முட்டாள், செத்து தொலைத்திருந்தால் மாற்றலுக் கப்புறமும் இந்த வேதனைக்குப் பதில் சொல்ல வேண்டி இருந்திருக்கும். அல்லது இதை முடித்து விட்டு மாற்ற லாகிப் போ என்று உத்தரவு கேட்க வேண்டியிருந்திருக் கும். நல்ல வேளை...'

''ஆனால் எதற்கு இப்படி மோட்டார் பம்பு திருட்டுத் தனமாய் ஓட்ட வேண்டும்? யார் வேலையிது?''

நிமிர, ஈரத் தலையுடன் நாலு பையன்கள் பம்மிப் போவது தெரிந்தது. மல்லிகைப் புதருக்குப் பின்னே அசைவுகள் இருந்தன.

''நில்லுங்கடா.'' பாய்ந்து முதல்பையன் தலையைக் கொத்தாய் பிடித்து பையனை நகர்த்திக் கொண்டே மல்லிகைப் புதருக்கு நகர, சுவரோரம் இருந்த செடிகளி லிருந்து நிறைய பையன்கள் எழுந்திருந்தார்கள்.

''குளிக்கிறீங்களா? குளிக்கறதுக்கா இப்படி மோட் டார் போட்டீங்க?''

''ஆமா சார்.''

''ஏண்டா, சுவிட்சு என்ன ஆச்சு?''

''அம்மா போடக்கூடாதுன்றாங்க. மோட்டார் கெட்டுமாம்.''

''அதுக்கோசரம்...''

''ரெண்டு நாள் குளிக்கலை சார். சாமிநாதன் நான் போடறேன்னு...''

''அறிவுகெட்ட முண்டம். என்ன திமிரு இருந்தா...'' அவர் தன் மனைவியைச் சொன்னாரா பையன்களைச்

சொன்னாரா என்று அவருக்கே புரியவில்லை. "இதை என் கிட்ட வந்து சொல்லக்கூடாதா...நான் போட்டு விட்டிருப்பேனில்ல."

விட்டிருக்க முடியாது...அவள் கத்துவாள். "சுவிட்சு போடறேன். அணைக்கிறேன்னு எவனாவது நேரங் கெட்ட நேரத்துல வருவானுங்க...சரி, போ...சுவிட்சு போட வேண்டாம்" என்று முடிவாயிருக்கும்.

அவர் இயலாமை அவருக்குள் கோபம் எழுப்ப, 'பளீர் பளீர்' என்று குளித்துக் கொண்டிருந்த பையன்களை அடித்தார். ஒருவன் தலைமயிரை இழுத்து குனிய வைத்து முதுகில் அறைந்தார். கை வலித்தது.

"ஃபைல்" என்று கத்தினார்.

பையன்கள் நாலா திக்கிலிருந்தும் ஓடி வந்தார்கள்.

வரிசையானார்கள்.

பெரிய பையன் தயங்கி முன்னால் நின்றான்.

"பெரிய லீடரு இவன்..." பாய்ந்து அவன் உதட்டில் குத்தினார். அவன் வாயைப் பொத்திக் கொண்டு தரையில் உட்கார்ந்தான்.

"போடா...போய் பிரம்பு எடுத்தா" எட்டி உதைத்தார்.

மண்ணில் சரிந்து உருண்டு அவன் எழுந்து உள்ளே ஓடினான். நீண்ட பிரம்போடு வெளியே வந்தான். அவரிடம் மரியாதையாய் நீட்டினான்.

"போ...போய் நில்லு." முதல் அடி அவனுக்குத் தொடையில் விழுந்தது. அடி விழுந்த இடம் தீயாய் எரிந்தது.

''பொறுக்கி நாய்களா...இப்ப மோட்டார் கெட்டுப் போச்சே...எவன் ரிப்பேர் பண்றது. அந்தப் பன்னாடை விழுந்து செத்திருந்தா யார் பொறுப்பு. குளிக்க தண்ணி யில்லன்னா எங்கிட்ட ரிப்போர்ட் பண்ண வேண்டியது த்ானே...''

''ஐயா, சொன்னேங்க போன வாரம்''

''மயிரச் சொன்ன...'' பெரிய பையனிடம் பாய்ந்து வலது இடதாய் அடித்தார்.

''லைன் அப்'' சுவர் பார்த்து நின்று கொண்டார்.

கட்டடத்துப் பின் பக்கம் செவ்வகத் தூண்கள் ஆறு இருந்தன. அவருக்கு அருகே உள்ள தூணுக்கு முதல் பையன் வந்து நின்றான். சுவரோடு நெஞ்சு சாய்த்து அவருக்கு முதுகு காட்டினான். இரண்டு எட்டு நடந்து சுளீரென்று பிரம்பால் முதுகில் அடித்தார்.

அடிபட்டவன் வலியில் துடித்தான். அவன் முதுகில் மெல்லிய சிகப்புக் கோடு படரத் துவங்கியது.

பெரிய பையன் உட்பட நாற்பத்தியேழு பிரம்படிகள் விழுந்தன. சாமிநாதனை எழுப்பி நிற்க வைத்து அவ னுக்கு அடி விழுந்தது.

நேற்று ஒரு பையன் சேர்ந்திருக்கிறான். அவருக்கு மறந்து விட்டது.

பெரிய பையன் சொல்ல வாய் எடுத்தபோது சாமி நாதன் வேண்டமென்று கையசைத்து விட்டான்.

''நல்ல நாள் அதுமா மூடையே கலைச்சுட்டிங்க. போங்கடா. போய் வேலையப் பாருங்க.

''டேய் பெரிய பையா.'' ஓடி வந்தான். ''மோட்டார் என்னாச்சு பாருடா.''

இருவரும் மோட்டார் பம்பின் மேல் மூடி கழற்றி உட்கார்ந்து சோதித்த போது பின்னே சாமிநாதன் வந்து நின்றான்.

''முண்டம்...முண்டம், மாத்தலாகிப் போறப்ப இந்த மாதிரி பேரைக் கெடுத்துட்டியே. எவண்டா...ரிப்பேர் பண்றது இதை. இதோ முடிச்சுடறேன்னுவான் பத்து நாள் ஆவும்.''

''நாமே பண்ணிடலாம் சார்'' சாமிநாதன் மெல்லப் பேசினான்.

''சாமிநாதனுக்கு எலக்டிரிக் வேலை தெரியும் சார்...'

''அதான் தெரிஞ்ச லட்சணத்தையும் பார்த்தேனே... சணல் கயிறுல தண்ணி ஊத்திக்கினு.''

''இல்ல சார், இவன் எலெக்ட்ரிக் வேலை செய்துக் கினு இருந்தவன்தான். முதலாளிய சேர்ல உட்கார வச்சு கனெக்ஷன் குடுத்து சாவடிச்சதாலதான் இங்க கொண் டாந்து போட்டுருக்காங்க.''

சாமிநாதனுக்கு முகம் இருண்டது.

''என்னடா செய்துடலாமா?''

''செய்துடலாம் சார்.''

''என்ன துட்டு ஆவும்னு பார்த்துச் சொல்லு. கை காசு போட்டு செய்துட்டு பின்னாடி கவர்மெண்ட்ல வாங்கிக்கலாம்,''

''ப்ரைமரி காயில் ஒரு பண்டில் போயிருக்கும் சார். இன்சுலேஷன் மறுபடி போடணும். கழட்டி சாயந்திரம் மாட்டிரலாம். பழைய மோட்டார் எதுனா இருந்தா அதுலேர்ந்து கூட காப்பர் ஒயர் பிரிச்சுக்கலாம்.''

''ஓட வச்சுடுவியா?''

''முடியும் சார்.''

''முதல்ல தரை ஈரத்தை துணிபோட்டு துடை கூட இரண்டு பசங்களை ஒத்தாசைக்கு வச்சுக்க.''

''வாடா பெரிய பையா... குசினி பக்கம் யார் போட்டுருக்க?''

''வழக்கமான பசங்கதான் சார்.'' நடந்தார்கள்.

வாசலில் வள்ளி காவல் காத்து நின்ற போலீஸ் காரனிடம் அவன் பெயர் சொல்லி விசாரித்தாள்.

''பத்து மணிக்கு வா. ஆபீஸ் தொறந்ததும் அதிகாரி வருவாரு. அப்ப மனு கொடுத்தா அஞ்சு நிமிஷம் பார்க்க வுடுவாங்க.''

''நிறைய பசங்க இருக்காங்க போல.'' கிழவள் உள்ளே நடமாட்டம் பார்த்துவிட்டுப் பேசினான்.

''இருக்கு, ஏன் கேட்கற...''

''இல்ல...சும்மா கேட்டேன்.''

''போ. வாசல்ல நிக்காத, அப்பால போ.''

''வா...போய் டீத்தண்ணி குடிச்சுட்டு வரலாம்.''

கிழவன் அழைக்க, வள்ளி அவன் கூடவே நடந்தாள். எதிர்ப் பக்கம் போய் கிழவனும் வள்ளியும் ஒரு டீக்கடை வாசலில் நின்றார்கள்.

அங்கேயிருந்து சிறைப்பள்ளியின் வாசல் தெளிவாய் தெரிந்தது. வள்ளி பன்னைப் பிய்த்து டீயில் தோய்த்து முதல் விள்ளலை விழுங்க, அங்கே வாசலில் ஒரு பியட் கார் வந்து நின்றது.

காவல்காரன் கார் கதவைத் திறந்து வணக்கம் சொல்வது தெரிந்தது. வண்டி ஓட்டுகிற இடத்திலிருந்து ஒரு வழுக்கைத் தலைப் பெரியவர் இறங்கினார்.

காவல்காரன் மணி காட்டுவது தெரிந்தது. ஏதோ பேசி விட்டு டீக்கடை நோக்கி ''நாலு டீ'' என்று குரல் கொடுத்தான்.

''இன்னிக்கும் கார் வந்துருச்சுப்பா நாலு டீ போடு.'' டீக்கடையில் பேசிக் கொண்டார்கள்.

''நாள் தவறாத போலீஸ்காரன் ஒரு டீ குடிக் கிறான்.''

''டீ மட்டும்தானா மிச்சம். தினம் அஞ்சு ரூபா அழுத்தறாரு, வாசல் ஆளுக்கு மட்டுமே, உள்ள எத்தினி தராரோ.''

''பாசம்...''

''என்னாத்த பாசம். தலை முழுகிட்டுப் போறத வுட்டுட்டு... பெத்தவங்களுக்கு இல்லாத அக்கறை இவனுக்கு என்ன...''

''பொண்ணுக்கோசரம் வரான்.''

''என்னாங்க அது...'' கிழவன் இடைமறித்துக் கேட்டான்.

''எது?''

''ஏதோ பேசிக்கினு இருக்கீங்களே...''

''ஏன். உனக்கு என்ன அதுபத்தி.''

''இல்லீங்க. நாங்களும் ஆளு பார்க்க வந்துருக்கம்... இப்ப வராத போன்னுட்டாங்க.''

''அப்படியா, யாரு அது...''

''நேத்து கொண்ணாந்து வுட்டாங்களாமே...''

''கொலை கேசா?''

''ஆமா...?''

''இது யாரு பொண்ணு?''

''என் பொண்ணுங்க.''

''அண்ணங்காரனைப் பார்க்க வந்திருக்கா?''

''அண்ணன் இல்லீங்க. முறைப் பையன்தான்... இதுக்கோசரம்தான் பெத்த அப்பா அம்மாவையே வெட்டிட்டான்.''

''அடடே, அப்பால...''

''த்த சும்மா இரு. கதை சொல்லிக்கினு திரியறியே... ஊர் முழுக்க.''

வள்ளி அதட்டினாள்.

''ஏன்...கதை சொன்னா என்னா ஆயிடப் போவுது... உள்ள இருக்கிற அத்தினி கதையும் இங்க வராத போவாது எதுக்கு வந்த...நீ, உங்க முறைப் பையனைப் பார்க்கத்தானே...எப்படி பார்க்கறது, என்ன விஷயம்... எதுனா தெரியுமா உனக்கு, ரொம்பதான் சிலுத்துக் கறியே...டேய், நீ உன் வேலையைக் கவனிடா.''

''கோச்சுக்காதீங்க... இது அப்படித்தான் முசுட்டுத் தனமா பேசும்'' கிழவன் மன்னிப்புக் கேட்டான்.

''இதோ நிக்குதே காரு, தினம் இந்த நேரத்துக்கு வரும். உள்ளேயிருந்து ஒரு பையனைப் போலீஸ்காரன் இங்கனதான் கூட்டிக்கினு வருவாரு, கார்லேருந்து ஒரு வயசுப் பொண்ணு வரும். இங்கன உட்கார்ந்து பத்து நிமிஷம் பேசுவாங்க. வீட்டுலேர்ந்து சாப்பாடு கொண் டாந்து பொட்டலமா கொடுப்பாங்க.''

''வெறும் டீக்கடைன்னு நினைச்சியா...கார்ல வந் திருக்காரே பெரியவரு, அவரு நூறு ரூபாய் கொடுத்து வச்சுக்கன்னாரு... வேணாம் சார், உனக்கே துக்கம். துட்டு எல்லாம் எதுக்குத் தர... வேண்டாம்னுட்டேன்.

அதுலேர்ந்து தினம் நாலு டீ வாசல்ல நிக்கற சென்ட்ரிக்கும் சேர்த்து சொல்லுவாரு. பெரிய பணக்காரன். குடும்பமே நம்ம டீக்கடைல டீ சாப்பிடறது நமக்கு கௌரவமா...பிச்சைக்காசு நூறு ரூபா வாங்கறது கௌரவமா.''

''என்ன பண்ணிச்சாம் அந்தப் புள்ளை?''

''உனக்கு கேட்கத் தோணுதல்ல...அதுமாதிரிதான மத்தவங்களுக்கும் தோணும். சொன்னா என்ன குறைஞ்சு போயிடும், பையன் வரான், யோவ் பெரியவரே...எதிர மாறி உட்காரும்.''

கிழவன் அவசரமாக மாறி உட்கார, ஒரு போலீஸ்காரர் சொந்த உடையில் ஒரு பையனை அழைத்து வர, அந்தப் பதினேழு வயசுப் பையன் டீக்கடைக்குள் அவசரமாய் புகுந்து கடைசி பெஞ்சில் உட்கார்ந்துகொண்டான்.

காரிலிருந்து குடும்பம் இறங்கியது. ஒரு பதினாறு வயசுப் பெண்ணுடன் ஒரு பெரியவரும், ஒரு நடுத்தர வயது பெண்மணியும் கீழிறங்கினார்கள்.

நாலுபேர் உட்காரும்படி போட்டிருந்த டீக்கடை டேபிள் சேரில் அடைத்து கொண்டார்கள்.

முழுக்க முழுக்க ஆங்கிலத்தில் பேசினார்கள். அழுதார்கள். அந்தப் பையன் எழுந்து சட்டை கழற்றி காட்டினான். முதுகில் பிரம்புக்கோடு தெரிந்தது. சட்டையைத் தளரவிட்டு அழுதான்.

அந்தப் பெண் அவன் தலையைக் கோதினாள். அப்பாவிடம் ஏதோ சொன்னாள்.

அப்பா எழுந்து நாலுகடை தள்ளி இருக்கிற மருந்துக் கடையிலிருந்து மருந்து ட்யூப் வாங்கி வந்தார்.

அந்தப் பையன் அதை வீசியடித்தான்.

''இது தேவையில்லை. என்னைக் கூட்டிட்டு போங்க நான் இங்க இருக்க மாட்டேன்.''

''கொஞ்சம் பொறுத்துக்கப்பா. ஒரு வருஷம்...ஒரே ஒரு வருஷம்...எல்லாம் சரியாயிடும். மறுபடி முரட்டுத்தனம் காட்டி தப்பு பண்ணா, வாழ்க்கை முழுக்க பாழாயிடும். உன் வாழ்க்கை மட்டுமில்லை, எங்க எல்லார் வாழ்க்கையும் பாழ்தான், போ. சமத்தா இரு. நான் பேசறேன் சூப்பரின்டெண்டென்ட்கிட்ட.''

''எல்லா பசங்களும் மட்ட கேஸ். லோக்கல் ரௌடிங்க.''

''டேய்...'' கூட வந்த போலீஸ்காரன் அதட்டினான்...'' எல்லாரும் தப்பு பண்ணிட்டு உள்ள வந்திருக்கீங்க...இதுல மட்டம் என்ன, உசத்தி என்னடா... கொலை பண்ணிட்டு...அதும் ஒரு சப்இன்ஸ்பெக்டரைக் குத்தி கொன்னுட்டு...வாய் வேற.''

''ப்ளீஸ் ப்ரதர், அடிக்க வேணாம்னு சொல்லுங்க பெரியவர்கிட்ட.''

''எல்லாருமா சேர்ந்து மோட்டார் பம்பு உடைச்சுட்டானுங்க. அந்த வெறுப்புல எல்லாரையும் வாங்கிட்டாரு. நீங்க தனியா அவரை வீட்லப் பார்த்துப் பேசிடுங்க.''

''அவர் வீட்டம்மாவப் பார்த்தோம் போன வாரம். அவருக்கு நாங்க வந்தது தெரியுமா...''

''எனக்குத் தெரியாதுங்க. வாடா தம்பி...எதுனா வாங்கிக்கினு வா...'' கடை பையன் அந்தப் பெண்ணிடமிருந்து பத்து ரூபாய் வாங்கிக் கொண்டு வெளியேறினான்.

''பாபு...இந்தா...'' நீள பிஸ்கெட் பொட்டலம் கொடுக்க, இடது கையால் வாங்கிக் கொண்டான்.

அவர்கள் கடந்து கட்டடத்துக்குள் நுழைவதற்குள் பத்து ரூபாய் கை மாறியது தெரிந்தது.

''என்னம்மா...போலாமா...'' குனிந்து டேபிளில் கவிழ்ந்து இருக்கும் பெண் முதுகைப் பெரியவர் தடவினார்.

பெண் சரக்கென்று எழுந்து காருக்குச் சென்று உட்கார்ந்து கொண்டது. அறைந்து கதவு சாத்தியது.

''நூறு ரூபாய்க்கு சேஞ்ச் இருக்கா'' பெரியவர் கேட்டார்.

''இல்லீங்க...நாளைக்கு கொடுங்க...'' டீக்கடைக்காரன் எழுந்து பதில் சொல்ல, மனைவியுடன் நன்றி சொல்லிவிட்டுக் காருக்குப் போனார்.

கார் கிளம்பியது.

''மெட்ராஸ்ல ஆறு வீடு இருக்கு. அந்தப் பையன் பேர்லியே...பெரும் பணக்காரன். பள்ளிக்கூடத்துக்கு மோட்டார் பைக்லதான் வருவானாம்.

''இந்தப் பொண்ணு எதிர் வீடாம். ஒன்னா சாப்பிட்டு ஒன்னா பழகி.ஒன்னா ஒரே வண்டில பள்ளிக்கூடம் போவாங்களாம்.''

''யாரோ போலீஸ்காரன் மடக்கி என்னடா, தினம் இந்தக் குட்டிய எங்க தள்ளிக்கிட்டுப் போறேன்னு கேட்டிருக்கான். இந்தக் பையன் ஏதோ இங்கிலீஷ்ல கெட்ட வார்த்தை சொல்லித் திட்டியிருக்கான். போலீஸ்காரன் கை ஓங்கியிருக்கான். இவன் தட்டிவுட்டிருக்கான். உடனே வண்டியக் கிளப்பிக்கினு ஓடிட்டாப்பல. பின்னாடியே ஒரு சப்இன்ஸ்பெக்டர் ஜீப்புல தொரத்தினாப் பல மடக்கிப் புடிச்சுட்டாங்க. சாக்ஸ்லேர்ந்து கத்தி உருவிக் காட்டிருக்கான்...கலாட்டாவாயிடுச்சு. இந்தப் பையன்

சரக்குன்னு...அவரு தொண்டைல குத்திட்டான்...அங்கியே செத்துட்டாரு.''

''ஆன மட்டும் பணம் கொட்டினாங்க. பட்டப்பகல்ல ஒரு கொலையைப் பண்ணிட்டு தப்பிக்க முடியுமா... உள்ள தள்ளிட்டாங்க...''

''ஆமா...இந்தப் பொண்ணு ஏன் வருது...''

''நம்மாலதான் இந்தப் பையனுக்கு இந்த கதின்னு ஒரு வேதனை...''

''அட...அது இல்லப்பா. இது லவ்வு. பெரியவங்களும் கல்யாணத்துக்கு சம்மதிச்சு பழக வுட்டுட்டாங்க, பெரியவங்க சம்மதத்தோட லவ்வா...விட முடியலை...''

'' பாவம்'' கிழவன் வாய்விட்டுப் பரிதாபப்பட்டான்.

''பெரியவரே, மணி ஒன்பதேமுக்கா ஆயிடுச்சு. போய் வாசல்ல நில்லு. கூப்புடுவாங்க. பெரிய அதிகாரி வெளிய போயிட்டா நாளைக்குத்தான் பார்க்க முடியும். போ...துட்டு கொடுத்துட்டுப் போய்யா ''

வள்ளியும் கிழவனும் எழுந்து எதிர்ப்பக்கம் போனார்கள். வள்ளி கண்முன்னே அந்த நீளப் பிரம்புத் தழும்பே நின்று கொண்டிருந்தது. கையில் மலர்கள் எடுத்து ஒரு பெண் சிலை பாதத்தில் தூவுவதாய் நினைத்துக் கொண்டாள். ''மூவருக்கும் முதற்பிறப்பு நின் முக்குணக்கடல்'' முதல் வரி மட்டும் அவளுக்கு நினைவில் இருந்தது.

# 4

''எனக்கு மெட்ராஸுக்கு மாற்றல் ஆயிருக்கு புஷ்பா.'' சரவணன் தன் வெள்ளைச் சட்டையை மெல்ல கழற்றினான்.

''அட...மெட்ராஸா... என்னவோ தண்ணியில்லாத காட்டுக்கு மாத்திடுவாங்கன்னு சொன்னீங்க.''

''இன்னி தேதிக்கு மெட்ராஸ் தண்ணியில்லாத காடு தான்.''

''ரேங்க் குறைச்சுட்டாங்களா?''

''இல்லை, அதே சூப்பரின்டெண்டென்ட் ராங்க் தான்''

''அப்புறம் எப்படி பனிஷ்மென்ட் கிடைக்கும்னு சொல்லிக்கிட்டிருந்தீங்க.''

''பனிஷ்மெஸ்ட்டுன்னு அவங்க நினைக்கறாங்க.''

''மெட்ராஸ் டிரான்ஸ்ஃபரையா.''

''சிறுவர் குற்றப் பள்ளிக்கு இன்சார்ஜா போட றதை.''

''சிறுவர் குற்றப் பள்ளியா, அப்படின்னா?''

''பதினெட்டு வயசுக்குக் குறைஞ்ச பசங்க தப்பு செய்தா, சட்டம் கடுமையா தண்டிக்காது. அதே சமயம் தண்டனை இல்லாமலும் செய்யக்கூடாது. கொலை, கொள்ளைன்னு பெரிய குத்தம் செய்த பசங்களை மனசு திருந்தணும்னு பள்ளிக்கூடம் மாதிரி...''

''ஜெயில் சூப்பரின்டெண்டென்டா?''

''ஜெயில் இல்ல புஷ்பா.''

''ஒதுக்கிட்டாங்க உங்களைன்னு சொல்லுங்க...''

''அப்படி நினைக்கறாங்க.''

''நான் அப்பவே சொன்னேன். மதுரைல உட்கார்ந்துக்கிட்டு ஏலக்காய் எஸ்டேட் ஆளுங்களைப் பகைச்சுக்காதீங்கன்னு சொன்னேன், கேட்டீங்களா?''

''ஏலக்காய் எஸ்டேட்டா? அந்த ராஸ்கல் கஞ்சா பயிர் பண்றான்,''

''ஏதோ செஞ்சு ஒழியட்டும்; ஊர் பெரிய மனுஷங்க அத்தினிப்பேரும் அவன் கைக்குள்ள. அவனைப் போய் வீட்டுக்குள்ள பூந்து அடிச்சீங்க, உலை வச்சுட்டான்.''

''மதுரைல காலேஜுக்கு காலேஜ் கஞ்சா விக்கறதுக்குக் காரணமே அவன்தான்''

''ஊரு மலந் திங்கப் போச்சுன்னா விக்கிறவனை அடிப்பீங்களா? நாலு காலேஜ் பசங்களை நடுரோட்ல தட்டியிருந்தீங்கன்னா தானா முடிஞ்சிருக்கும் கதை எங்கப்பா சொன்னது கரெக்ட்''

''என்ன?''

''நீங்க போலீஸ் உத்தியோகத்துக்கே லாயக்கில்லை. கைல நாலு காசு இல்லேன்னாலும் மதுரைல போலீஸ் அதிகாரி பொண்டாட்டின்னு ஒரு மதிப்பு இருந்துச்சு. இப்ப அதுவும் போச்சு.''

''லஞ்சம் வாங்கி நகை பூட்டிக்கணும்கற?''

''ஏன்? என்ன தப்பு?''

''புஷ்பா, நீ என்னை மாதிரி போலீஸ்காரனைக் கல்யாணம் பண்ணியிருக்கக்கூடாது.கஞ்சாப் பயிர் பண்றவனுக்கு...''

''கரெக்ட், வைப்பாட்டியா கூட இருந்திருக்கலாம், என் இஷ்டத்துக்கா இந்தக் கல்யாணம் நடந்துச்சு... டி. ஸி. யா இருக்காரு, டி.ஸி. யா இருக்காருன்னு உங்களுக்குக் கொண்டாந்து கட்டி வச்சுட்டாங்க.''

''இப்பக்கூட ஒண்ணும் தப்பாயிடலை. உன் இஷ்டப் பிரகாரம் போகலாம்.''

''போயிடுவேன் புள்ளை பெத்துட்டேனே.''

''உனக்கெல்லாம் புள்ளை ஒரு கேடா. புருஷன எதிர்க்கறியே. எவனுக்கோ வைப்பாட்டியா இருக்கலாம்னு பேசறவளுக்குக் குடித்தனம் ஒரு குறையா?''

''புருஷன் வக்கு இல்லை, புள்ளையாவது நிமிர்ந்து நான் சொன்ன பேச்சைக் கேட்காதா?''

''நாளைக் காலைல நான் மெட்ராஸ் கிளம்பறேன்.

''இடம் வசதியா இருந்தா என்னைக் கூட்டிட்டு போங்க இல்லைன்னா அப்பா வீட்லயே இருந்துக்கறேன்.''

''இதுக்குப் பேரு குடித்தனமா?''

''ஐயோ...போதுமே, நீங்க குடித்தனம் பண்ற லட்சணம்? இன்னிக்கு விடியும் நாளைக்கு விடியும்னு பன்னெண்டு வருஷமா குடித்தனம் பண்ணியாச்சு, போதாக் குறைக்கு இப்ப உங்களைப் போக்கத்த இடத்துல போட்டுருக்கு.''

''உன் இஷ்டம்.''

சரவணன் லுங்கியும் பனியனுமாய் கொல்லைப்புறம் போனார். ஆர்டர்லி கதிரவன் எழுந்து சல்யூட் அடித்தார்.

''என்ன கதிரவன், செடிகளுக்குத் தண்ணி ஊத்திட்டீங்களா?''

''ஆச்சு சார்... மாத்தலு...?''

''கன்ஃபர்ம்ட்.''

''இரண்டு கோடி கஞ்சாப் பயிர் அழிச்சதுக்குப் பரிசு கொடுக்கறாங்களா?''

''கஞ்சாப் பயிர் அழிப்பதா சொல்லி, மலை மீது உள்ள தாழ்த்தப்பட்ட மலைசாதி மக்களின் குடிசைகளை எரித்ததும், மலைசாதி பெண்களை நிர்வாணமாக்கி அடித்துத் துன்புறுத்தியதும், அவர்களின் வளர்ப்புப் பிராணிகளைச் சுட்டுக் கொன்றதும் நிரூபணமாகி தீர விசாரிக்கப்பட்டு குற்றம் என்று தெளிவாகி, கடும் எச்சரிப்புடன் எனக்கு மாற்றல் கிடைத்திருக்கிறது. கதிரவன்.''

''நாம எரிச்சது கஞ்சா கோடவுன். அடிச்சது துப்பாக்கி காட்டின அடியாளுகளை. சுட்டது நம்ம மேல ஏவி விட்ட அல்சேஷன் நாயை மருந்துக்குக் கூட பொம்பளை இல்லீங்களே ஐயா.''

''வாக்குமூலம் கொடுத்திருக்காங்க கதிரவன்''

''பொய் சாட்சியா?''

''அது பத்தி விசாரிச்சவருக்கு அக்கறையில்லை ''

''அம்மா ரொம்ப திட்டிக்கிட்டிருந்தாங்க காலை லேர்ந்து.''

''அவ கிடக்கா.''

''என்னிக்குப் போகணுங்க?''

''நாளைக்கு''

''ஐயா, நானும் உங்களோட ஆர்டர்லியா வந்துறட்டுமா மெட்ராஸுக்கு?''

''உங்க சொந்த ஊரு இது. இங்கனயே இருக்கறது விட்டுட்டு, ஏன் மெட்ராஸ்ல வந்து கஷ்டப்படறீங்க? '

''இன்னும் இரண்டு வருஷம் ஐயா, ரிடையராயிடுவேன். வேற அதிகாரி வந்து நாயே பேயேன்னு வசவு வாங்கறதுக்கு... ஆர்டர்லி உத்தியோகம் கஷ்டம்ங்க.''

''தெரியாத பூதத்துக்குத் தெரிஞ்ச பேயே பரவா யில்லைன்னு சொல்றீரா?''

''ஐயா, நீங்க இதுவரைக்கும் என்னை டாய்னு கூப்பிட்டதில்லீங்க. வாடா போடான்னு பேசினதில் லீங்க. கதிரவன்னுதான் கூப்பிடறீங்க. உங்க பதவிக்கு...''

''ஆயிரம் பதவி இருந்தாலும், என்னை விட வயசுல பெரியவரு நீங்க.''

''போலீஸ்ல வயசுக்கு மதிப்பு இல்லீங்க. அதிகாரம் தான், ஆளுங்கட்சிக்கு வேண்டப்பட்டவங்கதான் இங்க.''

''நான் வேண்டப்படாத ஆளு. மெட்ராஸ் போயிடு வமா, சிறுவர் குற்றப்பள்ளி.''

''போயிருவோமுங்க. நிம்மதியான இடம்.''

''இல்லை கதிரவன், முரட்டுப் பசங்க நாற்பத்தி எட்டுபேர், நேத்து ஒருத்தன் புதிதா சேர்ந்ததோட. வீடு ரொம்ப சின்னதாம் பள்ளிக்கூடத்தை ஒட்டினாப் போலயாம்.''

''அம்மா மனசு சங்கடப்படுவாங்களே.''

''பன்னிரெண்டு வருஷமா சங்கடம்தான். எனக்கு இந்தத்தோட்டம் விட்டுட்டு போறமேன்னுதான்!கஷ்டமா இருக்கு. மல்லிகைக் கொடி மூணாள் உயரத்துக்குப் போயிருச்சு, பாத்தீங்களா? இவ்வளவு பெரிய சாமந்தி, மதுரை மண்ணுலதான் வரும்.''

''மண்ணு என்னாங்க பண்ணும்? ஐயாவே பார்த்துப் பார்த்துத் தண்ணி ஊத்தற சந்தோஷம். இப்ப கூட இதுங்களோடதான் பேசிக்கிட்டு இருந்தேன், இன்னும் எத்தினி நாளோ உங்களோடன்னு...மாத்தல்னு சொல் லிட்டீங்க.''

''நாளைக்கு ராத்திரி நீங்களும் கிளம்புங்க. உங்களுக் கும் சேர்த்து ரிலீவிங் ஆர்டர் வாங்கிட்டு வந்துடறேன்.''

"அவங்க சொல்லிட்டீங்களா...வரேன்னு."

"வேணாம். திடீர்னு போய் நிப்போம். என்ன நிலைமைன்னு தெரிஞ்சுக்குவோம்."

"வயசானவன் சொல்றேங்க, தட்பா நினைக்கக் கூடாது. அம்மாவை எப்படியாவது பக்குவமா பேசி மெட்ராஸுக்குக் கூட்டியாந்துருங்க."

"கதிரவன், சங்குபுஷ்பம் கொடி சின்னதா நாலு மண்ணோட எடுத்துட்டு வர முடியுமா? பள்ளிக்கூடத்துல தோட்டம் இருக்காம்."

"ஐயா, வீடு அலட்சியம் செய்யக்கூடாது, வெளிய எத்தினி பெரிய பெத்தபேர் இருந்தாலும் வீடு நல்லா இல்லைன்னா அது நிறைவு தராது. பப்ளிக்ல வாங்கின பதக்கத்தைப் பொண்டாட்டிக்கிட்ட காட்டி அவங்க மறுபடி நெஞ்சுல குத்திவிடறபோது உண்டான சுகம்..."

சரவணன் மெல்ல கல் மேடையில் உட்கார்ந்தார். கண்கள் மல்லிகைப் புதருள் நுழைந்து இலக்கின்றி வெறித்தன.

"அண்டர் ஆபீஸரா...? என்.ஸி.ஸிலயா? அதுக்குள்ளயுமா? சரவணன் உயரம் பார்த்து ராங்க் குடுத்துட்டாகன்னு நினைக்கிறேன். காலேஜ்ல யார் உயரமோ, அவங்க அண்டர் ஆபீஸர்."

"இது என்ன சரவணன், சி சர்டிபிகேட் பேட்ஜா? இது ரைஃபிள் ஷூட்டிங்ல ஃபர்ஸ்டா? டூ ஒஃடு ரைபிள் குழந்தைகூட சுடும்."

—ஸ்ரீமதி ஃகேலி செய்தாள்.

"இன்னிக்கு இண்டர் காலேஜ் டெமான்ஸ்ட்ரேஷன்ல தெரிஞ்சிடும். இதெல்லாம் உண்மையான

வாங்கினதா இல்லை, தள்ளிக்கிட்டு வந்த சர்டிஃபிகேட் டான்னு.''

கயிறு பிடித்து ஏறி, மறுபக்கம் குதித்து, முள் வேலிக்குள் நாற்பதடி தவழ்ந்து, நீர் தேங்கிய சகதியில் இறங்கி ஓடி, ஒற்றைக் கட்டையில் நடந்து, வலைக்குள் புகுந்து, இரண்டு சுவர் தாண்டி, முதுகில் முப்பது கிலோ எடையும், ரைபிளும் சுமந்து, கடைசியாய் பையனட் சார்ஜ் செய்ய வேண்டும். பையனட் சார்ஜ் செய்கிற இடம் டெத் ஸ்பாட். அங்கே கயிறு ஏறின இரண்டாவது நிமிடம் பக் ஷாக் சுடப்படும்.

இரண்டு நிமிடத்துக்குள் பையனட் சார்ஜ் செய்ய வில்லையெனில் பக் ஷாட் உடம்பில் படும். சுடப்பட்டு விடப் போகிறோம் என்கிற பயத்தில் பையனட் சார்ஜ் சரிவர செய்யாது போய் விடக்கூடும்.

முதலில் ஏறின இரண்டு பேரும் பக் ஷாட் அடி வாங்கினார்கள். மூன்றாவது ஆள் சேற்றிலேயே நின்று விட்டு பையனட் சார்ஜ் அருகே கூட வராது போய் விட்டான். நாலாவது ஆள் சுவர் ஏறும் போது தோள் பையைக் கழற்றிப் போட்டுவிட்டு பையனட் சார்ஜ் செய்தான்

''உன்னுடைய மூட்டை மனைவியைப் போல. மனைவியை ரௌடிகளிடம் விட்டு நீ மட்டும் தப்பித்துப் போவது வீரமில்லை, கேடட். பக் ஷாட் அடி வாங்கின வனைவிட மட்டமானவன்'' கமாண்டிங் ஆபீஸர் அவனைப் பிரம்பால் புறம் தள்ளினார்.

ஐந்தாவது நபராக சரவணன். முள்வேலி தவழுதலில் கடும் வேகம் கூட்டி, சகதியை இரண்டே தாவலில் தாண்டி, இரண்டு சுவர்களையும் ஷூ நுனியில் ஏறி பையனட் சார்ஜுக்கு வந்தபோது, கூட்டம் பேயாய் கூவிற்று. 'அடிபட்டு செத்தாலும் பரவாயில்லை' என்று

சுவர் குதித்து, வேகத்தோடு ஓடி, ஓடும் போதே கழுத்தில் தொங்கின ரைபிளைக் கைக்கு மாற்றி பையனட்டால் கோணியைக் குத்தி துப்பாக்கி அடிப்பக்கத்தால் தாக்கி பொம்மையைச் சரித்தபோது இரண்டு நிமிடம், ஒரு வினாடி, 'சுடவில்லையே' என்று ஆச்சரியத்தோடு பார்க்க, ''படே''ரென்று முழங்காலை பக்ஷாட் தாக்கிற்று. நொண்டி நொண்டிக் கடைசி இடம் தொட்ட போது கைதட்டல் வானைப் பிளந்தது.

''முட்டாள், கடைசி வினாடியில் கோட்டை விட்டாயே. நூற்றுக்கு நூறு வாங்க வேண்டியவன். பத்து மார்க் குறைவாக வாங்கி விட்டாயே. ஹிம்ஸை வேண்டும் என்று எதிர்பார்க்கிற மனோபாவம் உன்னுடையது. தவறு அது. மாற்றிக் கொள்'' என்றார் கமாண்டிங் ஆபீஸர்.

ஆனாலும் சரவணன்தான் முதல்.

பெஸ்ட் கேடட், சவுத் டிவிஷன், தங்கப் பதக்கமும் கொண்டை உள்ள கருப்புப் பிரம்பும் தரப்பட்டது. தங்கப் பதக்கம் பரிசு. கொண்டைப் பிரம்பு மரியாதை.

கமாண்டர் கழுத்தில் மாட்டிய தங்கப் பதக்கத்தை ஸ்ரீமதி முத்தமிட்டு நெஞ்சில் குத்திவிட்டாள். சரவணன் பிரம்பைக் கையிலெடுத்து கடற்கரையில் தன் பெயர் எழுதினான்.

''என்னப்பா...பண்ணப்போற எம். ஏ. முடிச்சதும்?''

''ஐ.பி.எஸ்.நீ?''

''நானும் படிக்கணும். படிச்சு வேலைக்குப் போய் நாலு காசு பார்த்து இரண்டு அக்காக்குக் கல்யாணம் பண்ணி...''

''தாம கல்யாணம் பண்ணிக்கறதுக்கு சான்ஸ் இருக்கா.''

"ஒரு பத்து வருஷம் வெயிட் பண்ணா ஐம்பது பர்ஸெண்ட் சான்ஸ் இருக்கு. அப்புறம் இன்னொரு விஷயம். உன்னைவிட நான் ஆறுமாசம் பெரியவ."

"அது கிடக்கு. ஒரு அஞ்சு வருஷமா குறைக்க முடியாதா?"

"முதல் ஐந்தாண்டுத் திட்டம் பெரியக்கா கல்யாணம். அடுத்த ஐந்தாண்டு திட்டம் சின்னக்கா கல்யாணம் இதுவே..."

"புரியுது ஸ்ரீமதி. என் வீட்ல அத்தினி நாள் விட மாட்டாங்க. நல்லவேளை நாம லவ்வு, லொசுக்குன்னு மனசு அலைய விடலை."

"மனசு அலையறது நிஜம் சரவணன். ஆனா வாழ்க்கை கட்டிப் போட்டிருக்கு."

"பரவாயில்லை, ஸ்ரீமதி. லெட்டர் தொடர்பு வச்சுப் போம். உனக்கு மனசு மாறி கல்யாண ஆசை வந்தா எனக்கு ஒரு கடுதாசு போடு. எனக்குக் கல்யாணம்னு நிச்சயம் பண்றதுக்கு முன்ன நான் உனக்குச் சொல் றேன்."

இரண்டு வருடங்கள் கடிதத் தொடர்பு நீடித்து மெல்ல மறைந்தது. எங்கே இருக்கிறாள், என்ன செய் கிறாள்...தெரியவில்லை. தன் கல்யாணம்கூட சொல்ல முடியாது போயிற்று.

"என்னங்க...உட்கார்ந்துட்டீங்க." கதிரவன் குனிந்து கேட்டார்.

"பழைய நினைவு. போய் என் துணிமணி எடுத்து வச்சுடுங்க, இன்னிக்கு நான் தண்ணி ஊத்தறேன்." குழாய் திறந்துவிட்டு' ரப்பர் டியூப்போடு செடி கொடி களிடம் நகர்ந்தார்.

''ம்ம்ஹூம்...இன்னும் உயரமா வளரணும்.'' குண்டு மல்லிகைப் புதரோடு பேசினார்.

''இந்த ஆள் போலீஸ்காரனே இல்லை'' என்று கதிரவனுக்கும் தோன்றிற்று.

# 5

''என்ன, அதுக்குள்ள ரிலீவ் ஆயிட்டீங்களா? அடிச்சு துரத்தின மாதிரி வந்துட்டீங்க.''

சென்னையில் உள்ள ஐ. ஜி. ஆச்சரியத்துடன் வினவினார்.

''அப்படித்தான் சார்.''

''ஐ ஜி- என்ன மேட்டர்.''

''கஞ்சாப் பயிர்.''

''ஆமாம். நீங்கதானா அது. மலையாளத்தான் எஸ்டேட் இல்ல அது...?''

''யெஸ் சார் ''

''அப்போ தமிழ்நாட்டில் மலையாளிக்கு அத்தனை மதிப்பு இருக்குன்னு அர்த்தம். எனக்கும் மலையாளி கண்டா பிடிக்காது- ஆனா இன்னிக்குத் தேதிக்கு வாய் விட்டுச் சொல்ல முடியுமா?''

''முடியாது சார்.''

''அடிச்சு நொறுக்கிட்டீங்களாமே''

''ஆமா சார். எவர்சில்வர் தூக்குல வீட்டுக்குத் துட்டு அனுப்பினாரு.''

''எவ்வளவோ?''

''எண்ணலை.''

''ஏன்?''

''தமிழ்நாட்ல மத்த இடங்களை விட மதுரை ஒழுக்க மான ஊரு சார். ஒரு டெக்கரம் உண்டு. இன்னிக்கு எல்லா காலேஜ் வாசல்லயும் கஞ்சா பொட்டலம். அஞ்சு வருஷத்துல பசங்க கும்பல் கும்பலா செத்துடுவானுங்க சார், கஞ்சா பொட்டலத்துல லக்கி டிப் இருக்கு சார். நம்பர் இருக்கும். சாயந்திரம் குலுக்கி விழுந்த நம்ப ருக்கு நூறு ரூபா.''

''பாஸ்டர்ஸ்.''

''லேடீஸ் காலேஜ்லகூட பொட்டலம் பரவி...ஒரே ஒரு ஆள் ஊர் மொத்தமும் நாசம் பண்றான் சார்.''

ஐ. ஜி. முகம் சுருக்கினார்.

''ஓ.கே மாரல் அடிச்சு சொல்லித் தரமுடியாது சரவணன். இதை நீங்க பனிஷ்மென்ட்டா நினைக்கா தீங்க. டெல்லில ஒரு மூவ் இருக்கு. சிறுவர் குற்றப் பள்ளி ரிஃபார்ம் பண்ணணும்னு. பூதான இயக்கம் தெரியுமா...வினோபாவே குரூப்...அவங்க ஒரு ரிஸர்ச் செய்து. குற்றப் பள்ளி தப்புன்னு சொல்றாங்க. அஸ் யூஸ்வல் அதை யாரும் கண்டுக்கலை. நீங்க என்ன ஏதுன்னு குடைஞ்சு பசங்களைக் கேளுங்க. விவரம் தெரிஞ்சுக்கிட்டு உங்க இடத்தை அப்படி மாத்த முடியுமா பாருங்க. நான் சொல்றது பர்சனல். டோண்ட் கோட் மீ இன்னிக்கு சி. எம். இது மாதிரி புது விஷயங்கள்ல டேஸ்ட் உள்ளவரு, டிராமடிக்கா ஏதுனா பண்ணினா புடிக்கும். எதுக்கு சொல்றேன்னா உங்களுக்கு சேலஞ்ஜாவும் இருக் கும்—நல்ல பேரும் கிடைக்கும்.''

''இப்ப எப்படி சார் இருக்கு குற்றப்பள்ளி?''

''குப்பை. நடு ஸிடில ஜெயில் வச்சு அதைச் சரி பண்ணவே முடியாது. பசங்க மூவ்மெண்டையும் கண்ட்ரோல் பண்ணாத நிறைய கம்ப்ளெயிண்ட்ஸ் வருது.''

''என்ன சார்?''

''பசங்க சுவரு எகிறிக் குதிச்சு சினிமா பார்த்து வராங்க. பிக்பாக்கெட் அடிச்சுட்டு உள்ள ஓடிடறான். இரண்டு மாசம் முன்ன பேக்கரிய லூட் பண்ணிட்டாங்க· கத்தி காட்டி கேக் அத்தினியும் வாரிக்கினு போயிட்டாங்க.''

''லோக்கல் ரௌடிய கேட்டா, 'நான் ஏன் சார் கேக் திருடறேன்'னு கேக்கறான். பேக்கரிக்காரன் எல்லாம் சின்ன பசங்கன்றான். எனக்கு இவனுங்க மேல டௌட். இல்லவே இல்லைன்னு சத்தியம் பண்றாங்க.''

''இன்னிக்குப் போய் ஜார்ஜ் எடுத்துக்கவா சார்.''

''பழைய ஆள் காலி பண்ணணுமே. உங்க ஃபேமிலி வரவேணாமா?''

''வர மாசம் வருவாங்க சார்.''

''அவரு காலி பண்ண ஒரு வாரம் டைம் கேட்பாரு. எங்க தங்குவீங்க?''

''அங்கேயே, ஆபீஸ்லயே படுத்துக்கறேன் சார்.''

''நல்லா இருக்குமா. ஏதாவது குவாட்டர்ஸ்...''

''பரவாயில்லை, நான் பசங்களை ஸ்டடி பண்ண உதவும்.''

''ஸோ. இறங்கிட்டீங்க''

''இது. எனக்கு பனிஷ்மென்ட் இல்லை சார், நீங்க மாரல் சப்போர்ட் பண்ணா...''

''வெரி குட். முழு சப்போர்ட் தரேன். என்னை இந்த மாதிரி மூணு வருஷம் சாவடிச்சாங்க. மக்கள் தொடர்புன்னு ஒரு டிபார்மெண்ட்ல போட்டாங்க. நாலு டேபிள், பத்து சேர் என்ன செய்யணும்னு யாருக்கும் தெரியாது, புதுசு புதுசா நிறைய செஞ்சேன். குறைஞ்ச போலீஸோடு பெரிய ஊர்வலம். எப்படிச் சமாளிக்கறதுன்னு ஒரு ஐடியா போட்டுக் கொடுத்தேன். போலீஸ் பத்தி பப்ளிக் க்ரிவென்ஸஸ் நானூறு பக்கம் சப்மிட் பண்ணேன். அலண்டு போச்சு டிபார்ட்மெண்ட் ஒரே வருஷத்துல முன்னூத்துப் பன்னிரெண்டு குற்றம் போலீஸ் மேல. பத்து குற்றத்துக்குக் கூட பதில் சொல்ல முடியவில்லை. தூக்கி மறுபடி க்ரைம்ல போட்டுட்டாங்க.''

''க்ளவர் ஐடியா சார்.''

''கெட்டிக்காரத்தனம் மட்டுமில்லை. அப்பத்தான் எனக்கே தெரிஞ்சுது. பொதுமக்கள் கிட்டயும் கெட்ட பேர் வாங்காத, டிபார்ட்மெண்ட் ஆளையும் காட்டிக் கொடுக்காத கல்பிரிட்டை மடக்கற வேலை அங்கதான் தெரிஞ்சுது. நீங்க கஞ்சா கோடவுனை எரிச்சது தப்பு. உள்ளேயிருந்த கஞ்சாவை வெளிய போட்டு எரிச்சிருக்கணும். நாயை சுட்டிருக்கக் கூடாது. மலைலேர்ந்து பாதாளத்துக்குத் தள்ளி விட்டிருக்கணும். கஞ்சா எஸ்டேட் ஆளை அடிச்சிருக்கக் கூடாது. ஓடவிட்டு சுட்டிருக்கணும். அப்படி ஓட விட்டு சுட்ட் கேஸ் நடந்திருக்கு. அவனைச் சுட்டுட்டு அவன் ரிவால்வரை கோர்ட்ல சப்மிட் பண்ணியிருக்கணும். இதுவும் நடந்திருக்கு.''

''தெரியும் சார்.''

''போலீஸ்காரன் சோல்ஜர் இல்லை அவன் திருடனைப் புடிக்கிறவன். திருடனைவிட பெரிய திருடனா இருந்தாத்தான் பொழைக்க முடியும். ரௌடியை விட பெரிய ரௌடியா போலீஸ்காரன் இருக்கறதுதான்

நல்லது...இல்லேன்னா நாம மாட்டிட்டு கஷ்டப்படு வோம். உங்க இடத்துக்கு போங்க சரவணன். நீங்க சொன்ன மாதிரி பசங்களோட பசங்களா இருங்க. அது ஒரு ஸிக் ப்ளேஸ். ஆரோக்கியமா மாற்ற ட்ரை பண் ணுங்க. குவார்ட்டர்ஸ் கூட சின்னதுதான். ஆனா மேக் ஸிமம் என்ன வசதி தர முடியுமோ அது உங்களுக்கு வரும். நானும் இது மாதிரி அவஸ்தைப்பட்டவன்னு உங்களுக்கு...''

''புரியுது சார். தாங்க்யூ சார்.''

''ஆல் த பெஸ்ட்''

''சார், என் ஆர்டர்லி கதிரவன்...''

''நோ. ப்ராப்ளம். டிரான்ஸ்ஃபர் லெட்டர் அவருக்கு உடனே வரும். போறபோது என் ஜீப்ல போங்க ஈவினிங் திருப்பி அனுப்புங்க.''

''வேணாம் சார். ஆட்டோல போய்க்கறேன்.''

''ஏன்?''

''நம்ம பந்தாவை ஜாயின் பண்ணிட்டு காட்ட லாம்னு.''

''வெரிகுட். உங்க இஷ்டம்.''

**வா**சலில் போலீஸ் கான்ஸ்டபிள், பாலத்துப் பக்கம் இருக்கும் சினிமாவுக்கு கருப்பு டிக்கெட் விற்றுக் கொண் டிருந்தான். உள்ளேயிருந்து மெல்லிய சுத்தியல் சத்தம் வந்து கொண்டிருந்தது...

''செடிங்க இருக்கு கதிரவன்.''

''எல்லாம் குரோட்டன்ஸுங்க ஐயா ''

''நாப்பத்தெட்டு பசங்க இருக்கற கட்டடம் உள்ள இருக்கு. குவார்ட்டர்ஸ் எங்கன்னே தெரியலை.''

"நீங்க டீக்கடைல அப்படி உட்காருங்க. நான் பேச்சு குடுத்து கேட்டுக்கினு வரேன்."

"ஒண்ணு செய். அப்படி நீ தியேட்டர் பக்கமா போ. நான் நேரா உள்ள போறேன். குவார்ட்டர்ஸ் எங்கன்னு கவனி. பின் சுவரு எப்படி என்ன பாரு. அப்புறம் என் பேரு சொல்லி உள்ள வா. மறைமுகமா நான் பார்க்கறது தப்பு. நம்மை நோட் பண்றாங்க."

"யாரு?"

"டீக்கடை ஆளுங்க."

"சரி புரியுது."

சரவணன் ரோடு கடந்து எதிர்பக்கம்போய், "என்ன அது" என்று கேட்டார்.

"அஞ்சு அம்பது டிக்கெட் பத்து ரூபா. டிஜாங்கோ படம். செக்ஸ். ஃபைட் ஒரு மாதிரி ஸீன் இரண்டு வருது."

"அது ஜாங்கோ. டிஜாங்கோ இல்லை, சூப்பரின் டெண்டென்ட் இருக்காரா?"

"இருக்காரு. நீங்க யாரு?" சந்தேகத்துடன் டிக்கெட்டுகளைப் பையில் சொருகினான்.

"அதே தான். மதுரைலேர்ந்து மாத்தலாகி இங்க வந்துருக்கேன்."

"சார்...யெஸ் சார். வாங்க சார்."

"பாரஈதானே?"

"ஆமா சார்."

"அப்புறம் எப்படி உள்ள வர முடியும். வெளியவே நில்லு."

கால் வீசி சரவணன் உள்ளே போனார்.

ஆபீஸ் அறையில் நாலைந்து ஆண்கள் உட்கார்ந்திருந்தார்கள். நோட்டீஸ் போர்டு படித்தார். உள்ளே பேச்சு சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

''சொண்டி சோறுன்று பேரு. செய்யற முறையா செய்தா அது மாதிரி நல்ல வஸ்து எதுவும் இல்லை. பச பசன்னு ஒட்டற புழுங்கலரிசியா இருக்கணும். இரண்டு பெரும் பழமா எலுமிச்சம்பழம் நறுக்கிப் போட்டுரணும். ஒரு பிடி உப்பு இரண்டு படிச் சோத்துக்கு தளபுளன்னு கொதிச்சு வரச்சொல்ல இறக்கி, அப்படியே ஆற வச்சுடணும். உள்ள மத்து வுட்டு செரிய கடைஞ்சித் தொடற பதமா சூடு இருக்கச் சொல்ல குழி தோண்டித் தவலை வாய நல்ல துணி போட்டு கட்டி, மேல பலகை வச்சு மூடிட்டு இரண்டு அடி ஆழம் புதைச்சுடணும். இன்னிக்கு புதனா...புதனோட புதன் எட்டு கூட ஒரு நாள் வுடு ஒன்பதாம் நாள் கழிச்சு மொள்ள மண்ணு தள்ளிட்டு பானைய தளுக்கா எடுத்து துணி கழட்டிப் பார்த்தா அப்படியே சோறு அடங்கி தண்ணி மேல நிக்கும். தெளிவா இரண்டு டம்ளர் சாச்சா போல வடிச்சு அப்படியே குடி, சிறு குடல்ல அது சுத்திச் சுத்தி போறது தெரியும். இன்னொன்னு குடி. ஜில்வுன்னு தூக்கும். பட்டை சாராயம் மாதிரி பொட்டுல அடிக்காது. அப்படியே காத்துல போற மாதிரி தூக்கும், பேசாத அப்படியே ஆத்துல இறங்கி குளிச்சுட்டு வீட்டுக்கு வா. உடம்பு மொத்தமும் சோறு கேட்கும். காரக் குழம்பு சாப்புட்டுட்டு கறியோ மீனோ கடிச்சுக்க. தலைக்குக் கட்டை வச்சு துண்டு விரிச்சு திண்ணல படுத்துட்ட... எழுதித் தரேன். ரெண்டு நாள் ஆவும் எந்திரிக்க.

''எழுந்து பின்பக்கம் போயிட்டு வந்தியா. கல கலன்னு பூ மாதிரி இருக்கும் உடம்பு. மாசம் ஒரு தபா

மருந்து மாதிரி வச்சுக்கணும், அத்தினி நல்லது. ஆனா ஒண்ணு, சொண்டிச் சோறு சாப்பிட்டு வேலை செய்யக் கூடாது. பட்டைச் சாராயம் மாதிரி முரட்டுத்தனம் காட்டக்கூடாது. ஆடிட்ட...கவுத்துடும். சண்டைல அடிச்சதும் தெரியாது, வாங்கினதும் தெரியாத போயிடும் யாருங்க அது?''

''சரவணன், எஸ்.பி.''

எழுந்து இரண்டு பேர் மரியாதையாய் சல்யூட் அடித்தார்கள். மீதி இரண்டு பேர் மரியாதையாய் எழுந்து நின்றார்கள்.

''சூப்பரின்டெண்டென்ட் இல்லையா?''

''இருக்காரு சார்.''

''நான் வந்திருக்கேன்னு சொல்லு.''

''சார், வேற எதுனா விஷயம் சொல்லணுமா?''

''எம்பேரு சொல்லு போதும். அவரு ஆபீஸ் ரூம் எது?''

''இதோ இந்தப் பக்கங்க. சாவி எடுப்பா.'' கதவு திறந்து உள்ளே ஓடி ஜன்னல் திறந்தான்.

''இன்னிக்கு ஐயா லீவா?''

''இல்லை சார். வீட்ல போன் பேசிட்டிருக்காங்க.''

சரவணன் அவர் டேபிள் போன் எடுத்து காதில் வைத்துப் பார்த்தார். வேலை செய்தது.

''தனியா அதிகாரிங்களோட பேசணும்னா வீட்டுக்குப் போய் பேசுவாங்க. அவருக்கு மாத்தலாயிடுச்சுங்க ஐயா...?''

''மதுரை எஸ்.பி.''

''அப்படிங்களா...நான் ரைட்டருங்க இங்க.''

''வாசல்ல இருக்கற பாரா ஆளு யாரு?''

''நம்ம டிப்பார்ட்மெண்ட் தாங்க.''

''இங்க யூனிஃபார்ம் கிடையாதா? தேவையில்லையா?''

''உண்டுங்க, அவசியமான நேரத்துக்குப் போட்டுக்கறது. காத்தோட்டமில்லாத இடங்க, பழைய கட்டடம்.''

''இதுவா?''

''இல்லீங்க. பின்னாடிப் பசங்க இருக்கற இடம். பாதி நேரம் அங்கனதாங்க வேலை.''

''அப்படியா, மெட்ராஸ்ல சொண்டிச் சோறு இன்னும் இருக்கா?''

' அது...சும்மா...பேசிக்கிட்டிருந்தோம்.''

''இல்லை...விவரம் கேட்டேன்.''

''இருக்குதுங்க. கடற்கரைப் பக்கமா சில இடங்களில்.''

' சாராயம் மாதிரிக் கெடுதல் கிடையாதுன்னு வாங்க.''

''இல்லீங்க.''

''இந்த ஏரியால கிடைக்குமா?''

''இல்லீங்க.''

''முத்துன பழைய சோறு மாதிரிதானே?''

''ஆமாங்க ஆனா பவுடர் கலந்துடறாங்க போதைக்கு.''

"இங்கியா?"

"ஆமாங்க, இல்லீங்க."

"என்ன சொல்றீங்க, புரியலை."

"இந்தப் பக்கம்..." தயங்கினார்.

"நீங்க ஏங்க அதுக்கு என்னமோ மடில வச்சுருக்க மாதிரி பயப்படறீங்க."

ஐயா வராங்க." விலகினான்.

"சரவணன், வணக்கம்." உள்ளே அவர் நுழைந்தார். "இப்பத்தான் போன் வந்தது. நீங்க மதுரைல ரிலீப் ஆயிட்டீங்கன்னு, உட்காருங்க."

"வணக்கம் சார். ரொம்ப நாள் முன்னாடி, போலீஸ் பரேட்ல பார்த்தது உங்களை. நல்லா இருக்கீங்களா சார்?"

"இருக்கேன். எனக்கு க்ரைம் ப்ராஞ்ச் செங்கல்பட் போட்டுருக்கு."

"குட் லக் சார்."

"என்ன குட் லக்? ஏரியா பெரிசு, அலையணும். மொபைல் பாப்புலேஷன் அதிகம்." பேச்சில் சந்தோஷம் தெரிந்தது.

"என்ன சரவணன், எப்ப ஜாய்ன் பண்றீங்க?"

"உங்க வசதிப்படி, சார்."

"நான் மூவ் பண்றதுக்கு ஒரு வாரம் ஆகும். ஃபேமிலி கூட்டிட்டு வந்துட்டீங்களா?"

"இல்லை சார்."

"நல்லவேளை, தங்கறது எங்க...?"

''குவாட்டர்ஸ் எதுனா பார்த்துக்கறேன் சார். சும்மா உங்களை விஷ் பண்ணிட்டுப் போலாம்னு வந்தேன்.''

''மதுரை நல்ல இடமாச்சே.''

''நான் மாட்டிக்கிட்டேன் சார்.''

''சொன்னாங்க, போலீஸ்காரன் பொழப்பு அசந்தா போச்சு. உங்க பேப்பர்ஸ் இருக்கா?''

சரவணன் பழுப்புக் காகிதம் நீட்டினார்.

''நேந்து ரிலீவாகி உடனே வந்துட்டீங்களா? இது ஒண்ணும் வசதியான இடம் இல்லை சரவணன்.''

''இருக்கிற வசதி போதும் சார்.''

''உள்ள போவமா, ஒரு ரவுண்ட் காட்டறேன்.''

''அவசியம் இல்ல சார். உங்களுக்கு எப்படி வசதியோ...''

''வுட்டா போறும்னு இருக்கு சரவணன், வாங்க.''

ரைட்டரை நோக்கி கையசைக்க, அவன் கட்டடத்துக்குள் ஓடினான்.

பேசிக்கொண்டே நடக்க, 'பைல்' என்று கூச்சல் கேட்டது. தபதபவென்று நாலு பக்கமும் ஆட்கள் ஓடும் சப்தம் கேட்டது.

''கார்டன் நல்லா மெயின்டெய்ன் பண்ணியிருக்கு சார்.''

''ஏதோ இருக்கிறதை வச்சு செய்திருக்கோம். வாட்டர் ப்ராப்ளம் வர ஆரம்பிச்சிடுச்சு.''

தோட்டம் கடந்து கட்டடத்தில் ஏற, சுவர் முழுவதும் காரை பெயர்ந்து விரிசல் விட்டிருப்பது தெரிந்தது. ஒரு ஆள் ஓடினால் கூட உத்திரத்தில் தபதபவென்று சப்தம் கேட்டது.

''வெரி ஓல்ட் பில்டிங் ''

''யெஸ் சார்.''

''அப்பப்ப சரி பண்ணாங்களே தவிர, முழுசா எந்த வேலையும் செய்யறதில்லை.''

''நாற்பத்தெட்டு பசங்களுக்கு செக்யூரிட்டி போறுமா சார்.''

''பதினேழு பேர் இருக்காங்க. அவனவன் சேர்ந்த உடனே லீவு போட்டு போயிடறான். இது பனிஷ்மென்ட் ஏரியாதானே சரவணன்?''

''நாட் எக்ஸாக்ட்லி சார்.''

''நமக்குப் பரவாயில்லை. கான்ஸ்டபிளுக்கு வருமானம் இல்லையே.''

''தெரியுது சார்.''

''ம்ம்.''

''வாசல்ல உமா தியேட்டருக்கு ப்ளாக் டிக்கெட் விக்கறாங்க.''

''யாரு...பாராவா?''

''ஐ திங் ஸோ.''

''ஏட்டு மாணிக்கம் அடிபடப் போறான் எங்கிட்ட.''

''லீவ் இட் சார். கான்ஸ்டபிளுக்கு பனிஷ்மென்ட் ஏரியாதான் இது.''

கட்டடம் தாண்டிப் படியிறங்க, முற்றம் தெரிந்தது. கருங்கல் முற்றம். அங்கங்கே புல் முளைத்திருந்தது.

பையன்கள் வரிசையாக உயரம் பார்த்து நின்றிருந்தார்கள்.

''ரோல் கால் ஸ்டார்ட்.''

''ஒன்னேய்... ரெண்டேய்... மூணேய்... நாலேய்... எட்டேய்...ஒன்பதேய்...டென்... பதினொன்னேய்...பன்னென்டேய்...நாற்பத்தி ஏழாய்...நாற்பத்தெட்டு...''

பதினோரு வயசிலிருந்து பதினெட்டு வயது வரை உள்ள பையன்கள். நீலச்சட்டையும், சிகப்பு நிக்கரும் அணிந்த பையன்கள்.

''பசங்க ஹெல்தியா இருக்காங்க சார்.''

''சாப்பாட்ல வஞ்சனையே பண்றதில்லை, சரவணன். வேற எஜுகேஷன் தர முடியலை. கார்ப்பென்ட்ரி, ஸ்மிதி, தறி இரண்டு, கூடை முடையறது நாற்காலி பின்றது...வெல்டிங் இருக்கு. சரியா ட்ரெய்ன் பண்ண முடியலை. இவனுங்களுக்கும் நாட்டமில்லை. தனித் தனியா இன்ஸ்பெக்ஷன் செய்யணுமா?''

''வேணாம் சார் ''

''என்னிக்கு சார்ஜ் எடுக்கறீங்க?''

''உங்க வசதி சார்.''

''எனக்கு குவார்ட்டர்ஸுக்கு டைம் கொடுத்தீங் கன்னா போதும். இது நாளைக்கு கூட எடுத்துக் கலாம்.''

''சரி சார்.''

''இன்னிக்கு எங்க வீட்ல சாப்பிடுங்களேன். வாங்க. தங்கறது கூட இங்கன தங்கிக்கலாம். ஒரு நாளைக்கு குவார்ட்டர்ஸ் போவானேன்.''

''உங்க வசதி சார்.''

''ஏம்பா ரைட்டர். அப்ப...சாமான் போக்குவரத்து எல்லாம் செக் பண்ணி ஐயாகிட்ட காட்டிடு. நான் லஞ்சுக்கு சொல்லிட்டு வரேன்.'

''சரி சார்.''

''டிஸ்மிஸ் பண்ணிடட்டுமா?''

''இருக்கட்டுங்க. நான் செய்துக்கறேன்.'

அவர் வீட்டுக்குள் அவசரமாய் போக, சரவணன் மெல்ல நடந்து பையன்கள் முன்பு நின்றான்.

''இனி ஐந்து வருடம். குறைந்த பட்சம் இங்குதான். இவர்களோடுதான்.''

''ரைட்டர், இவங்க பர்ஸனல் ஃபைல்ஸ்லாம் எடுத்தாங்க.''

''சரி சார்.''

உள்ளே ஓடினார்.

''கண்ணபிரான். அலைஸ் பெரிய பையன். உத்திரமேரூர். வயது பதினெட்டு. தங்கையைச் சுருக்கிட்டு கொன்றதற்கு நான்கு வருடக் கடுங்காவல். மூன்று வருடம் முடிந்து இது நான்காவது வருடம்.''

''ஏம்பா கொன்னே?''

அவன் மௌனமாக இருந்தான்.

''ஏன் கொன்னே?''

''அவளை என் ஸ்நேகிதக்காரன் கெடுத்துட்டான் சார்.''

''நெக்ஸ்ட்.''

ஸ்ரீநிவாசன், சென்னை. வயது பதினாறு. கடை முதலாளியை மின்சாரம் பாய்ச்சிக் கொன்றதற்கு மூன்று வருடக் கடுங்காவல். ஒரு வருடம் முடிந்திருக்கிறது.''

''பிராமின்?''

''யெஸ் சார்.''

''ஏம்பா இது செஞ்சே?''

''காசு கடன் கேட்க வந்த எங்கம்மாவ தேவடியா முண்டேன்னான். இரும்புச்சேர்ல அடில ஒயர் சொருகி சும்மா ஷாக் கொடுக்கலாம்னு நினைச்சேன்.''

''ம்ம்.''

''உதறி டேபிள்ல வச்ச தண்ணிய கொட்டி எர்த் ஆயி...''

''நெக்ஸ்ட்.''

''இளங்கோவன். பாபநாசம். வயது பதினைந்து. வழிப்பறிக் கொள்ளை. மரணக்காயங்கள் நான்குபேருக்கு உண்டாக்கியதால் இரண்டு வருடச்சிறை. ஒரு வருடம் முடிந்திருக்கிறது''.

''ஏன் இளங்கோவன்?''

''சினிமா பார்க்க துட்டு இல்லை. கத்தி காட்டினேன். பொத்து பொத்துன்னு அடிச்சுட்டாங்க. அடி பட்ட வெறில கிழிச்சுட்டேன்.''

''நெக்ஸ்ட்.''

''மாடசாமி. பேரணாம்பட்டு. வயசு பதினேழு. மனைவியைக் கொலை செய்ய முயற்சித்ததாக...''

''மனைவியா?''

''கல்யாணம் பதினாறு வயசுல சார். மறுநாளே வெட்டிட்டான் தலைய. நல்ல வேளை பொழைச்சுக் கிட்டா. ரெண்டு வருஷம்.''

''ஏம்பா?''

''இங்க வேணாம் சார்.''

''ஏன்?''

''தனியா சொல்றேன் சார்.''

சரவணன் நகர்ந்து சுவரருகே போனார். அவன் பின்னால் வந்தான்.

''ஏன்?''

''எனக்குக் கல்யாணம்னு சொல்லி எங்கய்யா ராத்திரி அந்தப் பொண்ணைக் கூட்டிட்டுப் போயி...''

''அதுக்கு ஏன் அந்தப் பொண்ணை...''

''எங்கய்யாவை என்னால அடிக்க முடியலியே சார்.''

''போ.''

''சார்''

''என்ன?''

''இத பசங்கக் கிட்ட சொல்ல வேணாம்.''

சரவணன் அவனை உற்றுப் பார்த்தார். ''சரி.'' என்றார்.

''ரமேஷ், வயது பதினேழு, சென்னை. போலீஸ் சப் இன்ஸ்பெக்டரை கொன்றதற்கு மூன்று வருடச் சிறை. இது இரண்டாவது மாதம்.''

''டிராஃபிக் சார்ஜெண்ட் லோகநாதன் தானே.''

''ஆமா சார்.''

''பேப்பர்ல படிச்சேன். கிட்ட வா. என்ன சாப்பிட்ட?''

''நத்திங்.''

''ஏலக்காய் வாசனை வருது உம் மேல.''

''ஐ டோண்ட் நோ''

''ஊது.''

''வாட்?''

''ஊதுடான்னா...'' ரைட்டர் இரைந்நார்.

தெளிவாய் ஏலக்காய் இனிப்பு கலந்த வாசனை அடித்தது. கூர்மையாய் அவன் உடைகளைக் கவனித்தார்.

''திரும்பு''

திரும்பினான். அவன் முதுகிலிருந்து ஏலக்காய் பிஸ்கெட் பாக்கெட் எடுத்தார். பாக்கெட்டால் முதுகில் தட்டினார்.

''ஐயோ'' என்று கத்தினான்.

''சட்டையைத் தூக்கு.''

தூக்கினான்.

பட்டையாய் ஒரு பிரம்புக் கோடு தெரிந்தது.

''என்ன இது?''

''பெரியவரு காலைல அடிச்சாரு சார்.''

''எதுக்கு?''

''மோட்டார்ல ஏதோ கோளாறு பண்ணிட்டாங்க. எல்லாரையும் லாங்கிட்டாரு.''

''ஐ ஸீ, இந்தா.'' பிஸ்கட் பொட்டலத்தை அவனிடம் தூக்கிப் போட்டார்.

''நெக்ஸ்ட்....''

''நெக்ஸ்ட்''

.........

''நெக்ஸ்ட்''

...நாற்பத்தியெட்டு. ஆறுமுகம். வயது பதினேழு. மதுராந்தகம். தாய், தகப்பன் இருவரையும் கொலை செய்ததற்காக ஆறு வருட சிறைத் தண்டனை. ஒருநாள் முடிந்திருக்கிறது.''

''ஏன் ஆறுமுகம்?''

''தெரியாத செய்துட்டேங்க.''

''எதுக்குப்பா செய்தே?''

''நான் விரும்பற பொண்ணைக் கெட்ட வார்த்தை சொல்லித் திட்டினாங்க. கட்டிக்கக் கூடாதுன்னுட்டாங்க.''

''அதுக்கா?''

''இல்லை சார், நான் செய்யலை.''

''பிறகு...?''

''ஏதோ கெட்ட வாசனை உள்ள போய் கொல்ல வச்சிடுச்சு...ஏன் செய்யறேன்னு எனக்குத் தெரியலை சார்.''

''கெட்ட வாசனைன்னா?''

''பேய். பிசாசுன்றான். இது எடுக்குமா கோர்ட்ல?''

''டிஸ்மிஸ் பண்ணச் சொல்லு.''

''ரோல்கால் டிஸ்மிஸ்'' பெரிய பையன் கத்தினான்.

வலது புறம் திரும்பிக் கலைந்தார்கள், அவரவர் இடத்திற்குப் போனார்கள். சுத்தியல் சப்தம் மறுபடி துவங்கிற்று.

சதுர வடிவ முற்றத்து வடக்கு மூலையில் கார்ப் பெண்ட்டரி ஷாப். தெற்கு மூலையில் கரும்பலகை போட்டு வகுப்பு. கிழக்கு மூலையில் இரும்பு அடிக்கிற ஸ்மிதி ஷாப். மேற்கில் சமையலறை. நடுவே ஒரு பக்க மாய் ஸ்டோர் ரூம். எதிரே தறிகள் உள்ள இடம். மாடி யில் பெரிய ஹால். இடது சிறகிலும் வலது சிறகிலும் தனித் தனியே இரண்டு அறைகள். நேர் எதிரே லைப்ரரி கேரம் போர்டு. பூப்பந்து வலைகள். உடைந்த கிரிக் கெட் மட்டை. தோட்டக் கருவிகள்.

மதில் சுவர் உயரமும் பின்பக்க லைப்ரரி ஜன்னலும் சரியான உயரத்தில் இருந்தன, இருபதடி இடைவெளி இருந்தது, மரச்சன்னலின் விளிம்பில் ஒரு இடம் ஏதோ அழுத்தப்பட்டுப் பள்ளமாய் இருந்தது.

மதில் சுவருக்கு அந்தப் பக்கம் ஏதோ கட்டட வேலை நடந்து கொண்டிருந்தது.

# 6

''சாப்பாட்டு ரூம் ஏன் இவ்வளவு இருட்டா இருக்கு?'' சரவணன் வினவினார்.

''சுவரு முழுக்க புகைக்கரி சார். லைட்டு போட் டாலும் இருளோன்னுதான் இருக்கும்.''

''ஏன், வெள்ளை அடிப்பாங்களே வருஷா வருஷம்.''

"அந்தப் புகையக் கழுவாம அது மேலயே வெள்ளை அடிச்சாங்க."

"கழுவறது..."

"தண்ணி வேணாமா, ஒரு நாள் விட்டு ஒரு நாள் தான் தண்ணி வருது. குளிக்கறதுக்கே பெரும் கஷ்டம்."

"கிணத்துல தண்ணி இல்லையா? போர் பைப்பு பார்த்தேனே"

"அந்த அம்மா மோட்டார் கெட்டுரும்னு வுட மாட்டாங்க."

"மோட்டார் அடிக்கடி கெட்டுப் போவுதா?"

"இன்னிக்குக் காலைல பளீர்னு எரிஞ்சு போச்சு. ஏதோ தண்ணி பட்டிருச்சு போல."

"ஏன் சார், நீங்கதான் அடுத்த அதிகாரியா?" பெரிய பையன் கூடவே பேசிக்கொண்டு வந்து விசாரித்தான்."

அறையில் அழுகிய வெங்காய வாசனையும், ரொட்டியின் தித்திப்பு மணமும் பரவியிருந்தன.

"யார் சமைக்கறது?"

"ஆள் இருக்கு சமைக்கறதுக்கு. ஆனா பாதி நேரம் பசங்கதான் முச்சூடும் செய்வாங்க."

"இது என்ன, பாத்திரத்து அடில?"

"அடுப்புல வச்சு வெல்ட் பண்ணியிருக்கம் சார். அலுமினியம் இழுத்து இழுத்து ஓட்டை ஆயிடுச்சு. அலுமினியத்துல இரும்பு ஒட்டாதேன்னு பார்க்கறீங்களா? மாடசாமிதான் வெல்ட் பண்ணினான். ஒரு பக்கம் சூடு ஏத்தி நிதானமா செஞ்சான்."

''மோட்டார் ரிப்பேர் யார் பார்க்கறது, ஸ்ரீநி வாசனா?''

''ஆமா சார்...எப்படி உங்களுக்குத் தெரியும்?''

''வேற என்ன கஷ்டம் உங்களுக்கு?''

''கஷ்டம்னா எல்லாம் கஷ்டம்தான்.''

''சொல்லு.''

''சாப்பாடு சரியில்லை. படுக்கற இடம் சரியில்லை. கக்கூஸ் சரியில்லை. குளிக்கறதுக்குத் தண்ணி இல்லை. ஊர்பட்ட மரநாற்காலி கொண்டுவந்து போட்டு உடனே ரிப்பேர் பண்ணுன்னுவாரு. டூல்ஸ் இல்லை. இன்னிக்குத் திருட்டுத்தனமா குளிச்சோம். நிக்க வச்சு அடிச்சாரு, பாருங்க முதுகை.'' அவன் முதுகிலும் கோடு தெரிந்தது.

''உன்னைய பலமா அடிக்கலைபோல இருக்கு.''

''அடிச்சாரு. நான் பக்குவமா வளைஞ்சுட்டேன். சார் நீங்கதான் அடுத்த அதிகாரியா?''

''தெரியலை. வரமாட்டேன்னு தோணுது.''

''அதானே, இவரு போமாட்டாரு இந்த இடம் விட்டு.''

''ஏன்?''

''வேலையில்லாத இடம். வெளிலேர்ந்து எங்களுக்கு வர ரேடியோ பொட்டி, டிவிலேர்ந்து பிஸ்கட் பொட்டலம் வரைக்கும இவரே தள்ளிக்கறாரு. எப்ப வேணா வூட்டுக்குப் போய் படுத்துக்கலாம். வாரத்துக்கு ஒரு நாள் கவுச்சி போடணும்னு சட்டம்.மாசத்துக்கு ஒரு நாள் போட்டா அதிசயம். இங்க போட்ட காய்கறி அத்தினியும் வெளிய வித்துருவாரு. கேட்டா குழம்புல

போட்டேன்னுடுவாரு அந்த அம்மா பேஜாரு. அரை அவருகூட தண்ணி உடாது. நாப்பத்தெட்டு பேர் அரை அவர்ல...''

''நீ போ உன் இடத்துக்கு.''

சரவணன் குழம்பினார், இவன் சொல்வதற்கும் மேல், உள்ளே ஊழல்கள் இருக்கும் என்று தெரிந்து விட்டது. இது இயல்பு. எனினும் என்ன பொருள் கணக்குத் தரப்படும். எது இருக்கும், எது இருக்காது என்பது தெரியவில்லை.

வாசலுக்கு வந்தார். கதிரவன் பாராவுடன் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. இவரைப் பார்த்த உடன் கதிரவன் விரைப்பாய் சல்யூட் செய்தார். வழக்கமாகச் செய்பவரல்ல. மற்ற ஆட்கள் முன் பணிவு அதிகம் காண் பித்தால்தான் அவர்களும் பணிவாய் இருக்க சரிப்படும் என்று புரிந்து செய்கிறார்.

''உள்ள வாங்க'' சூப்பரின்டெண்டெண்ட் அறைக் குள் போனார். கதிரவன் நுழைய, கதவு சாத்தச் சொன் னார்.

''டேஞ்ஜரான இடம் சார். பசங்க ஒன்பதாச்சுன்னா வெளிய வந்துடறாங்க.''

''எப்படி?''

''சுவர் ஏறி குதிச்சு வராங்க' சின்னச் சின்ன திருட்டு அடிக்கடி நடக்குது. பசங்க செய்யறாங்கன்னு பப்ளிக் எண்ணம். போனவாரம் வெத்தலைப்பாக்குக் கடை உடைச்சு சப்ஜாடா வாரிக்கிட்டு போயிட்டாங்களாம். வாய்க் கட்டிப் போட்டாங்களாம். பெரிய பையன்னு யாரோ ஒருத்தனுக்கும் இங்க ஒரு சோத்துக்கடை பொம் பளைக்கும் தொடர்பாம். உடைமஸ்தன் மிரட்டினா அடிச்சுப் போட்டு உள்ளபோயிடறாங்களாம் இன்னொரு

மோசமான விஷயம். உள்ள கஞ்சா டப்பா டப்பாவா இருக்குதுன்னு பேச்சு சோத்துக்கடை பொம்பளை உள்ள கொண்டாந்து வச்சு அப்பப்ப வாங்கறான்னு சொல்றாங்க. உள்ள ஆளுங்க உடந்தை இல்லாம இதெல்லாம் நடக்குங்களா ரொம்ப சுத்தம் பண்ணணும்''

''இங்கித்து அதிகாரியோட சம்சாரம பத்தியும் சரியா பேச்சு வரலைங்க. நான் அது அதிகம் கேட்டுக்கலை. நமக்கு என்னன்னுவுட்டுட்டேன்.'

''நாளைக்கு சார்ஜ் தராராம்.''

''பார்த்து வாங்கணும். டிக்கெட் விக்கறான் பார்த்தீங்களா, வாசல்ல?''

''சமையல்கட்டு போய் பாருங்க. பாதாளபைரவி குகை மாதிரி இருக்கு.''

''நிறைய வேலை இருக்குய்யா.''

''அம்மாவை எப்ப வரவழைக்கறதுன்னு முடிவு பண்ணணும்.''

''அம்மாவுக்குப் புடிக்காதுங்க இந்த இடம்.''

''ஏன்?''

''ஓட்டு வீடு பக்கத்துலேயே பசங்க புழங்கற இடம். கூவம் கரை ஓரம். கொசு இருக்கும். பக்கத்துல சேரி அங்க பெரிய இடமா நாலு பேர் வர கொள்ள புழங்கிட்டு இருந்தவங்க. இங்க யார்கூட பேசுவாங்க? உங்களோடயும், என்னோடயும்தான்.''

''போறாதா?''

''உங்கக்கிட்ட என்னைத் திட்டுவாங்க. என்கிட்ட உங்களைத் திட்டுவாங்க. அம்மா வர மாட்டாங்க.''

''ஏன்?''

''அவங்க வீடு இறுக்கி வச்சுக்கும், இங்கயே இருன்னுடும்.''

''நல்லது. இருக்கட்டும்.''

''நல்லதில்லீங்க.''

''ஏன்?''

''புருஷனைப் பிரிஞ்ச பொம்பளையும், தரைல கிடக்கற கொடியும்.''

''என்ன ஆவும்?''

''பட்டுப் போயிடும். இல்ல...''

''இல்ல...?''

''பக்கத்துல கிடைக்கறது மேல படர்ந்துடும். மாட்டேன்னா கூட சண்டைபோட்டு இட்டாந்துடுங்க ஐயா.''

''நான் போலீஸ்காரனே இல்லைன்றா.''

''நிஜமான போலீஸ்காரனுக்கு வாழ்க்கைப்பட்டா நாலு நாள் குடித்தனம் பண்ண முடியாது அந்த அம்மாவால.''

''குழந்தையா இருந்தா அதட்டிக் கூப்பிடலாம். தர தரன்னு இழுத்துட்டும் வரலாம்.''

''பொம்பளைக்கு உடம்புலதான் வயசு. மனசு நின்னுடும், ஒரு இடத்துல. அப்புறம் எத்தினிப்பட்டாலும் என்னா சொன்னாலும் ஏறாது.''

''நாளைக்குக் காலைல சார்ஜ் எடுக்கறேன் பொட்டி படுக்கைய ஸ்டேஷன்லேர்ந்து கொண்டாந்துடுங்க.''

''வீடு?''

''ஒரு வாரம் ஆகுமாம்.'

'அது மட்டும்...''

''இங்க இந்த வராண்டாலயே.''

''நல்லா இருக்குமா?''

''இருக்காது. ஆனா இடம் புரிஞ்சுக்க உதவிப்படும். கொண்டாந்துடுங்க கதிரவன்.''

பிற்பகலில் பொய்யான உபச்சாரம், தேவையில்லாத அரட்டை, காரமான உணவு அளவுக்கதிகமாகப் பரிமாறி உண்ணச் சொல்லி வற்புறுத்தி ஒரு மணி நேரம் போயிற்று.

''கருவாடு நல்லா இருந்துச்சா? இங்கனயே வெட்டி இங்கனயே போட்டது'' பல் தெரிய கேட்டபோது...

''அதான பார்த்தேன், ரொம்ப நல்லாயிருந்துச் சும்மா'' என்று பொய் சொல்ல வேண்டியிருந்தது. ஹெட்கான்ஸ்டபிளுடன் உட்கார்ந்து ஆபீஸ் உடமைகளை, உள்ளே பள்ளியின் உடமைகளைச் சரிபார்ப்பதில் ஏழு மணி நேரம் கழிந்தது.

''காலைல சீக்கிரம் வந்துருங்க. எப்ப டியூட்டி?''

''நீங்க சொல்ற நேரம்தான் ஐயா.''

''தேவையில்லை. நாளைக்கு மட்டும் சீக்கிரம் வந்துருங்க. அப்புறம் உங்க டியூட்டி டயம்படி வரலாம்' செக்யூரிடி ரொம்ப லூசா இருக்கு. அது பத்தியும் பேசணும்.'

''பேசலாம் ஐயா.''

எல்லாப் போலீஸ் கான்ஸ்டபிள்களும் மிகப் பணி வானவர்கள். ஆனால் கட்டளைக்கு மேல் இம்மி கூட நடக்க மாட்டார்கள்.

"ஏன்யா மரம் மாதிரி வாசல்ல நிக்கிற? போன் அடிக்கறது கேட்கல?"

"கேட்குது சார். நான் பாரால இருக்கச் சொல்ல போன் எடுக்கக் கூடாது சார்."

"ஏன், எடுத்தா என்ன?"

"யாருய்யா நீ...பாராவா? போன்கிட்ட உட்கார்ந்து என்ன புடுங்கறன்னு திட்டுவாங்க சார். எடுத்தாலும் திட்டு, எடுக்காட்டியும் திட்டு. எடுத்திட்டு திட்டு வாங் கிக்கறதுக்கு எடுக்காமலே வாங்கிக்கலாம்."

"யோவ் உன்னை..."

"தண்ணி இல்லாத காட்டுக்கு மாத்தப் போறீங்க அதானே, நான் ரெடி. ஒரு கிராமத்திலே நாலு குடிசை இருந்தா அஞ்சாவது குடிசை சாராயக்கடை. மாமூல் வெட்டாதயா பூடுவான். இப்பவெல்லாம் நாட்டுப்புறத் துலதான் கலெக்ஷன் ஜாஸ்தி."

இங்கேயும் இந்த நிலை விதிவிலக்கல்ல. அரசு உத்தி யோகம் என்பதால் பலவிதமாய் லீவு போட வாய்ப்பிருக் கிறது. மெத்தனம் இயல்பு. முறைக்க மாட்டார்கள். 'முடியாது' என்று சொல்ல மாட்டார்கள். 'நாளைக் காலைல சீக்கிரம் வா வேலையிருக்கு' என்றால் 'கடும் வயிற்று வலி என்று விடுப்பு எடுப்பார்கள். போலீஸ் கான்ஸ்டபிளுக்கு இது சந்தோஷமான இடம் அல்ல. பனிஷ்மென்ட் ஏரியா.

எட்டு மணிக்குக் கதிரவனும், சரவணனும் மெல்ல சாலையைச் சுற்றி பின் பக்கம் வந்தார்கள். இரண்டு

ஆள் உயரச் சுவர். அதற்கு மேல் கண்ணாடித் துண்டுகள், இரும்பு ஆங்கிள் அமைத்து முள்வேலி, கூவம் கரையில் குப்பை மேடாய் இருந்த இடத்துக்கு நேரே முள்வேலியில் நூல் தொங்கியது, ஏதாவது துணி மாட்டிக் கொண்டு இழுக்கப்பட்டிருக்கலாம். மெல்லிய விளக்கொளியில் கவனமாய் ஆராய கழிவு நீர் போகும் இடம் தெரிந்தது. சுவருக்கு வெகு அருகே சிமெண்ட் ஸ்லாப் போடப்பட்டு மறைந்திருந்தது. எட்டு வயது சிறுவன் வர முடியும், இளைஞன் வர முடியாது. சாக்கடையில் நுழைந்து வந்தாலும் எட்டு வயது சிமெண்ட் ஸ்லாப் நகர்த்த முடியுமா?

பெரிய பையன் எப்படி வெளியே வர முடியும்? வேறு ஏதோ வழியிருக்க வேண்டும். வேண்டுமென்கிற போது எப்படிக் கஞ்சா வெளியே அனுப்ப முடியும்? குரல் கொடுப்பார்கள். தூக்கி எறியப்படுமா?

குப்பையை விட்டு வெளியே வர, ஒரு நாய் வந்து வாலாட்டியது. கதிரவன் கால் உதைக்க, ஓடி ஒளிந்து அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தது.

ஆட்டோ பிடித்து உயர்ந்த ரக மாமிச உணவு சாப்பிட்டு விட்டு மறுபடியும் பள்ளிக்கு வந்தார்கள். வாசல் கதவு அழுத்திச் சாத்தப்பட்டு பூட்டு போடப்பட்டிருந்தது. அசைக்க, வேறு ஒரு பாரா ஆள் விவரம் கேட்டு சல்யூட் அடித்தான். கதவு திறந்து விட்டான்.

"ஐயா. கட்டில் அனுப்பினாங்க சார்." நீண்ட மடக்குக் கட்டில். பிளாஸ்டிக் ஒயர் பின்னப்பட்டு பரப்பப் பட்டிருந்தது. ஆபீஸ் அறைக்கு எதிர் அறையில் கட்டில் போடச் சொல்லி, லுங்கியும் சட்டையுமாய் உட்கார்ந்தார். குற்றவாளிகள் பற்றிய கோப்புகளைப் படித்தார்.

யாரோ தன்னைக் கவனிப்பது போல் உணர்ந்தார். கோப்புகளை அடுக்கிவிட்டு விளக்கணைத்தார். கட்டிலில்

படுத்துக் கொண்டார். பின்னால் நாய் குரைக்கும் சப்தம் கேட்டது. காக்கைகள் சிறகடித்துப் பறந்தன. 'நொட்' என்று மூங்கில் கழி போல் ஏதோ ஒன்று மோதிய ஒலி வந்தது. மிக லேசாய் பேச்சுக் குரல்கள் கேட்டன.

சரவணன் ஓசைப்படாமல் சூட்கேஸ் திறந்து பெரிய டார்ச் எடுத்துக் கொண்டார். லுங்கி மீது பெல்ட் கட்டிக் கொண்டார் ஹவாய் சப்பல் போட்டு சட்டையை இழுத்துச் சரி பண்ணிக் கதவு திறந்தார். வெளியேறாது காத்திருந்தார். உள்ளே கும்மிருட்டு. மெல்ல எட்டி இருட்டைத் துழாவினார். வாசல் கதவு திறந்தார் ரோட்டு வெளிச்சம் உள்ளே வரும். ஆள் நிற்பது தெரிந்து போகும். மெல்ல கால் தடவி இருட்டிலேயே முன்னேறி னார். இன்னொரு கதவு திறந்தால் முற்றம். மெல்ல கதவு இழுக்க, உள்ளே அந்தப் பக்கம் பூட்டப்பட்டிருந் தது. ஆக, வாசல் வழியே வெளியேறினால் தெரியாது இல்லை. கதவு பூட்டி விட்டு ஓட்டை வழியே யாரேனும் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தால் தெரியும். பூட்டின கதவுக்கு அருகே நகர்ந்து காது வைத்து கேட்க, நடமாடும் ஓசைகள் கேட்டன மொத்த பள்ளிக்கூடமும் விழித் திருக்கிறது என்பதாய் பட்டது. என்ன செய்கிறார்கள், கதிரவன் எங்கே?

அறைக்குள் போனார். அறையை ஒட்டி அலுவலர் களுக்காக உள்ள லெட்ரினுக்குள் போனார். சிறிய வெண்டிலேட்டர் இருந்தது. கட்டடத்தின் பக்கச் சுவரு டைய பரப்பு தெரிந்தது. வெண்டிலேட்டர் கண்ணாடியை மெல்ல திறந்து இருட்டை உற்றுப் பார்க்க, கட்டடச் சுவருக்கும்—காம்பவுண்டு சுவருக்கும் இடையே ஒரு ஆள் நகர்ந்து கொண்டிருந்தான். இருபதடி இடைவெளி இருக்குமே. எப்படி...எப்படி? உற்றுப் பார்க்க, மூங்கில் கழி மேல் மாடிக்கும் காம்பவுண்ட் சுவருக்கும் வைக்கப் பட்டு, ஒன்றன் பின் ஒன்றாய் ஆட்கள் நகர்ந்து கொண்

டிருப்பது தெருவிளக்கு வெளிச்சத்தில் தெரிந்தது. விழுந் தால் பதினைந்து அடி உயரத்திலிருந்து விழ வேண்டும்.

இது பெரிய உயரமில்லை. விழுந்து எழுந்து ஓடி விடலாம். சுவர் தாண்டி எங்கே போகிறார்கள்? இவ் வளவு சுலபமாய் போக ஏன் அனுமதிக்கிறார்கள்? வெளியே ஏதாவது வம்பில் மாட்டிக்கொண்டு விட்டால் யார் பொறுப்பு?

குறைந்த பட்ச காவல்கூட இல்லாத இடம். ஆட்கள் நடப்பது நின்று விட்டது. மீண்டும் அமைதியாயிற்று.

சரவணன் வாசல் கதவு திறந்து கட்டடத்தின் முன் பக்கம் வந்தார். தோட்டத்தில் இறங்கி மூங்கில் கழி பாலத்துக்கு அடியில் போய் நின்றார். நின்ற இடத்தில், மணல் போடப்பட்டிருந்தது. விழுந்தால்கூட அடிபடக் கூடாது என்கிற கவனம் தெரிந்தது.

'உர்' என்கிற மிருக சப்தம் கேட்டது. டார்ச் அடித் தார். ஒரு நாய் நின்று கொண்டு முன் பற்களைக் காட் டிற்று. இதுதான் குரைத்ததா? மறுபடி அதன் மீது டார்ச் அடித்து அருகே கூப்பிட்டார். வால் குழைத்து வந்து முகர்ந்தது. இதை எங்கேயோ பார்த்தோமே...

ஆ...கூவம் கரையில், பின்பக்கம் சுவர் அருகே... இது எப்படி உள்ளே வந்தது, வாசல் வழியாகவா? நாய் கால்களில் கறுப்பாய் சாக்கடை தடயங்கள் இருந்தன.

''ச்சு போ. போ...'' குனிந்து கல் எடுத்து விரட்டி னார். நாய் பதுங்கிற்று, மேலும் விரட்டினார். சுற்றுச் சுவர் பக்கமாகவே ஓடி பின்பக்கம் அடைந்தது. அவரும் தொடர்ந்து பின்னே போய், மறுபடி கல் எடுத்துப் போட்டார். நாய் பளீரென்று மறைந்தது. டார்ச் அடிக்க

சுவர் பக்கத்து சாக்கடையில் நுழைந்துச் சுவருக்கு மறு பக்கம் வெளியேறி விட்டது தெரிந்தது. உதடு குவித்து மறுபடி நாயைக் கூப்பிட, தலைமட்டும் சாக்கடைக்கு வெளியே தெரிந்தது. எழுந்து பின்னடைந்து மறுபடி கூப்பிட, வெளியே வந்தது. நாய் கழுத்தில் நூல் மாட்டப் பட்டிருந்தது. நூலின் நுனியில் பிளாஸ்டிக் காகிதம் கட்டை விரல் பரப்புக்குத் தெரிந்தது. சட்டென்று அறுத் தார். கனமான பிளாஸ்டிக் பால் கவர். அதாவது நாய் கழுத்தில் பால் கவர் தொங்க விடப்பட்டிருந்தது.

பால் கவரில் என்ன இருக்கும்? பாலா... வேறெ தாவதா? தரையை டார்ச் அடித்து ஆராய, நாலு நபர் களின் கால் தடயங்கள் தெரிந்தன. பின்பக்க கதவு தள்ள, கட்டடத்துக்கு உள்ளே பூட்டப்பட்டிருந்தது.

உள்ளே 'தடே'ரென்று ஏதோ டப்பா விழும் ஓசை கேட்டது.

பின்பக்கக் கதவும் பூட்டப்பட்டிருக்கிறது. முன் பக்கக் கதவும் தாழிட்டிருக்கிறது. எப்படி உள்ளே போவது...?

மறுபடியும் மூங்கில் கழி இடத்துக்கு வந்தார். கூரை யிலிருந்து மழைத் தண்ணீர் போகும் சிமெண்ட் பைப் இருந்தது. டார்ச்சை லுங்கியில் சொருகி பைப் பிடித்து ஏறினார். பைப் நகர்ந்தது. ஆணிகள் பிடுங்கிக்கொள் வதை உணர முடிந்தது. இன்னும் ஒரு ஜம்ப், ஜன்னல் கிடைத்து விடும்.

எகிறி ஜன்னல் பிடித்தார். அவர் விட்டதும் பைப் பாதியாய் ஒடிந்து தடேரென்று விழுந்தது. ஜன்னலைப் பிடித்துக் கொண்டு தொங்கினார். மூச்சு பிடித்து உடம்பு மேலேற்றி சுவர்க் கட்டை மீது கால் வைத்தார்.

ஜன்னல் அவர் கனம் தாளாமல், லேசாய் இடம் பெயர்ந் திருப்பது தெரிந்தது. சுவர் பிடித்து விளிம்போரம் நடந்து மூங்கில் கழி அருகே வந்து கம்பிகள் அகற்றப் பட்ட அந்த ஜன்னலுக்கு வந்து உள்ளே குதித்தார்.

இதுதான் பையன்கள் படுக்கும் இடம்... மெல்லிய குறட்டை சப்தங்கள் கேட்டன. யாரோ முனகும் ஒலி எழுப்பினார்கள். டார்ச் பொத்திக் கொண்டு போட்டார் சில பாய்கள் காலியாக இருந்தன.

கடைசிப் பாய்க்குப் போய் உட்கார்ந்து கொண்டார். சட்டைப் பையிலிருந்து சிகரெட்டும் நெருப்புப் பெட்டி யும் எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டார்.

கீழே மறுபடி ஓசை கேட்டது.

கீழே போகலாமா? மெல்ல கதவருகே போனபோது சுவர் மீது ஆட்கள் நகருவதும், மூங்கில் அசைவதும் தெரிந்தன. சட்டென்று ஹாலிலிருந்து ஒரு தீக்குச்சி சர்ரென்று எரிந்து ஜன்னலுக்குப் போயிற்று.

கட்டை விரலைத் தீப்பெட்டி மீது வைத்து யாரோ நெருப்பு அடிக்கிறார்கள். உள்ளே வருவதை எச்சரிக் கிறார்கள்.

கீழே போகலாமா...மூங்கில் கழியைக் கவனிக்க லாமா?

வேகமாய் நடந்து மூங்கில் கழி எடுத்து தரையில் தள்ளினார். பெரும் ஓசையுடன் அது தோட்டத்தில் விழுந்தது. கதவு திறந்து இறங்கிக் கீழே போனார். படிகள் வழியே திறந்த முற்றம். இறங்கினார். ஸ்டோர் ரூமில் விளக்கு எரிந்தது. கதவு மூடப்பட்டிருந்தது.

அருகே போய் பளீரென்று திறந்தார். அங்கே கதிரவன் நின்று கொண்டிருந்தார்.

''என்ன கதிரவன்?'' கதிரவன் சல்யூட் செய்தார்.

''இந்த இடம் தப்பா இருக்கு ஐயா.''

''என்ன?''

''கிட்டதட்ட இருபது கிலோ கஞ்சா வச்சிருக்கு.''

''கறுப்பாகிப் போன பிஸ்கட் டின் திறந்தார். கட்டி கட்டியாய் உலர்த்தி, அழுத்தி வைக்கப்பட்ட தாவரம் தெரிந்தது. முகர, நெடியடித்தது.

''என்ன விலை இருக்கும்?''

''அஞ்சாயிரம் ஆறாயிரம் இருக்கும்.''

''எங்க இருந்தது?''

''பரணைல. இன்னும் தேடணும்.''

''வேணாம், வாங்க.''

''ஏன் சார்?''

''நான் இன்னும் சார்ஜ் எடுக்கலை.''

''கண்டு பிடிச்சதைப் பழைய அதிகாரிக்குச் சொல்லலாம் சார்..'

''அவருக்குத் தெரிஞ்சே நடக்கறதா இருந்தா.''

''அப்படியா சொல்றீங்க?''

''அப்படியும் இருக்கலாம்.''

''சார்...''

''போய் படுங்க.''

''மாடில ஏதோ உடையற சத்தம் கேட்டுது ஐயா.''

"நான்தான். பைப் பிடிச்சு ஏறினேன். உடைஞ்சிருச்சு."

"விட்டுரணுமா?"

"ஆமா, நாளைக்கு பார்த்துக்குவம்."

சட்டையைக் கழற்றி விட்டுப் படுத்தார். முழங்கால் எரிந்தது. கண் சொக்கி இழுத்தது. அப்படியே தூங்கப் போனார்.

# 7

"ஒரு கறுப்பு வெள்ளை டி.வி.யும், மூணு பாண்ட் ரேடியோவும் வரணுங்க." சரவணன் மரியாதையாய் கேட்டார்.

"ஆமா தம்பி என்கிட்ட இருக்குது வூட்ல. போற போது தரேனே,"

"வேணாங்க, கையெழுத்து போடறதுக்கு முன்ன வந்துட்டறது நல்லதுங்க."

"வீட்ல பார்ப்பாங்க, அதான்..."

"உங்களுக்கு வாங்க முடியாத டி.வி.யா? அரசு உடமை சரியா பார்த்து வாங்கறது நல்லது."

"இங்க கொண்டாந்தா குரங்குப் பசங்க உடைச்சு ஒடு பொறுக்கிடுவானுங்க."

"ஒண்ணும் ஆவாதுங்க."

"கண்டிப்பா கொடுத்துடணுமா?"

"அதாங்க அரசுச் சட்டம்."

"டேய் பெரிய பையா...கையெழுத்து போட்டுருங்க."

"மோட்டார் ரிப்பேர்னும் போடணுங்க. இப்ப வரைக்கும் வேலை செய்யலை."

"செய்துடலாம் போடுங்க."

"செய்துட்ட பிறகு போடட்டுங்களா?'

"நேத்திக்குதான்யா உடைச்சுட்டான்க."

"புரியுதுங்க"

"போட்டுருங்களேன், கையெழுத்தை."

"ரிப்பேர்னு எழுதிப் போடட்டுமா?"

"போடுங்கோ. உங்க இஷ்டத்துக்கு எழுதிப் போடுங்க."

"இது தவிர, இதுல வராத ப்ராப்பர்டி ஒண்ணு இருக்குதுங்க."

"என்ன அது?"

"இந்த டப்பா."

"என்ன டப்பா?"

"தெரியலீங்க. நம்ம ஆர்டர்லீ இது யாருதுன்னு கேட்டாராம் பசங்கக்கிட்ட. பதில் சொல்லலையாம் யாரும்."

"என்ன இது?"

சரவணன் திறந்து காட்டினார்.

அதிகாரி முகர்ந்து பார்த்தார். கைவிட்டு விரலால் புரட்டிப் பார்த்தார். வியந்தார். ஆக இவருக்குத் தெரியவில்லை.

''கஞ்சா...கஞ்சா, சரவணன்.''

''எப்படிக் கண்டு பிடிச்சீங்க?''

''எதேச்சையா கிடைச்சதுங்க. பதினஞ்சரைக் கிலோ இருக்குங்க.''

''ஐயோ...வெளியே தெரிஞ்சா எனக்குல்ல பிளாக் மார்க் கிடைக்கும்...?''

''எனக்கும் அதாங்க பயம். அதான் விவரம் கேட்டுக் கலாம்னு...''

''நான் வச்சிருக்கறதா நினைச்சுட்டீங்களா?''

''இல்லீங்க. நீங்க கொஞ்சம் முரட்டு சுபாவமே தவிர, இப்படி...''

''ம்மாள கொன்னுடறம் பார் '' பளீரென்று கோட் ஸ்டாண்டிலிருந்து பிரம்பு உருவினார் புயல் மாதிரி வெளியே போனார். ''பைல்...'' கூச்சல் கேட்டது.

சரவணன் பெருமூச்சு விட்டார்.

''ஜாதி கெட்ட நாய்களா...பெத்த தகப்பன் மாதிரிப் பார்த்துப் பார்த்து செஞ்சேன்.மாத்தலாகிப் போறபோது மூஞ்சில, மலத்தைத் தடவிட்டீங்களேடா. அடுத்த ஆபீஸர் சார்ஜ் எடுக்கறதுக்கு முன்னாடி கண்டுபிடிச்சு கேட்கற மாதிரிப் பண்ணிட்டீங்களேடா. யாருடா...யாரு வச்சது இந்த டின்னை...மரியாதையா சொல்லிடுங்க...''

''......''

''நான் அடிக்க ஆரம்பிச்சா ரத்தம் வழியாத போவாது...சொல்லு. யாரு டின்னு இது?''

''எனக்குத் தெரியும் சார்'' ஆறுமுகம் கை தூக்கினான்.

''சொல்லு.''

''இது ஸ்டோர்ல இருந்தது சார். நேத்து பார்த்தேன்.''

''யார் வச்சது?''

''தெரியாது சார்.''

''நீ வந்தது மூந்தா நேத்து. உனக்கென்ன மயிரத் தெரியும்? போடா.'' சுளீரென்று பிரம்பு அவன் முகத்தில் அடித்தது. அவன் பொத்திக் கொண்டு உட்கார்ந்தான்.

''சொல்லுங்கடா...யார் டின் இது?''

''டேய்...பார்ப்பான்...இங்க வா.''

ஸ்ரீநிவாசன் முன்னேறினான்.

''சொல்லு, யாரு?''

''தெரியாது சார்.''

மறுபடி அடி விழுந்தது.

''தெரியாது சார்.''

இடதும், வலதும், மேலும், கீழுமா பிரம்பு பறந்து பறந்து தாக்கிற்று.

ஸ்ரீநிவாசன் அலறினான். கீழே உருண்டு துடித்தான்.

''உன் கூட்டத்து ஆள் சொல்ற வரைக்கும், நீதான் அடிபடப்போற. சொல்லு, யாரு சொல்லு.''

மேலும் ஆறு அடிகள் விழுந்தன.

சரவணன் மெல்ல முன்னேறி அவரைத் தொட்டார் ''போறும், விடுங்க ''

' நீங்க விடுங்க சரவணன். என்கிட்டயே ஆட்டம் காட்டறானுங்க. ஏய்—பெரிய வீட்டு பொறுக்கி வாடா இங்கே...'' ரமேஷை கை காட்டினார்.

ரமேஷ் முன்னேறினான்.

''சொல்லு, யாரு?''

''ஐ டோண்ட் நோ.''

''ஓத்தா...இங்கிலீஷ்...மயிரு இங்கிலீஷ்.'' சுளீர் சுளீரென்று புஜங்களில் பிரம்பு இறங்கியது. ரமேஷ் அலறினான்.

''ப்ளடி ப்ரூட்... '' என்று கத்தினான்.

''என்ன...என்ன சொன்னே...'' மயிரைக் கொத்தாகப் பிடித்து மண்டி போட வைத்தார். ''யோவ் ஏட்டு இவனைத் தூண்ல கட்டு.''

''ப்ளீஸ்...வேணாம் சார்.''

''சரவணன் இதுல தலையிடாதீங்க.''

''இது இருந்துச்சுன்னா ரிப்போர்ட் எழுதுவீங்க. என்கிட்ட இந்த மாதிரி டப்பா இருந்துதுன்னு எழுதச் சொல்லி கையெழுத்து கேட்டீங்க. நான் செங்கல்பட் க்ரைம்ல உட்கார்ந்துக்கிட்டு கஞ்சா டப்பா பத்தி கவலைப்பட்டுக்கிட்டு கிடக்கணுமா? ரெண்டுல ஒண்ணு பார்த்துடறேன்.''

''நான் எழுதலை, விடுங்க.''

''எனக்கு வேணாம் உங்க தயவு. சொல்லுடா. யாரு டப்பா அது.'' மறுபடி ரமேஷுக்கு அடி விழுந்தது.

''வச்சவனைக் கண்டு பிடிச்சு விசாரி. காட்டான் மாதிரி என்னை ஏன் அடிக்கறே?''

''உன்னிய...உன்னிய...'' அவன் சட்டையை உலுக்க, பெரிய பையன் முன்னே வந்தான்.

''என் டப்பா சார் அது''

ரமேஷின் சட்டை விடப்பட்டது.

''என்னா...?''

''என் டப்பா அது. என் பொருள் அது.''

''ஏது உனக்கு?''

''கூவம் கரைல ஒரு ஆளு பத்திரமா வச்சுக்கச் சொல்லிக் கொடுத்தாரு ''

''என்ன அதுன்னு தெரியுமா?''

''கஞ்சா.''

''யார் அவன் உன்கிட்ட கொடுத்தவன்?''

''உயிர் போனாலும் சொல்ல மாட்டேன்.''

''உயிர் போகாத வரவழைக்கிறேன்டா.ஏட்டு மிளகா எடுத்தாய்யா.''

மயிரைக் கொத்தாய் பிடித்து ஸ்டோர் ரூம் அழைத்துப்போனார். போகும் போதே அவன் அரைநிக்கரை அவிழ்த்து இழுத்தார். கருத்த பிருஷ்டங்களுடன் அவன் உள்ளே போனான். ஐந்து நிமிடத்தில் பேய் அலறல் கேட்டது.

சரவணன் டப்பாவில் கதிரவனைக் கொஞ்சம் டீசல் ஊற்றச் சொன்னார். நெருப்புக் குச்சி கிழித்து டப்பாவில் போடச் சொன்னார்.

சரக்கு தீப்பற்றி எரிந்தது. நீலமாய் புகை எழுப்பி திணற அடித்தது மொத்தமும் சாம்பலாயிற்று. பெரிய பையன் முதுகு குனிந்து கால் பரப்பி உள்ளே வந்தான்.

சரவணன் உடமைகள் பட்டியலில் கையெழுத்து போட்டார். காலை பத்து மணியிலிருந்து சார்ஜ் எடுத்துக் கொண்டார்.

''கம்பனீய்...சல்யூட்.''

போலீஸ் ஊழியர்களிடம் விடைபெற்றுக் கொண்டார். பையன்கள் வரிசையாகி நம்பர் சொன்னார்கள்.

''இந்த நிமிஷத்துலேர்ந்து திரு சரவணன் சூப்ரின்டெண்டெண்ட் ஆஃப் போலீஸ் உங்களுக்கு அதிகாரியா இருப்பாரு. ஒழுங்கா இருந்து உதைபடாத, நல்லபடியா வூட்டுக்குப் போங்க. வந்த முத நாளே உங்க வண்ட வாளம் அவருக்குத் தெரிஞ்சு போச்சு, வால் ஆட்டினாக்க ஒட்ட நறுக்கிடுவார். சொல்லிட்டேன்.''

''சரவணன், இந்த நிமிஷத்துலேர்ந்து இங்க நீங்க அதிகாரி.''

''யெஸ் சார்.'' நிதானமாய் சரவணன் சல்யூட் அடித்தார்.

''ஆல் த பெஸ்ட்.''

''தாங்க்யூ சார்.''

''என்னிய கேட்காத டப்பா பொருளை எரிச்சது தவறு. இருந்தாலும் இதைப் பெரிசு பண்ணாத வுடறேன்.''

''ஸாரி சார். ரிக்கார்ட்ல வரப்போறதில்லைன்னு அழிச்சுட்டேன் சார்.''

''ரிக்கார்ட் ஆகலைன்னா என்னா? தீர விசாரிச்சிருக்கலாமே.''

''ஸாரி சார்.''

''நான் வரேன்.''

''யெஸ் சார்.'' மறுபடி சல்யூட் ஏற்று பின்னடைய திரும்பி மாணவர்களைப் பார்த்தார்.

யார் கண்ணிலும் நட்பு இல்லை. மாறாய் கடும் சினம் தென்பட்டது.

''நீளமா நிறைய பேசறதுல அல்லது உங்களுக்கு அறிவுரை சொல்றதுல எனக்கு நம்பிக்கை இல்லை. இரண்டு நாள் முன்னால இங்க வந்து சேர்ந்த தம்பி ஆறுமுகம் 'ஏம்பா குத்தம் பண்ணின' அப்படின்னு கேட்ட போது 'தெரியலை சார்னு' சொன்னாரு. நீங்க எல்லாருமே அதே விதமா தெரியாததான் ஏதோ செய்துட்டு விதியேன்னு இங்க வந்துட்டீங்க.

''மறுபடியும் வந்த இடத்துல குத்தம் செய்தா அது உங்களுக்கும் கெடுதல், எனக்கும் கஷ்டம். எப்ப என்ன தப்பு பண்ணுவீங்கன்னு காத்துக்கிட்டு கிடந்து கண்டு பிடிச்சு பிரம்பால் அடிக்கலாம். வாழ்க்கையில் நீங்க வாங்கின அடி போதாதா? வெளியில எல்லாரும் சுதந்திரமா, சந்தோஷமா இருக்கறபோது உங்களுக்கு ஏன்யா இப்படி தலையெழுத்து? யார்கிட்டயோ அடிபட்டு துடிக்கணும்னு. வாழ்க்கையே அடிபட்டுப் போச்சு. பிரம்படி என்னன்னு நினைக்கறது முட்டாள் தனம்.

''எனக்குப் பிரம்புல நம்பிக்கை இல்லை. அதே சமயம் ஏதோ போகட்டும்னு பெரும்போக்கா போறதுக்கும் நான் வரலை. குடிசைக்குள்ள நுழையணும்னா குனிஞ்சுதான் போகணும். கோயிலுக்குள்ள போற போது அதுக்கேத்த படி போகணும். மதில் தாண்டிப் போகக்கூடாது.

''உங்க தேவைகளை என்கிட்ட சொல்லுங்க. முடிஞ்ச வரை நான் நிறைவேற்றி வைக்கிறேன். இந்த பிரம்பு பழைய அதிகாரி என்கிட்ட கொடுத்தது. எனக்கு இது தேவையில்லை.'' விசிறி எறிந்தார்.

''காலைல குளிச்சீங்களா?''

''இல்லை சார்.'' ஆறுமுகம் குரல் கொடுத்தான்.

''ஏன்?''

''மோட்டார் பிச்சுகிச்சு நேத்தி தண்ணி டேங்குல இருக்கு. அது அதிகாரிக்குத்தான் சரியா இருக்கும்.''

''சாயந்திரம் நாலு மணிக்குள்ள குளிக்கிற தண்ணி ஏற்பாடு பண்றேன். டிஸ்மிஸ். பெரிய பையனை என் ஆபீஸுக்குக் கூட்டிட்டு வாங்க கதிரவன் ''

உள்ளே போய் தன் ஸீட்டில் உட்கார்ந்து ஒரு நிமிடம் கண் மூடினார். அன்றைய தபாலின் முதல் கடிதம் பிரித்தார். எழும்பூர் லயன்ஸ் கிளப் கடிதம் எழுதியிருந்தது. வழக்கம் போல் இந்த காந்தி ஜெயந்திக்கும் இனிப்பு வழங்க வருவார்கள் என்றும், போன வருடம் அளித்தது போல இவ்வருடமும் பரிசுகள் தரப்படும் என்றும், போன வருடம் அளித்த டி. வி. மிக உபயோகமாக இருந்திருக்கும் என்று நம்புவதாய் எழுதப்பட்டிருந்தது.

''டொனேஷன் குடுத்த டிவிதானா...அதையா இவரு தூக்கி வீட்ல வச்சுக்கிட்டிருக்காரு.''

லயன்ஸ் கிளப்பை வரச்சொல்லி கடிதம் எழுத உத்தர விட்டார். டி.வி. மிக நன்றாய் இருக்கிறதென்றும், மிக்க உபயோகம் என்று பதிலில் சேர்க்கச் சொன்னார்.

பெரிய பையன் உள்ளே நுழைந்தான்.

''எங்க அடிச்சாரு? ஏன் இப்படி நடக்கற?''

''ஒண்ணுமில்ல சார்.''

''சொல்லு. மிளகா எங்கன்னாரே. ஏதாவது கடுமையா செய்துட்டாரா?''

''அடி பரவாயில்லை சார்.''

''ட்ராயர் அவுறு.''

''வேணாங்க சார்.''

''என் கிட்ட மருந்து இருக்குய்யா. அவுத்துடு.''

''விட்டுடுங்க சார்.''

''அவுறுய்யா. நானும் ஆம்பளைதானே.''

''தயவு செய்து மருந்து வேணாம்.''

''ஏன்?''

''தாங்க என்னால முடியும்.''

''டப்பால இருந்த மாதிரி தப்பான சமாச்சாரம் உள்ள வரக் கூடாது. எரிச்சது போக இன்னும் ஏதாவது மீதி இருந்தா அது இன்னும் அரைமணில வெளிய போயிடணும். சொல்லிடு.''

''சரி சார்.''

''மருந்து வேணாமா?''

''வேணாம்,''

''நாய் கழுத்துல பால் கவர் கட்டி என்ன வருது?''

''தெரியாது.''

''இனி நாய் உள்ள வராது. சம்பந்தப்பட்டவங்கள் கிட்ட சொல்லிடு.''

ஹெட் கான்ஸ்டபிளையும் ரைட்டரையும் கூப்பிட்டார் சமையல் ஆளை வரவழைத்தார்.

''ஒரு பிடி அரிசி, ஒரு கை பருப்பு, ஒரு டீ பொட்டலம் காணாமப் போனாக்கூட கடும் நடவடிக்கை எடுப்பேன்'' என்றார்.

காஷ் பேலன்ஸைப் பார்த்து தனியார் லாரி கம்பெனிக்கு ஃபோன் செய்து, லாரி தண்ணீர் கேட்

டார். கதிரவனைக் கூப்பிட்டு எலக்ட்ரீஷியனைக் கை யோடு வரவழைத்து மோட்டார் ரிப்பேர் செய்யச் சொன் னார். சமையல்காரனிடம் ஐம்பது ரூபாய் கொடுத்து அறுபது பேருக்கு பகலில் பாயசம் செய்யச் சொன்னார்.

''நானும் பசங்களோட சாப்பிடப் போறேன். ஸ்வீட் டோட சாப்பாடு ஆரம்பிப்போமே.''

''எதிர் ஓட்டல்ல நல்லா இருக்குங்க.''

''ஏன், உன் சமையல் நல்லா இருக்காதா?''

''இருக்கும்ங்க. அரிசில கல்லு. பருப்பு வேக மாட் டேன்னுது.''

''பரவாயில்லை.''

''எல்லாம் ஒரு ஸ்டண்ட்டுதான் '' சமையலறையில் நான்கு பையன்கள் சிரித்துக் கொண்டிருந்தார்கள். ''இனி அடிக்கறதே கிடையாதாம். அன்பால திருத்தப் போறாராம்.''

**''மாமா அடிச்சாரோ மல்லிக்கைப் பூச்செண்டாலே**
**மாமி அடிச்சாளோ தாமரைப் பூத்தண்டாலே''**

வாசலில் நிழல் கண்டதும் குனிந்து அரிசி களைந் தார்கள். கண்களால் பேசிக் கொண்டார்கள்.

''அரிசி இதுதான் சார். எவ்வளவு கல்லு தங்குது பாருங்க. கூட வெறகு கிடைச்சா பருப்பு நல்லா வேக வச்சுடுவேன். அதுவும் அளந்துதான் தராங்க. எண்ணெய் பரவாயில்லை.''

''பசங்களை விட்டு அரிசில கல் எடுத்து களைஞ்சு போடுங்க. கூடுதல் விறகுக்கு நான் ஏற்பாடு பண்றேன். சூப் மாதிரி செய்யத் தெரியுமா?''

''சூப்புன்னா?''

''காலைல கொடுக்கற அரிசிக் கஞ்சில காய்கறி களைச் சின்னதா வெட்டி வேக வச்சுப் போட்டுடுங்க''

''அதான் சூப்பா?''

''ஏன்?''

''எனக்கென்னமோ தோணுது. அரிசிக் கஞ்சியே பாதிப்பேர் கொட்டிடுவானுங்க.''

''ஏன்?''

''ராத்திரி, சாராயம் எவனோ குடிச்சுட்டு வந்துடு வான். டீ கொடுன்னு கத்துவான்.''

''புரியுது. இது வெளிய கொண்டு வாங்க''

பையன்கள் பசியோடு இருந்தார்கள். அரிசிக் கஞ்சி காய்கறிகளோடு இருப்பதை வியப்போடு பார்த் தார்கள்.

''என்ன இது இவையெல்லாம் போட்டுருக்கு... கீழ கொட்டி வாரீட்டீங்களா?''

''இது சூப்புடா...குடி.'' சமையல்காரன் அதட்டி னான்'

''ஏன், கஞ்சி என்னாச்சு?''

''குடிடா கசுமாலம்.''

''எனக்கு வேணாம் அது.''

''அப்ப போ.''

அவன் பாத்திரத்தை நடு முற்றத்தில் கவிழ்த்தான். ஒன்று இரண்டு மூன்று நான்கு பாத்திரங்கள் அப்படியே கவிழ்க்கப்பட்டன.

''நிறைய கீரை வாங்குங்க. இரண்டு வாரத்துக்குப் பிறகு நாமே தோட்டத்துல போட்டுக்கலாம்...''

''இடம் இல்லையே பயிர் பண்ண.''

''க்ரோட்டன்ஸ் எடுத்துட்டு கீரை விதம் வீதமா போடலாம்.''

''அழகு சார் குரோட்டன்ஸ்.''

''அதவிட பசங்க ஆரோக்கியம் முக்கியம். நாளைக்குத் தண்ணி விட்டு சமையலறைய சுரண்டறோம், அதான் வேலை சாயந்திரம் தண்ணி லாரி வருது. மறுநாள் நாமே வெள்ளையடிக்கறோம்.''

''அப்ப தச்சு வேலை, கயிறு பின்றது? '

''எதுவும் இல்லை. நம்ம இடம் நமக்கு முக்சியம்.''

அரை கொதியில் பீன்ஸூம். கோஸூம், உருளைக் கிழங்கும், வெங்காயமும் அரிசிக் கஞ்சியில் பொடியாய் நறுக்கிப் போடப்பட்டன.

''நல்லா இருக்குங்க.''

சரவணன் ருசித்தார்.

''நல்லா தான் இருக்கு.''

''பசங்க திட்டுவானுங்க சார்.''

''ஸ்டாப் இட்...''சரவணன் கத்தினார்.

''ஏன் கீழ கொட்டின?''

''எனக்குப் பிடிக்கலை.''

''குடிச்சுப் பாத்தியா?.''

''பார்க்கறதுக்கே புடிக்கலை எப்படிக் குடிக்கறது.''

''கொண்டா அதை.'' பாத்திரம் பிடுங்கி மறுபடி ஒரு கரண்டி சூப் ஊற்றினார். ''ட்ரை பண்ணு. நல்லா இல்லைன்னா நாளைக்கு வேறுவிதமா மாத்திடலாம்.''

மெல்லக் குடித்தான். முகம் மலர்ந்தான். காயகறிகளைக் கடித்துச் சுவைத்தான். "நல்லா இருக்குங்க."

அடுத்தவனுக்கு ஊற்றினார்

அவனும் சுவைத்தான். பெரிய பையன் குவளைக்கு ஊற்றினார். ஊற்றியது மறுபடி கொட்டப்பட்டது.

"என்ன சமாச்சாரம்?"

"போட்டா அரிசிக் கஞ்சி போடுங்க, இல்லையா போடாத வுட்டுருங்க. உங்க சாப்பாடு எல்லாம் எனக்கு வேணாம்."

"ஏன்?"

"நான் நாட்டுப்புறம், சூப் குடிக்க மாட்டேன்."

"நீ எது குடிக்கணும், எது குடிக்கக் கூடாதுன்னு எனக்குத் தெரியும் "

மறுபடி குவளையை நிரப்பினார்.

அதுவும் சாய்க்க முயற்சி செய்யப்பட. தடுத்து நிறுத்தினார். "இது இப்ப குடிக்கலை...நாலு நாளைக்கு ஒரு வாய் தண்ணி குடிக்க முடியாது."

குவளை சாய்க்கப்பட்டது, சூப் தரையில் சிதறியது.

"நெக்ஸ்ட்.'"

குவளைகள் நிரப்பப்பட்டன.

பெரிய பையன் சுவரோரம் போய் நின்று கொண்டான். அவன் முகத்தில் அலட்சியம் மின்னியது.

"எப்படி இருக்கு சூப் ஆறுமுகம்?"

"நல்லா இருக்கு சார் தொட்டுக்க ஊறுகா இருந்திச்சின்னா கூட. இன்னொரு கப் குடிக்கலாம்."

"ரமேஷ், மாடசாமி...எப்படி?"

"நல்லா இருக்குங்க."

"இன்னிக்குப் பகல்ல பாயசத்தோட சாப்பாடு. உங்க வேலை எதுக்கும் போவேணாம். நாலு பேர் வாசல்ல இருக்கற குரோட்டன்ஸ் பிடுங்கிப் போடுங்க. நாலு பேர் இடத்தைப் பெருக்குங்க மீதி ஆளுங்க என் கூட வாங்க. பெரிய பையன் இனிமே லீடர் இல்லை. ரமேஷ், நீ இன்சார்ஜ் எடுத்துக்க. கீழ கொட்டினது யாரு? கரிமுதீன், ஸ்ரீநிவாசன், மாணிக்கம்...இந்த இடத்த சுத்தம் பண்ணுங்க."

"பெரிய பையன் சமையலறை வாசல்ல நிக்கணும். ஒரு டம்ளர் தண்ணிகூட அவனுக்குக் கொடுக்கக் கூடாது. யாரும். வாங்க போலாம். ரமேஷ் இங்க வசதி என்ன குறைவு? எனக்குச் சொல்லு."

படுக்கற இடத்துல மூட்டப்பூச்சி சார். காத்தே வரலை. கக்கூஸ் ரொம்ப மோசம் சார்..."

"பிறகு?"

"எல்லா பாயும் கிழிஞ்சு இருக்குது. சிலருக்கு பாயே இல்லை."

"அது யார் தலைகாணி?"

"பெரிய பையனுது சார். அதிகாரி வீட்டுலேர்ந்து திருடிட்டு வந்துட்டான்."

"பிறகு..."

"கேம்ஸ் இல்லை. ரிக்ரியேஷனே கிடையாது. மெடிக்கல் ஃபெஸிலிடி கிடையாது..."

"அறுபது பாய் இன்னிக்கு வரும். மினிமம் மாத்திரை மருந்து வரும்."

''நிறைய பேருக்குச் சொறி—சிரங்கு இருக்கு சார்.''

''கருப்புச்சாமின்னு ஒரு பையன் உடம்பெல்லாம்...''

''யார் அது?''

விரல்களில் முட்டை முட்டையாகச் சிரங்கு இருந்தது.

''ஏன்?''

பூச்சிக்கடி சார்.''

''சரியா குளிக்கலை. டெட்டால் வாங்கித் தரேன். சாயந்திரம் என் ரூமுக்கு வாங்க மருந்து போடறேன். வர வாரம் டாக்டர் வரவழைக்கிறேன். என்ன கேம்ஸ் விளையாடலாம் சாயந்திரம்?''

''வாலிபால் சார்.''

''பேட்மின்டன் சார்.''

''அதைவிட நல்ல கேம் சொல்லட்டா.''

''எது சார்?''

''கராத்தே நான் கத்து தரட்டுமா?''

''எதுக்கு சார்...அடிச்சக்குவாங்க.''

''இல்லை ரமேஷ். எடுத்தவுடனே அடிக்க சொல்லித் தரமாட்டேன். என்னுது வேற விதம். எல்லா பாயும் எடுங்க. பெருக்குங்க இந்த இடத்துக் குப்பைய வெளிய போடுங்க. ரமேஷ், அந்த மூங்கிலை இரண்டா பிளந்து இரண்டு ஒட்டடைக் குச்சி செய். இது நாம தங்கற இடம்யா. பளபளன்னு மாத்திடணும்''

''சார்.''

''யெஸ்.''

''நீங்க நிஜம்மாவே மாத்தப் போறீங்களா?''

''ஏன்?''

''மாத்தறேன்னு இது வரை பல பேர் பொய் சொல்லிட்டுப் போயிருக்காங்க.''

''வெயிட் அண்ட் ஸீ.''

''சார்.''

''சொல்லு.''

''நிஜமாவே நீங்க மாத்தறதா இருந்தா நாங்க அத்தனை பேரும் உங்க பக்கம், சிலரைத் தவிர.''

''யார் அது?''

''நீங்களா புரிஞ்சுக்குவீங்க சார்.''

'தடே' லென்று கீழே ஓசை கேட்டது, பெரிய பாத்திரம் உருண்டு விழும் சப்தம் கேட்டது,

''என்ன...போய் பாரு.''

''சமையல்காரரைப் பெரிய பையன் கால் இடறி வுட்டுட்டான் சார். முட்டியிலேருந்து ரத்தம் வருது. அரிசி தரைல கொட்டிடுச்சு.''

''ரமேஷ், இதைக் கவனி'' கீழே ஓடினார். சமையல்காரருக்கு முட்டியும் முகவாயும் தேய்ந்து போயிருந்தன. இவர் வர, எழுந்து பெரிய பையன் தலையைப் பிடித்து 'நொச்' சென்று சமையல் ஆள் குத்தினார். ''தேவிடியா பையா...காலா வுடற, கனம் தூக்கியாற போது...'' நெஞ்சில் குத்தினார்.

''பரவாயில்லை விடு. அரிசி அள்ளுய்யா. எடுத்து, மறுபடி களைஞ்சு போடு. அடி பலமா?''

''ஆமாம் சார்''

''ரெஸ்ட் எடுத்துக்க. போய் கழுவிட்டு டிஞ்சர் போடு. கதிரவன் அவரைக் கவனிச்சுட்டு இங்க வாங்க. அடுப்பு எரியுது, அரிசி கழுவிக் கொண்டா பருப்பு எங்கே? வெல்லம் தூள் பண்ணுய்யா.'' பெரிய பையன் ஓரமாய் நின்று கொண்டிருந்தான் சமையல் மடமட என்று நடந்தது. மிளகாய் துகையல் அரைக்கப்பட்டது.

''சார், சாதம் வெந்துடுச்சு.''

''சார்...ரசம் ரெடி.''

''பாயசம் தித்திப்பு பொறுமா?''

''யோவ் ரொம்ப தித்திப்பு. கொஞ்சம் வெந்நீர் விடு.''

ரமேஷ் கீழிறங்கினான். ''பாதி க்ளீனாயிடுச்சு சார். சுவர்ல மூட்டைப்பூச்சி இருக்கு.''

''இந்த கிரசின்ல கந்தத்துணி நனைச்சுக்க...சந்துல இப்படித் தேய். செத்துரும்.''

''சார் தண்ணி லாரி வருது.''

''உள்ள விடு. சம்புல புடி, முதல்ல தண்ணி ஊத்து. கழுவிட்டு இறைச்சிடு. ரைட்டரை ப்ளீச்சிங் பவுடர் அரை கிலோ வாங்கச் சொல்லு அப்படியே கொட்டு. யோவ், கழுவி எடுத்த ஜலத்தை நாலு நாலு பேரா கக்கூஸ்ல ஊத்துங்கய்யா, கீழ ஊத்தாத.''

''சார் குரோட்டன்ஸ் புடுங்கிட்டம்.''

''நாலு பக்கெட் கழுவின ஜலம் வாங்கி மண்ணுல நெடுக ஊத்திடு. இரண்டு நாள் தண்ணி மட்டும் ஊத்து.''

''சார், எலக்டிரிஷியன் வராரு.''

''கொண்டு போய் மோட்டார் ரிப்பேர் காட்டுய்யா, ஸ்ரீநிவாசன், நீ போ. கூட இருந்து கவனிச்சுக்க. ஏன்யா

சமையக்கட்டுல இவ்ளோ புகை. போகவே மாட்டேங்குது. புகைப் போக்கி இல்லையா?''

''இருக்கு சார். ஏதோ அடைச்சிட்டு இருக்கு.'' ஆறுமுகம் சொன்னான்.

''ஒட்டடைக் குச்சி வாங்கி, மேல கூரைக்குப் போய் ஒரு தட்டு தட்டு ஆறுமுகம். யோவ், பாத்திரங்களை மூடி வை.'' 'தடே'ரென்று இரண்டு டப்பாக்கள் விழுந்தன. புகை படிந்து படிந்து கருத்துப் போன பிஸ்கட் டின்கள் தரையில் உருண்டன. ஒன்றில், துணியில் சுற்றிய பிராந்தி பாட்டிலும், மற்றதில் அரை கிலோ கஞ்சாவும் இருந்தது.

பெரிய பையன் ஓடிவந்து டப்பாவை எடுத்தான்.

''உன்னுதா?''

''இல்லை.''

''ஏன் ஓடி வர?''

''இது யார் வச்சாங்கன்னு எனக்குத் தெரியும்.''

''சொல்லு.''

''முடியாது.''

''ஆறுமுகம், பிராந்தியைக் கஞ்சால ஊத்தி பத்த வச்சுருப்பா.''

''இந்த இடம் என்ன ஏதுன்னு புரியாத துள்றீங்க. பின்னால உங்களுக்குக் கஷ்டம் வரும்.''

''உன்னால கஷ்டம் வருமா? எனக்கா?''

''இங்கித்த ஆள்பத்தி உங்களுக்குத் தெரியலை.''

''எல்லாம் தெரிஞ்சுதான் இங்க என்னை அனுப்பியிருக்காங்க. இங்க யாரு என்ன செய்யறாங்கன்னு

நிறைய பேருக்குத் தெரியும். போ போய் வாசல்ல நில்லு. ஆறுமுகம், நடக்கட்டும்.''

கஞ்சாவும், பிராந்தியும் கலந்து தீயில் பொசுங்கின.

''தண்ணி ரொம்பிடுச்சு சார். பாக்கி எங்க கொட்டறது?''

''குளிச்சிடுங்க.''

'ஓ'வென்ற கூச்சலோடு பையன்கள் ஹோஸ்ஸைப் அருகே ஓடினார்கள்

''ரைட்டர், பசங்களுக்குச் சோப்புச் கட்டி கொடு.'

''போன வாரம் கொடுத்தது சார்.''

''குடுய்யா.'

புது சோப்பு தரப்பட்டது. ஹோஸ் பைப் உயரத் தூக்க, பையன்கள் அத்தனை பேரும் சட்டை கழற்றி விட்டு நிக்கரோடு குளித்தார்கள். ஒருவருக்கொருவர் முதுகு தேய்த்து விட்டுக் கொண்டார்கள். சலவைத் துண்டுகள் தரப்பட்டன.லாரிக் கணக்கு தீர்த்து அனுப்பப் பட்டது. துவைத்து உலர்த்திய சட்டை போட்டுக் கொண்டு வரிசையானார்கள்.

சாப்பாடு பரிமாறப்பட்டது.

''யாரும் சாப்பிடக் கூடாது. நான் சொல்றதைத் திருப்பிச் சொல்லுங்க.''

''இறைவா.''.

''இறைவா.''

''என் அழுக்குகளை நீக்கி.''

''என் அழுக்குகளை நீக்கி.''

''என்னைப் புது மனிதனாய் மாற்று.''

''என்னைப் புது மனிதனாய் மாற்று.''

''தேக பலம் தா.''

''தேக பலம் தா.''

''புத்தி பலம் தா.''

''புத்தி பலம் தா.''

''யோக பலம் தா.''

''யோக பலம் தா.''

''எதிர்க்க இருக்கற சாப்பாட்டைக் கையெடுத்து கும்பிடுங்க.''

கும்பிட்டார்கள்.

''எல்லாரும் சாப்பிடலாம்,''

''ஸ்ரீநிவாசன், காக்காய்க்கு ஒரு பிடி சாதம் வச்சுட்டு வா.''

ஸ்ரீநிவாசன் சாதம் வைத்து விட்டு காக்கைகளைக் கூவி அழைத்தான்.

''வச்சாச்சா?''

''காக்கா சாப்பிடுது சார்.''

''எல்லாரும் சாப்பிடலாம்.''

''சார்''

''என்ன?''

''ஏன் காக்காய்க்கு சோறு போட்டீங்க?''

''பின்னாடி சொல்றேன், சாப்பிடு.''

''தூள் சார், குழம்பு.''

''குழம்பு ஊத்துங்க, எல்லாருக்கும் இன்னொரு வாட்டி.''

''சமையக்காரர் சாப்பாட்டைவிட நல்லா இருக்கு. தினம் அவர் முட்டி பேந்துக்கிட்டா நல்லா இருக்கும்.''

''நமக்கு ஒரு தட்டு எடுத்தாங்க கதிரவன். நீங்களும் எடுத்துக்கங்க.''

பையன்கள் வியப்புடன் பார்க்க, அவரும் கண் மூடி ஒரு நிமிஷம் தியானித்து விட்டு உணவு உட்கொண்டார். தட்டு கழுவினார்கள்.

''ரமேஷ், சாப்பாடு எப்படி?''

''இன்னிக்குப் பரவாயில்லை சார். சாப்பிடற மாதிரி இருந்தது.''

''இம்ப்ரூவ் பண்ணலாம்.''

''பெரிய பையன் சாப்பிடலை சார்.''

''மன்னிப்பு கேட்டா, சாப்பிடலாம்.''

பெரிய பையன் சுவர் ஓரம் திரும்பிக் கொண்டான்.

''காக்கைக்கு ஏன் சோறு போடறேன்னு நீ கேட்ட இல்ல...ஏன் போடறோம். யாருக்காவது தெரியுமா?''

''காக்கா நம்ம மூதாதையர் அம்சம். அவர்களுக்குச் சோறு போட்டு நாம சாப்பிடறோம்'' ஸ்ரீநிவாசன் சொன்னான்.

''சரி... வேற காரணம் உண்டா?''

''காக்கை பகிர்ந்து கொடுக்கும். எல்லாத்தையும் கூப்பிட்டு சாப்பிடும். அது மாதிரி மனுஷங்களும் நடக்கணும்.''

''சரி, வேற காரணம்?''

''தெரியலை சார்.''

''ரமேஷ், ஏதாவது தெரியுமா?''

''தெரியாது சார்.''

''பறவைல பலம் பொருந்தியது காக்கை. அழுகல் சாப்பிடும். அசிங்கம் சாப்பிடும். அதே சமயம் விஷம் இருந்துச்சுன்னா உடனே கக்கிடும். தொண்டைக்குள்ள வச்சுக்கிட்ட உடனே உணவுடைய தன்மை தெரிஞ்சுடும் சாப்பாட்டுல விஷம் இருக்கான்னு பார்க்க காக்கைக்குப் போட்டுட்டு சாப்பிடறாங்க. இதான் விஷயம்.

''காக்கையே துப்பிட்ட பொருளை நாம சாப்பிட்டா நம்ம கதி... இது ஒரு டெஸ்ட். மத்த காரணமெல்லாம் சாக்கு, சம்பிரதாயம்.''

''சார், ஒரு டவுட்.''

''என்ன?''

''யோக பலம் தான்னா என்ன...''

''தேக பலம், புத்தி பலம் புரியுதா.''

''புரியுது சார்.''

''யோகம்ன்றது ஆன்ம பலம். ஆறுமுகத்துக்கு உடம்புல பலம் இருக்கு. ரமேஷுக்கு புத்தி பலம் இருக்கு. இவங்க ரெண்டு பேரையும் விட மனசை யார் அடக்கறானோ அவன் யோக பலம் உள்ளவன்.''

''அதாவது பெரிய பையன்'' ஸ்ரீநிவாசன் பதில் சொன்னான்.

கூட்டம் சிரித்தது.

''அவன்தானே சாப்பிடமாட்டேன்னு நிக்கறான் மனசு அடக்கி...''

''யெஸ் யூ ஆர் கரெக்ட். வைராக்கியம் முக்கியம். நான் நல்லவனா இருக்கணும்கற வைராக்கியம் முக்கியம். அதே வைராக்கியம் கெட்ட வழில உபயோகப்படுத்தினா

அது வேஸ்ட். ஆறுமுகத்துக்கு உடம்புல பலம் இருக்கு. இரண்டு ஏக்கர் தனியா உழவு செய்வாரு. அதே பலத்தை அவரு திருடறதுக்கு உபயோகப்படுத்தினா... மாட்டிக் கிட்டு அடி, உதை, சித்திரவதை...''

''சார்...''

''என்ன?''

''எனக்கு இங்கிலீஷ் சொல்லித் தரீங்களா?''

''ஏன்...உனக்குத் தெரியாதா மாடசாமி?''

''தமிழே சரியா வரலை சார்.''

''இரண்டு நாளாகட்டும். ரமேஷ் வச்சு எல்லாருக்கும் இங்கிலீஷ் சொல்லித் தரச் சொல்றேன். ஆறுமுகம் வச்சு பயிர் பண்ண சொல்லித் தரேன். ஸ்ரீநிவாசனை வச்சு எலக்ட்ரிக் வேலை கத்துத் தரேன்.''

''நீங்க என்ன கத்துத் தரப் போறீங்க?''

''கராத்தே கத்து தரன்னுருக்காரு''

''சினிமால போடறாங்களே அதா...?''

''சாயந்திரம் ஆரம்பிக்கலாம். தெரிஞ்சுக்குவ. போய் எல்லாரும் படுங்க. சீனு மோட்டார் என்ன ஆச்சு?''

''சாயந்திரம் ரெடியாகுங்க. ஒரே ஒரு க்ாயில் மாத்தணும்.''

''சார் ஒரு டவுட்.''

''என்ன கரீமுதீன்.''

''பம்ப்ல கார்ப்பரேஷன் தண்ணி வரணும், வரலை. வரலச்சா குடிக்க நல்ல தண்ணி கிடைக்கும்.''

''ஏன் வரலை.''

''பைப்பு கட்டாயிருக்கு சார். வாசல்ல எப்பவும் ஈரமா இருக்கு மண்ணு.''

''கரீம் பைப் வேலை செய்யறவன் சார் ''

''பாத்துடலாம். பைப் டேமேஜாயிருந்தா என்னப்பா பண்றது?''

''சைக்கிள் ட்யூப் சுத்தி சிமிட்டி தடவி அடைக்கலாம் சார். ஆனா கார்ப்பரேஷன்கிட்ட மனு கொடுக்கணும்.''

''சார் பெரிய பையன் படுத்துட்டான்.''

''கிடக்கட்டும். சீனு, அவன் கிட்ட பேசு. இங்க கஞ்சா, சாராயம் உள்ள வந்தா நான் ரொம்பக் கடுமையா நடவடிக்கை எடுப்பேன். பெரிய பையனை வேற ஜெயிலுக்கு மாத்திடுவேன்னு சொல்லு. ஆட்டமே காட்ட முடியாது இனின்னு சொல்லு. மன்னிப்பு கேட்கச் சொல்லு.''

''சரி சார்.''

கதிரவனை ஆட்டோவில் அனுப்பி காயில் வாங்கி வரச் சொன்னார். கார்ப்பரேஷனுக்கு பைப் ரிப்பேருக்கு மனு எழுதினார். கட்டட மராமத்து கோப்பு பிரித்து முழுவதும் படித்தார்.

'மாறப் போகிறோம், மாறப் போகிறோம்' என்றே மராமத்து வேலை தள்ளிப் போடப்பட்டிருக்கிறது. மாற்றமும் இல்லை, மராமத்தும் இல்லை. கடுமையாய் சகல விவரங்களையும் எழுதி ஆறு வருடத்தில் இரண்டு முறை வெள்ளையடித்திருப்பதைச் சுட்டிக்காட்டி உயர் அதிகாரிக்குக் கடிதம் எழுதினார். தயவுசெய்து மராமத்து நடக்க அனுமதியுங்கள். அல்லது மாற்றுங்கள் என்று கடிதம் முடித்தார்.

''ஐயோ'' என்று பின்னால் கூச்சல் கேட்டது.

ஸ்ரீநிவாசன் ஓடி வந்தான். ''ஆறுமுகத்தைப் பெரிய பையன் குத்திட்டான் சார்.'' ஆறுமுகத்தின் தோளிலிருந்து நெஞ்சுக் குழி வரை கத்தியால் கீறப்பட்டிருந்தது. ரத்தம் பெருகியது.

பெரிய பையன் கத்தியுடன் நின்று கொண்டிருந்தான்.

அவர் அருகே வர, உயர்த்திக் காட்டினான்.

''கொன்னுடுவேன், கிட்ட வராதே கொன்னுடுவேன்''

சரவணன் நிதானமாய் அருகே நடந்தார்.

''கத்திய கொடு தம்பி. கொண்டா அதை.''

சரட்டென்று வீசினான். பின்னே நடந்தான். பாய்ந்து குத்த வந்தவனைச் சட்டென்று பிடித்தார். கால் கொடுத்து தூக்கிப் போட்டார். விலாவில் முழங்கால் வைத்து அழுத்தினார். கைவிரலை பிரித்து கத்தியை எடுத்து தூரப் போட்டார். அவன் எழுந்து நிற்க, மறுபடி தள்ளினார். துவண்டு எழுந்திருக்க, மறுபடியும் தள்ளினார். மறுபடி அவன் தடுமாறி நிற்க முயல, உடம்பைச் சுழற்றி விட்டு குப்புறத் தள்ளினார், சடாரென்று முழுபலம் கொண்டு அவன் துள்ளி அவரை நோக்கி வர, கால் இடறிவிட்டார். சுவரில் போய் பெரிய பையன் மாட்டுச் சாணம் போல் மோதினான். துவண்டு விழுந்தான், மயக்கமானான்.

கீறல்தான்.

''என்ன ஆறுமுகம்?''

''ஏண்டா காட்டிக் குடுத்தேன்னு அறுத்துட்டான் சார்.''

''கதிரவன். ஜீ எச்சுக்கு கூட்டிட்டுப் போங்க. ஆறுமுகம், வெளிய அனுப்பறேன். மரியாதையா போய் மரியாதையா வரணும்.''

''சரி சார்,''

''போய் படுங்க.''

கூட்டம் கலைந்தது.

சரவணன் கவலையானார்.

''வரிசையா நின்னீங்களா...இப்படி உட்காருங்க. மண்டி போட்டு பின்னங்கால்ல இடுப்பு வச்சு அசையாத உட்காருங்க தொடைல கை வையுங்க. கால் வெளிய வரக் கூடாது. இடுப்புல பாதம் பதியணும். மாடசாமி, தப்பா உட்கார்ற...சரியா உட்கார். கரெக்ட். இதான் கராத்தேல உட்கார்ற போஸ்.''

''கராத்தேன்னா என்னா... 'கரா'ன்னா கை. டே'ன்னா ஒண்ணுமில்லைன்னு அர்த்தம். அதாவது எந்த ஆயுதமும் இல்லாத கை. வெறுங்கை. வெறுங் கையால நாம நம்பளைத் தாக்க வர்றவங்களை ஜெயிக்க முடியும். அவன் ஆயுதம் வச்சிருந்தாக்கூட அதைப் பிடுங்கிப் போட்டு அவனைக் கீழே தள்ளி விட முடியும்.''

''எப்ப இது முடியும்? நீ கோபப்படாம இருந்தா, நீ ஆத்திரப்படாம இருந்தா, முடியும். கோபம், ஆத்திரம் வராத இருக்க என்ன வழி? மனசு அடக்கறது. மனசு எப்படி அடங்கும்? அமைதியா இருந்தா அடங்கும். ஆக மனசு அமைதி முக்கியம்.

''மனசு அமைதிக்கு என்ன வழி...? கண்களை மூடி அமைதியா எல்லாரும் உட்காரணும். இப்ப ஒரு வேலை யும் இல்லை. மனசு அமைதியா இருக்குன்னு நினைச்சுக் கிட்டு உட்காருங்க பார்க்கலாம்.''

பையன்கள் அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள்.

''கரெக்ட். எழுந்து சம்மணம் போட்டு உட்காருங்க. பேச வாணாம்.''

சம்மணமிட்டார்கள்.

''ஒவ்வொரு ஆளா எங்கிட்ட வரணும். அவன் காதுல ஒரு மந்திரம் சொல்வேன். அதை யார்கிட்டயும் சொல்லக் கூடாது. ஒரே ஒரு வார்த்தை மந்திரம். எந்த அர்த்தமும் இல்லாத வார்த்தை. ஒவ்வொரு ஆளா வா.'' காதில் ரகஸ்யம் சொன்னார். பையன்கள் விநோதமாய் சிரித்த படி வாங்கிக் கொண்டார்கள். ''நான் சொல்லிக் கொடுத்த விதமா கண்ணை மூடிக்கிட்டு மறுபடி மறுபடி அந்த வார்த்தையைச் சொல்லிட்டே இருங்க.''

''கண்ணை மூடுங்க. மந்திரம் ஆரம்பிக்கிறோம். அமைதியா இருக்கணும். நான் சொன்ன பிறகு மந்திரம் ஆரம்பிக்கலாம்.''

''மந்திரம்.''

''மனசுக்குள்ளேயே சொல்லு. உதடு பிரிக்காதே. அமைதி. அமைதி.''

நாற்பத்தேழு பேரும் அமைதியாய் உட்கார்ந்திருந் தார்கள்.

யாரோ இருமினார்கள். வெளியே வாகனங்கள் ஓடின. பதினைந்து நிமிடங்கள் கழித்து கண் திறக்கச் சொல்ல கண் திறந்தார்கள்.

''எப்படி இருக்கு?''

''அலை பாயுது சார் மனசு.''

''அமைதியா இருந்தது சார்.''

"கொஞ்சம் அலை பாஞ்சுது. கொஞ்சம் அமைதியா இருந்தது சார்."

"சரி. இப்ப ப்ரீத் இன்...ப்ரீத் அவுட், செய்யலாம். கை பிரிச்சு, வாய் திறந்து காத்து இழு. வாய் மூடு. மெல்ல கை சேரு. மூக்கால நிதானமா மூச்சு விடு. நிறைய காத்து இழுத்து நிதானமா மூச்சு விடு. முடிஞ்சுதா இன்னும் இருபது தடவை செய்யுங்க."

செய்தார்கள்.

"ரமேஷ், நம்ம காம்பவுண்ட் சுவர் சுத்தி முப்பது தடவை லைனா ஓட விடு. நீ கடைசியா ஓடு."

ஓடினார்கள்.

"இப்ப மறுபடி அஞ்சு நிமிஷம் அமைதியா தியானம் பண்ணு. பழையபடி..."

பையன்கள் கலைந்து மாடிப்படி ஏறினார்கள்.

பெரிய பையன் சுருண்டு தூங்கிக் கொண்டிருந்தான் குனிந்து பார்த்துவிட்டு வாசலுக்குப் போனார்.

இருட்டுகிறபோது நெஞ்சு முழுக்க கட்டோடு ஆறுமுகம உள்ளே வந்தான். கண்களில் ஜலம் கோர்த்திருந்தது. முகம் மிக வாடி இருந்தது. உணர்ச்சி வசப்பட்ட ஆளாய்த் தெரிந்தான்.

"என்ன கதிரவன், ரொம்ப கஷ்டப்பட்டுட்டானா? தையல் போட்டாங்களா?"

''இரண்டு தையல்தான் போட்டாங்க. சமாளிச்சுட்டான். இங்க வந்து குழம்பிட்டான்.''

''ஏன்?''

''வாசல்ல யாரோ சொந்தக்காரங்க நின்னு, அழுது புலம்பிய'துல இவனும் ஒரு மாதிரி ஆயிட்டான். யாரோ கட்டிக்கப் போற பொண்ணாம்.''

''என்ன ஆறுமுகம், யாரு அது?''

ஆறுமுகம் பேசாது இருந்தான்.

''யாரு அது சொல்லு.''

''நான் யாரைக் கட்டிக்கறதுக்கு எங்கப்பன் ஆயிய கொன்னேனோ...அந்தப் பொண்ணு.''

''என்ன சொல்லுது?''

''ஊருக்குப் போவாதாம். இங்கினயே, சுத்திச் சுத்தி உயிர வுட்டுருமாம், ஊர்ல எல்லாரும் உன்னால தாண்டின்னு காறி துப்பறாங்களாம். ஒன்னு காலைப் புடிச்சிக்கினு என்னை வுட்டுட்டுப் போவாதே...போவாதேன்னு...மடிலயே...மடிலயே ஊமத்தங்காய் அரைச்சு வச்சிக்கினு...

''தலை முடியப் புடிச்சு 'பளீர் பளீர்'னு அடிச்சுட்டான் சார். உனக்கோசரம் கொலை பண்ணேன்டி. நீ சாவறதுன்னா சாவுன்னு அடிச்சுட்டான். கட்டுப் போட்டதோட கைய அசைச்சதுல ரத்தம் வந்துடுச்சு.''

''எங்க அவங்க?''

''வாசல்ல நிக்கறாங்க.''

''ஆறுமுகம், போய் கூட்டிக்கிட்டு வாய்யா.''

''வேணாம் சார்.''

''போய் கூட்டிட்டு வாய்யா. நான் பேசறேன். உன் பொம்பளைக்கிட்ட, வரச் சொல்லு போ.''

ஆறுமுகம், வெளிய போய் யாரோ ஆளிடம் சொல்லி விட்டு கிழவனையும், அவளையும் கூட்டி வந்தான்.

அந்தப் பெண் தலைப்பால் வாய் பொத்தி நின்றது. கருப்பாய், ஐந்தடி உயரத்தில் கிராமப் புறத்தின் உழைப்புக் கடுமையால் வந்த உடம்பு வலிமை தெரிந்தது. கிழவன் மிரண்டு போயிருந்தான்.

''என்ன வேணும் உங்களுக்கு?''

''எங்க புள்ளைங்க அது. ஏதோ ஒரு வேகத்துல தப்பு பண்ணிடுச்சுங்க. இங்க கொண்டாந்து போட் டாங்க. இங்கனயும் அதைக் கத்தியால் குத்தி நோக்காடு தரீங்களே.''

''பசங்க ஒருத்தருக்கொருத்தர் அடிச்சுக்கிட்டாங்க அதுல அடிப்பட்டுப் போச்சு. சரியாயிடும்: எப்ப வந் தீங்க?''

''முந்தா நா வந்தோங்க.''

''உள்ள வந்து மனு தர்றதுதானே?''

''தெரிலீங்க. வாசலண்ட நிக்கவுடாத துரத்துறாங்க ஐயா.''

''வந்ததுக்குப் பார்த்துட்டுப் போங்க. ஆறுமுகம் நல்ல புள்ளை, தெரியாத செய்துட்டான். அவனைப் புது மனுஷனா மாத்தி அனுப்பறேன். கவலைப்படக் கூடாது. வாசல்ல நின்னு அழுவக் கூடாது. ஏம்மா, குழந்தையா நீ...எதுக்கு ஊமத்தங்காய் வச்சுருக்க? கொண்டா இப்படி.''

''இல்லீங்க.''

''ஆறுமுகம், ஊமத்தங்கா வாங்குய்யா, உட்கார்ந்து பேசு, சாப்பிட்டீங்களா?''

''காலைல சாப்புட்டடங்கய்யா.''

''ஆறுமுகம், மத்தியானச் சோறு குழம்பு உள்ள கொஞ்சம் இருக்கு. இரண்டு தட்டு எடுத்தா, முதல்ல சாப்புடட்டும். அம்மா காய் கொடுத்துட்டு உட்காரு அப்படி.''

''இல்லீங்க....''

''ஏய் சொல்றாங்கல்ல...''

ஆறுமுகம் போய் மடியை இழுத்தான். ஊமத்தங் காய்கள் சிதறின. பொறுக்கி தோட்டத்தில் போட்டான். உள்ளே போய் சோற்றுத் தட்டோடு வந்தான்.

''அப்படி வராண்டால உட்கார்ந்து பேசுங்க. ஆறுமுகம் பதினைஞ்சு நிமிஷம், இதமா பேசி அனுப்பிடு. ஊருக்குப் போச் சொல்லு, பட்டணம் மோசமான இடம்னு சொல்லு.''

''சரிங்க ஐயா.''

அரைமணி அனுமதித்தார்.

ஸ்ரீ நிவாசனை ஆண்டனா கட்டச் சொல்லி. கருப்பு வெள்ளை டிவியைக் கனெக்ஷன் கொடுத்து, ஒளி படர விட்டார். 'வாழைத்தோப்பு' படம் வந்து பர்ட்டு கேட்ட தும் பையன்கள் கை தட்டினார்கள். மகத்தான சந்தோஷம் அவர்கள் மூகத்தில் ஓடிற்று. ஆங்கிலப் பேச்சுக் கூட அசையாது கேட்டார்கள்.

''ஆறுமூகம் உள்ளே வந்தான்,

''போறேன் றாங்க ஐயா, வாசல்ல நிக்கறாங்க.''

கீழிறங்கி வந்தார்.

''என்னா, இப்ப சந்தோஷம்தானா?''

அந்தப் பெண் வெட்கப்பட்டது.

''ஆறுமுகம், உனக்கு என்ன வேணும்?''

இன்னும் வெட்கம் வந்தது.

'மூணு வருஷம் ஓடியே போயிடும். போய் வயல் வரப்புல வேலை செஞ்சு நாலு காசு சேர்த்து வை. பெரிய ஆளா அவனை மாத்தி நான் அனுப்பறேன். ஊருக்கு போயிருக்கறதா நினைச்சுக்க. இனிமே தப்பு பண்ண மாட்டியே! சாகற நினைப்பு வராதுல்ல உனக்கு?''

''ஐயாவுக்கு ஒண்ணும் கொண்டாராத வந்துட்டம்.'' ஐம்பது ரூபாய் மடித்து நீட்டினார்.

''என்னய்யா அது?''

''உங்களுக்கு மரியாதையாம்.''

''அப்படியா, எனக்கு இந்த மரியாதை போறாதே.''

''அடுத்தாப்பல வரச்சொல்லக் கூட துட்டு எடுத் தாராராம். இப்ப ஐயா பெரிய மனசு பண்ணி...''

''ச்சே அதெல்லாம் வேணாம்,''

''பெரியவரே, என்ன வேலை செய்யற?''

''விவசாயம் தாங்க.''

''சொந்தமாவா?''

''ஆமாங்க. மல்லாட்டப் பயிறு போட்டிருக்குது புடுங்கணும்.''

''அடுத்த தடவை வரச்சொல்ல மல்லாட்ட பயிறு அரை மூட்டை எடுத்தா. பையன்களுக்கு வேக வச்சி தரலாம், எடுத்தாறியா?''

''இப்பம் எங்கினா பீராஞ்சு ''

''வேணாம். அடுத்த தடவை கொண்டா.''

''சார், என்னதுல கரும்பு போட்டுருக்காங்க சார் அதுவும் அவருதான் பார்த்துக்கறாரு வெல்லம் காச்சி எடுத்தாரச் சொல்றேன். உருண்டை போட்டுக்கலாம் சார்.''

''வெரிகுட்.''

''தினம் ஒரு வேர்க்கடலை உருண்டை, நல்லா இருக்கும்...கொண்டாரச் சொல்லு, ஒரு விலை போட்டு வாங்கலாம்.''

''துட்டு வாங்க மாட்டாங்க சார்.''

''தப்பு. படி ஒரு ரூபாய்க்கு அவங்க போட்டா இங்க எட்டணாவுக்கு போடச் சொல்லு. விலை தராம வாங்க மாட்டேன். என்ன...மனசு நிம்மதி ஆச்சா உனக்கு? இனிமே தப்பு பண்ண மாட்டியே...சாகற நினைப்பு வராதுல்ல...?''

''மாட்டேங்க.'' பெண் தலை கவிழ்ந்து பதில் சொல்லிற்று.

''வாச வரைக்கும் போய் அனுப்பிட்டு வா.''

''சொல்லு ஆறுமுகம்.''

''ஐயா''

''கும்புடறேங்க. த்த...கால்ல விழு.'' பெண்ணும், ஆறுமுகமும் காலில் விழுந்தார்கள். சரவணன் கண்களை மூடிக்கொண்டார். தன் நெஞ்சைத் தானே துதித்தார்

''ஜாக்கிரதையா போய் வாங்க. அப்பப்ப கடிதாசு எழுதுவான். பயப்படாத போங்க.

அவர்கள் கிளம்பினார்கள்.

ஸ்ரீநிவாசன் ஓடிவந்தான்.

''சார், பெரிய பையன் அழுவறான்.''

''என்ன அதுக்கு?''

''வயிறு நோவுதுன்றான்.''

''உனக்கென்ன கவலை அதுபத்தி, சீனு''

''பாவம் சார். அவன் மேல தப்பு இல்ல சார்.''

''யார் மேல தப்பு?''

''பழைய சூப்பிரண்டு.''

''ம்ம்...சொல்லு.''

''இங்க இருக்கற ஏட்டு இரண்டு பேரும்...

''என்ன இரண்டு பேருக்கும்...''

''வேணாம் சார். இனிமே தப்பு நடக்காது.

''வந்து என்கிட்டமன்னிப்பு கேட்டுட்டுப்போய் கஞ்சி சாப்பிடச் சொல்லு.''

பெரிய பையன் மெல்ல சுவர் பிடித்து வந்தான். ''மன்னிச்சுடுங்க சார். தப்பாயிடுச்சு.''

''இதுவரைக்கும் எப்படி இருந்தேன்றது வேற விஷயம்...இனிமே என் இஷ்டப்படிதான் இருக்கணும்.''

''சரி சார்.''

' போய் சாப்பிடு.''

''நான்தான் சார் லீடர்.''

''இல்லை, ரமேஷ்.''

''அதெப்படி சார்?''

''உள்ள போய் சாப்பிடு.''

''இது அநியாயம் சார்.''

''எது நியாயம்னு எனக்குத் தெரியும். போ. போய் சாப்பிடு.''

''கஞ்சாவுல மாட்டினதுலதான் உன்னை ஊரை விட்டு துரத்திட்டாங்க. இங்கியும் அதே நடக்கப் போவுது பாரு.''

''போடா உளற. முதுகுத் தோல் பிஞ்சுடும்,''

''என் முதுகைப் பிச்சிட்டா வுட்டுருவாங்களா உன்னை? நீ என்ன, யாருன்னு கவனிக்கறதுக்கு ஆள் இருக்கு இங்க.''

''டேய்...டேய் உள்ள போடா.''

''நான்தான் லீடர். யார் சொன்னாலும் சொல்லாங் காட்டியும்!''

''இது வரைக்கும் நீ ஒரு முட்டாள்னு பொறுமையா இருந்தேன். முறைப்பு காட்டினே, முட்டிக்கு முட்டி தட்டிடுவேன். போ மரியாதையா.''

அவன் ஒரே ஒரு டம்ளர் கஞ்சி குடித்து விட்டு மாடிக்குப் போய் விட்டதாக ஆறுமுகம் சொன்னான்.

''ஆறுமுகம், ராத்திரி ஆள் நடமாட்டம் இருக்கக் கூடாது எந்தப் பையனும் வெளிய போகக்கூடாது. சொல்லிடு...''

''சரி சார்,'' ஆறுமுகம் வெளியேறினான்.

ஆங்கில செய்திக்குப் பிறகு டி.வி அணைக்கப்பட்டது.

நேற்று இரவை விட, சரவணனுக்கு இன்று தூக்கம் அசதி அதிகமாய் இருக்க, உணவு முடித்த மூன்று நிமிடங்களில் தூங்கிப் போனார். கதிரவன் உலுக்க வாரிச் சுருட்டி எழுந்து கொண்டார்.

''கல்லு விழுது சார்.''

''எங்கேயிருந்து?''

''மூணு பக்கமும் வருது, பக்கத்துல பத்திரிகைக் கட்டடம் தவிர, எல்லா இடத்துலேர்ந்தும் வருது.'' வாசலுக்கு ஓடினார். யாரோ சைக்கிளில் அலைந்து கத்திக் கொண்டிருந்தார்கள்.

''ஆறாயிரம் ரூபா சரக்குக்கு நெருப்பு வச்சுட்டுஓடிட முடியுமா? டேய் பெரிய பையா...உன் அதிகாரிய வெளியே அனுப்பு.''

ஐ ஜியின் வீட்டுக்குப் போன் செய்தார். ஆர்டர்லி பேச, எழுப்பச் சொன்னார்.

''என்ன சரவணன்?''

''லோக்கல் ரௌடிஸ் கட்டடத்தை அட்டாக் பண்றாங்க சார். கஞ்சா கிடைச்சுது உள்ள, நெருப்பு வச்சு அழிச்சுட்டேன். உள்ள இருக்கற பசங்களைப் பேர் சொல்லிக் கூப்புடறான். கல் எறியறான்.''

''ஐ.ஸீ. நான் ஒரு ஸ்குவாட் அனுப்பறேன். நீங்க தனியா வெளிய வரவேணாம். காலைல வந்து இது விஷயம் ரிப்போர்ட் பண்ணுங்க.''

நான்கு ஆட்கள் இடப்பக்கச் சுவர் மீது நின்று மறுபடி கத்தினார்கள். சைக்கிள் செயினுடன் உள்ளே ஒரு ஆள் இடம் தேடி மணல்மீது பொத்தென்று இருபதடியில் குதித்தான். ''அந்த உயரம் குதிப்பவன் வேலை தெரிந்த ஆள். கதிரவன், பெட்டி திறந்து என் ரிவால்வர் எடுத்துக்

கொடுங்க. போய் குக், கான்ஸ்டபிள் எழுப்புங்க அலெர்ட் பண்ணுங்க. யாரும் ஜன்னல் பக்கம் நிக்க வேணாம்'' ரமேஷ் ஓடி வந்தான்.

''சார், உள்ள கல் விழுது.''

''ரமேஷ் போய் நாலு பேரை எழுப்பிப் பிறகு கட்டை குடு. உள்ள குதிச்சவனை மடக்கியே ஆகணும்.''

''நான் போவட்டுமா சார் வெளிய?''

''நோ. நான் போறேன், கீழே இரு. ஆறுமுகத்தை மாடில கட்டையோட...வேணாம். மாடசாமிய கட்டை யோட நிக்க வை. கரிமுதீனைக் கீழே அனுப்பு.''

குதித்த ஆள் பின்பக்கம் நடப்பது தெரிந்தது, சரவணன் துப்பாக்கியுடன் வாசலுக்கு ஓடி, கதவு திறந்து வராண்டாவில் பதுங்கினார். சுவர் மேலே ஆட்கள் நின் றிருந்தார்கள். உள்ளே வந்தவன் மாட்டிய ஆள். சுவர் மீது நிற்பவர்களை வெளியே குதிக்க வைக்க வேண்டும். சுற்றும் முற்றும் பார்த்தார். பிளந்த மூங்கிலில் துடைப் பம் கட்டி ஒட்டடைக் குச்சியாக்கியிருந்தது. ரிவால்வ ரைப் பையில் சொருகி, குச்சி எடுத்து தோட்டத்திற்கு வந்தார். முழு வேகத்தில் முதல் ஆள் காலில் அடித்தார். இழுத்து அடுத்த ஆள் காலில் குத்தினார். மற்றவன் ஓங்கு வதற்குள் குதித்து விட்டான். அடிபட்டவன் போட்ட கூச்சலில் உள்ளே குதித்தவன் எதிரே வர, மின்னல் வேகத் தில் நெருங்கினார். அவன் செயின் சுழட்ட ஆரம்பித் தான். குனிந்து கைப்பிடி மண் எடுத்து முழு வேகத்தில் அவன் முகம் நோக்கி வீசினார். அவன் கண் கசக்க, பாய்ந்து அவன் காலை இடறித் தரையில் அடித்து வீழ்த் தினார்.

சரமாரியாய் கற்கள் வெளியிலிருந்து வந்துவிழுந்தன. அவனை இழுத்து சுவரோரம் போட்டு மிதித்துக் கொண்

டார். ரிவால்வர் எடுத்து வானம் நோக்கி ஒரு முறை சுட்டார்,

வெளியே ஆட்கள் சிதறி ஓடுவதை உணர முடிந்தது. மடங்கியவன் திமிர, முழு வேகத்தில் அவன் முகத்தில் குத்தினார். தலைமுடியைக் கொத்தாய் பிடித்துப் பின் பக்கம் இழுத்து தள்ளிக்கொண்டு வந்தார். வராண்டாவுக்கு வர, கதிரவன அவன் பின் கை சேர்த்து விலங்கு மாட்டினார். பாரா கூவினார். உள்ளே இருக்கிறவனும் வாசலுக்கு லத்தி எடுத்துக் கொண்டு ஓடினார்கள். கதவு திறந்து வாசலில் அலைகிறவனை நோக்கி லத்தியைச் சுழற்றினார்கள். போலீஸ் வேன் ஒன்று வளைவில் வேகமாய் திரும்பி வாசலுக்கு வந்தது. தடதடவென்று தனி ஸ்குவாட் இறங்கி தெருவில் அலைகிறவர்களை விரட்டியது. பத்து நிமிடத்தில் தெருவைக் காலி செய்தது.

''சார்...சப்-இன்ஸ்பெக்டர் ராஜகோபால் எக்மோர் ப்ராஞ்ச்.''

''இவன் யாரு தெரியுமா உங்களுக்கு?''

''நோட்டட் கேடி சார் பாபுன்னு பேரு. சாராயம் காச்சறவன்'' நெருங்கி அவன் முகம் தூக்கிப் பளீரென்று அடித்தார்.

''ஏண்டா வந்தே?''

''ரோட்ல போற லேடீஸ் மேல உங்க பசங்க கல்லடிச்சானுங்க. சீட்டி அடிச்சு அசிங்கமா பேசினாங்க.''

பளீரென்று அடி விழுந்தது. ''சொல்லு...ஏன் வந்த உள்ள...''

''லேடீஸ் மேல...''

மொத்து மொத்தென்று ராஜகோபால் அவனை அடித்து துவம்சம் செய்தார். விரல்களை இறுக்கி அலற வைத்தார்.

"நீ உயிரோட வெளிய போக மாட்ட, சொல்லு."

"பசங்க சரக்கு வாங்கிகினு போனாங்க. துட்டே குடுக்கலை "

"என்ன சரக்கு?"

"எல்லாம்தான். சாராயம், கஞ்சா எல்லாம்தான்."

"நீதான் சப்ளையா?"

"அந்தப் பசங்க கேக்கறாங்க...குடுத்தேன்."

ராஜகோபாலிடம் சரவணன் ஆங்கிலத்தில் பேசத் துவங்கினார். "இவனை உள்ளே வச்சு வேற ஏதாவது கேஸ் போடுங்க. பசங்க போனவாரம் இந்த மாதிரி விஷயத்துல இன்வால்வ் ஆனது நிஜம். இனி ஆக மாட்டாங்க, இன்வால்வ் ஆனதுக்கு வேற ஸ்ட்ராங் ரீஸன் இருக்கு இது தவிர, பின்பக்க சேரியை ஒரு தடவை க்ளீன் வாஷ் பண்றது எனக்கு நல்லது."

"புரியுது சார். ரீஸன் யாரு என்னன்னு எங்களுக்குத் தெரியும்."

# 8

"உங்கள் கடிதம் கிடைத்தது. இங்கு யாவரும் நலம்." கடிதம் எந்த விளிப்புமின்றி உலர்ந்த சிகைக்காய் மாதிரி ஆரம்பித்தது.

"அப்பாவோடு சென்னைக்குப் போவது பற்றிப் பேசினேன். அப்பா உங்களை இங்கு வந்து போய்க் கொண்டிருக்கச் சொன்னார். நாளை குவார்ட்டர்ஸ் காலி செய்கிறேன். குழந்தையைப் பிரிந்து இருக்க என் அப்பா வாலும், அம்மாவாலும் முடியவில்லை.

''எனக்கும் மெட்ராஸ் பிடிக்காத விஷயம். அவசியம் வரவேண்டும் என்றால் வருகிறேன். குவார்ட்டர்ஸ் பெரிதாக இருக்கிறதா என்று எழுதவும். இங்கு 'பூவே பூச்சூடவா' படம் நேற்று பார்த்தோம். இப்படிக்கு...'' மனைவி கையெழுத்திருந்தது.

பி. கு: ''மறுபடி கோவைக்கே ட்ரான்ஸ்பர் கிடைக்காதா? முயற்சி செய்யுங்கள். யார் கை காலிலாவது விழுந்து மாற்றல் வாங்குங்கள், போலீஸில் சேர்ந்த பிறகு விரைப்பாய் இருப்பது நல்லதல்ல.''

இந்தத் தேசத்தில் போலீஸ்காரன் மட்டும்தான் விரைப்பாய் இருக்கக் கூடாதா? ரௌடி, சாராயம் காய்ச்சுகிறவன், கஞ்சா தோட்டக்காரன். கள்ளக் கடத்தல், அரசியல்வாதி, வட்டச் செயலாளர். அடிமட்ட தொண்டன் வியாபாரி, லெட்டர்ஸ் டு எடிட்டர் எழுதுகிறவன் எல்லோரும் விரைப்பாய் இருக்கலாம். போலீஸ்காரன் விரைப்பு தவறு.

என்ன எழுதுவது...இன்னும் குவார்ட்டர்ஸ் கிடைக்கவில்லை. ஆபீஸ் ரூமில் தூங்குகிறேன் என்றா...

இதோ அதோ என்று ஒரு வாரம் போய் விட்டது பையன்கள் ஒரு மாதிரியாய் படிமானம் ஆகி விட்டார்கள். மாலை நேரத்து டிவி, காலை நேரத்து தியானம், கராத்தே அவர்களை மெல்லியதாக மாற்றி வருகிறது.

'சோறு நல்லா இருக்கு சார்' என்றார்கள். மூட்டைப் பூச்சி ஒழிந்தது பற்றி சந்தோஷப்படுகிறார்கள். 'கஞ்சா இல்லாமல் முடியவில்லை' என்று ஒரு பையன் அழுதான்.

''குடிக்கணும்னு நினைக்கறியா... விடணும்னு நினைக்கிறியா''

''விட முடியலை சார்.''

''இது குடி. முடியும்.'' அருகம்புல் அரைக்கச் சொல்லி சாறு கொடுத்தார். 'வயிற்றுப் போக்கு' என்று ஓடி வந்தான். 'நல்லது. விஷம் முறியும். பயப்படாதே.' அவனுக்குத் தனி உணவு போடச் சொன்னார்.

ஒரு விஷயம் தெளிவாய் தெரிந்தது. பையன்களை எந்த விஷயத்திலும் தெளிவாய் ஈடுபடுத்த முடியவில்லை. அப்படி வேலை எதுவுமில்லை. ப்ராஜக்ட் இல்லை. பழைய அரசு நாற்காலி மேசைகளைச் சரி செய்தல், பல்லவன் போக்குவரத்துக்கு பஸ் பாடி கட்ட ஆங்கிள் அடித்துக் கொடுத்தல், பெருக்குதல், துடைத்தல் சமைத்தல். பையன்களுக்கு நிறைய ஓய்வு இருக்கிறது, இதுவே தவறான வழிகளுக்கு அழைத்துப் போகிறது. படிப்பு பல வகைப்பட்டது. எல்லாம் தெரிந்த பையன், எதுவுமே தெரியாத பையன், எதோ தெரிந்த பையன் ஒன்றாக்க முடியவில்லை.

பையன்கள் தனித் தனி உலகமாய் இருந்தார்கள், பழைய நினைப்புகளில் மனசு செலுத்தி நொந்து போய். எங்கேயும் ஒட்டாது இனி 'விதி விட்ட வழி' என்று அயர்ச்சியுடன் வெறுப்புடன் 'வேறு வழியில்லை' என்கிற நினைப்புடன் இருந்தார்கள்.

தோட்டவேலை மொத்தமாய் செய்யச் சொல்லலாம். நாற்பது பேர் வேலை செய்யும் தோட்டம் எங்கே இருக்கிறது? சுவர் ஓரம் கீரை நடவும், காய் கறி பண்ணவும் நாலு பேர் போதும்...நாற்பது பேருக்கு என்ன வேலை?

வெளியே அழைத்துப் போவதை அரசு விரும்பவில்லை. போதிய பாதுகாப்பு இல்லை. ஒரு முறை வெள்ளம் வந்தபோது மட்டும் பின்பக்கத்துக் கூவம் கரையைப் பலப்படுத்த இந்தப் பையன்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மறுபடி மழையும் வெள்ளமும் எப்போது வரும் என்று காத்திருக்க வேண்டுமா...?

வெறுமே இருக்கிற இந்தப் பையன்கள் விளையாட்டாய் கெட்ட பழக்கம் கற்றுக் கொண்டு பிறகு அதற்கே அடிமையாகிறார்கள். கஞ்சா இல்லாது பெரிய பையனால் முடியவில்லை. தவிக்கிறான். தனியே அழுகிறான். ஒரே ஒரு தூக்க மாத்திரை இரவு மட்டும் கொடுத்து தூங்கச் செய்ய வேண்டியிருக்கிறது. கடும் தூக்கத்தில் கூட, எதிர்ப்புணர்வுகளோடு கை கால் உதைத்துக் கொள்வதும், உதடு முறுக்கிக் கொள்வதும் பார்க்கப் பரிதாபமாய் இருக்கிறது.

மனசு அமைதியில்லை. மனசு அமைதிப்படுத்த புத்தியைச் செலுத்தலாமெனில் அதற்கும் வழியில்லை.

என்ன செய்யலாம்?

விட்டம் பார்த்து யோசனை செய்தபோது ஒரு காரைக் கட்டி பெயர்ந்து தடேரென்று விழுந்தது. .எந்த அதிர்வும், எந்தச் சலனமும் இல்லாதபோது விழுகிறது.

சட்டென்று உள்ளே ஒரு விளக்கெரிந்தது. இந்த இடத்தை ரிப்பேர் செய்தால் என்ன...கொத்தனார் வேண்டாம். சித்தாள் வேண்டாம். ஒரு சிவில் இஞ்சினியர் ஒரு மேஸ்திரி போதும். நாற்பது பையன்களும் உழைத்து இதை உறுதியாக்கிவிட முடியும்.

''டி. ஐ. ஜி. சார் இருக்காங்களா...' போனில் தொடர்பு கொண்டார்.

''சொல்லுங்க சார்... சரவணன். டி. ஐ. ஜி பேசறேன்...'' இரண்டு நிமிடம் கழித்து குரல் கேட்டது.

''பள்ளியை ரிப்பேர் பண்ணணும் சார். ரொம்ப மோசமான கட்டடமா இருக்கு. பசங்களை வச்சே...'' திட்டம் விவரித்தார்.

''செய்யல்ாம், நான் ஐ. ஜி. கிட்ட பேசறேன், நீங்க நடுவுல வராதீங்க, இருக்கற செலவுல இதுக்கு என்ன இப்ப அவசரம்னுடுவாரு. எதுக்கும் நீங்களா ஒரு எஸ்டிமேட் போடுங்களேன். முடிஞ்சா டீடெய்ல்டா செய்யுங்க.''

நாலு நாட்கள் பல குறிப்புகள் எடுத்து பெரிய ரிப்போர்ட் தயார் செய்தார். லோக்கலாய் ஒரு மேஸ்திரி கூட்டி வந்து அவர் உதவியுடன் கணக்குப் போட்டார். எடுத்துக் கொண்டு டி.ஐ.ஜியிடம் ஓடினார்.

''வச்சுட்டு போங்க. பெரியவர்கிட்ட பேசினேன். பார்க்கலாம்னு சாதாரணமா சொன்னாரு.மறுபடி பேசிப் பார்க்கறேன். பசங்கள வச்சுக்கிட்டு முடியுமா?''

''தட்டிக் கொடுக்கணும் சார். கொஞ்சம் ரேஷனை அதிகப்படுத்தணும். பார்லி வாட்டராவது தரணும். வாரம் இரண்டு நாள் அசைவ சாப்பாடு போடலாம்.

''கஷ்டம். பார்ப்போம்.''

ஒரு வாரம் கழித்து உடனே ஐ.ஜி,ஆபீஸுக்கு வரச் சொல்லித் தகவல் வந்தது. அங்கு வர, டி.ஐ.ஜி நடுவே மடக்கி அவர் காரிலேயே கோட்டைக்குக் கூட்டிப் போனார்.

டி. ஐ. ஜி வழியில் மிகவும் சீரியஸாக இருந்தார்.

''சரவணன்'' மெல்ல அழைத்து விட்டு தொண்டையைச் செருமிக் கொண்டார், ''இது கிடைக்காது போல இருக்கு முதல்வரை. இம்ப்ரஸ் பண்ணாலொழிய இது நடக்காது. யார் ஐடியா இதுன்னு ஐ ஜி கேட்டாரு. சரவணன்னு உங்க பேர் சொன்னேன். வேற வேலை இல்லையா அவருக்குன்னு எரிஞ்சு விழுந்தாரு, ஆனா, அடுத்த திட்டங்கள் போலீஸ்

டிபார்ட்மென்டுதுன்னு ஏதாவது. தரணுமே... இதைக் கடைசியா சேர்த்திருக்காங்க, முத விஷயம் போலீஸ் குவார்ட்டஸ். அடுத்தது போலீஸ் ஹாஸ்பிடல் நாலு. இது முழுசா கிடைச்சா அதிர்ஷ்டம். ஒருவேளை முதல்வர் கண்ணுல கடைசி வரி பட்டு 'இது யார் ஐடியா' ன்னா உங்க பேர் சொல்லிடட்டா...''

சரவணன் பேசாதிருந்தார்,

''உங்க பேர் சொன்னா 'யார் அது'ன்னு கேள்வி வரும். கஞ்சா சமாச்சாரம் இழுபடும். அத்தாளான். ஹுட்டா கஷ்டம். தேவையில்லாம இதையும் சந்தேகப்படு வாங்க.''

''உங்க பேரே சொல்லிடுங்க சார்.''

''தட்ஸ் மை ஐடியா, ஐ வில் ட்ரை. நம்மால ஒரு நல்ல திட்டம் பாழாகக் கூடாது. பாருங்க, இது கேட்கத் தான் கூப்பிட்டேன், ஒண்ணு செய்யுங்க. நான் கான் ஃபிரன்ஸ் ஹாலுக்குப் போறேன். நீங்க முதல்வர் பி.ஏ ரும்ல இருங்க. அவசியமானா கூப்புடறேன்.''

பிற்பகல் இரண்டு மணிக்கு உயர் போலீஸ் அதிகாரி கள் கூட்டம் கலைந்து வெளியே வந்தார்கள். டி. ஐ. ஜியை இரண்டு மூன்று பேர் கை குலுக்குவது தெரிந்தது

டி. ஐ. ஜி அருகே வந்தார். சுவர் ஓரம் தள்ளிக் கொண்டு போனார். ''கங்கிராட்ஸ். திட்டம் ஓகே சொல்லி விட்டார் முதல்வர்' ரொம்ப நல்ல மூட்ல இருந் தாரு. ஐ.ஜியை விட்டே ஓகே வாங்கி விட்டேன். பசங் களே கட்டறதால டெண்டர் எதுவும் இல்லை. கவர் மெண்ட் ஸ்டாக்லேர்ந்து வரும். ஒரு இஞ்சினியர் இரண்டு அஸிஸ்டென்ட்ஸ் இதுக்கு டெப்யூட் ஆவாங்க. அவங்க வந்ததும் வேலை ஆரம்பிக்கலாம். ஐ.ஜி உங்களைப்

பார்த்து பேசுவாரு. என்னை கன்ஸல்ட் பண்ணினதா சொல்லுவங்க பைத வே ஒரு லெட்டர் எழுதுங்க. டேட் போடாத, பசங்க இதுக்கு விருப்பப்பட்டதா உங்க சார் புல ஒரு லெட்டர் எனக்கு என் பேர் போட்டு அட்ரஸ் பண்ணுங்க.''

வெளியே மந்திரிகள் நடமாட்டம் அதிகமாய் இருந்தது. மடமடவென்று இதற்கு அனுமதி தருமாறும், பையன்கள் விருப்பம் சொல்லியும் டி.ஐ.ஜிக்கு ஒரு லெட்டர் எழுதினார். கையெழுத்திட்டார். தன் ரப்பர் ஸ்டாம்ப் பாக்கெட்டிலிருந்து எடுத்து மை ஒற்றி முத்திரையிட்டார். இரண்டாய் மடித்து டி. ஐ.ஜிக்குக் காத்திருந்தார்.

வெளியே முதல்வர் வீட்டுக்குப் போகக் கிளம்பி விட்டார் என்று பரபரப்பு தெரிந்தது. ஐ. ஜி. முதல்வர் அறை வாசலில் சல்யூட் செய்து விடை கொடுத்தார். டி. ஐ. ஜி வழி ஏற்படுத்திக் கொண்டு கீழிறங்கினார். முதல்வர் படியிறங்க, ஐ, ஜி இவனுக்கருகே வந்தார்.

சரவணன் விறைப்பாய் சல்யூட் அடித்தார்.

''சரவணன், புதுசா ஒரு வேலை உங்கக்கிட்ட ஒப்படைக்கப் போறேன்.''

''சார்...''

''உங்க இடத்தை உங்க பசங்களை வ்ச்சே ரிப்பேர் பண்ணிக்க முடியுமா?''

''முடியும் சார். இது அப்ளிகேஷன்.'' நீட்டினார், ஐ.ஜி பிரித்துப் பார்க்க, ரப்பர் ஸ்டாம்ப் சுவடு மடித்த எதிர்ப்பக்கம் ஒட்டிக் கொண்டிருப்பது தெரிந்தது.

''இப்ப போட்டீங்களா ரப்பர் ஸ்டாம்ப்.''

''எஸ் சார்.''

''இப்பதான் எழுதினீங்களா?''

''எஸ் சார்.''

''டி.ஐ. ஜி. பல மாசமா திங் பண்ணதா. முதல்வர் கிட்ட சொன்னாரு.'' தன் ஆர்டர்லியிடமிருந்து ஃபைல் வாங்கினார். ''இது யார் கையெழுத்து உங்களது மாதிரி.''

சரவணன் பேசாதிருந்தார்.

க்ஷண நேரத்தில் ஐ.ஜிக்குப் புரிந்து விட்டது. ''முட்டாள், உங்க ப்ளானா அது? ஏன் அதை அவர்கிட்ட கொடுத்தீங்க? டக்கென்னு பேரைத் தட்டிக்கிட்டு போயிட் டானேய்யா. யாரு இப்ப சூப்பிரன்டெண்டென்ட் சரவணனான்னாரு முதல்வர். ஆமா சார், கஞ்சா கேஸ் மதுரைலன்னாரு டி.ஐ.ஜி இப்படி போட்டுக் கொடுக் கறவன் கிட்ட போய் ஒரு நல்ல பிளானக் கொடுத்தீங் களே, நீங்க நல்ல பேர் வாங்கியிருக்கலாமே. ஏன் சரவணன் இப்படிப் பண்ணீங்க. உங்க பேர்ல சந்தேகம் யில்லை முதல்வருக்கு. கஞ்சா கேஸ் பொலிடிகல் ப்ராவல் னுட்டாரு. ச்சே...கோட்டை விட்டுட்டீங்க. அதான் பார்த்தேன். எப்படிடா அந்த மரமண்டைக்கு இந்த மாதிரி நல்ல விஷயமெல்லாம் தோணுதுன்னு நானே ஒரு செகண்ட் அசந்து போயிட்டேன், டீடெய்ல் ரிப்போர்ட் நீங்களா?''

''யெஸ் சார்.''

ஒரு நிமிடம் மௌனமாய் இருந்த ஐ.ஜி. சரி...இது மாதிரி வேற எதிலயும் கோட்டை விட்டுராதீங்க. காண்டாக்ட் மீ டைரக்ட்லி டி.ஐ.ஜிய நம்பாதீங்க.''

''இந்த அப்ளிகேஷன் சார்...''

''நான் வாங்கிட்டேன்னு சொல்லுங்க. வேற எதுவும் பேச வேண்டாம். நாம பேசினது யாருக்கும் தெரிய வேண்டாம, வீட்ல கூட்டிட்டு வந்துட்டீங்களா?''

''இல்லை சார்.''

''ரிப்பேர் பண்ணிட்டு கூட்டிட்டு வாங்க.''

சரவணன் துவண்டு போனார். ச்சே... இது திட்ட மிட்ட சதி.

''வருத்தப்பட வேணாம் சரவணன். நம்ப டிபார்ட் மென்ட்ல இது சகஜம். நாமதான் விழிப்பா இருக்கணும். திறப்பு விழாவுக்கு முதல்வரைக் கூப்பிட ஏற்பாடு பண்றேன். அப்ப தைரியமா பேசுங்க ''

''யெஸ் சார்.''

''ஆல் த பெஸ்ட். பசங்க ஜாக்கிரதை.''

இரண்டே வாரத்தில் ஒரு இன்சினியர், அஸிஸ் டென்ட் இன்சினியர் மட்டும் வந்தார்கள். தனி அறை கேட்டார்கள். கிட்டத்தட்ட அவர் போட்ட ப்ளானை ஆதாரமாக வைத்து அவர்கள் ஒரு பிளான் தயாரித்தார் கள் சிமெண்டும் ஜல்லியும், மரக்கட்டையும், சவுக்குக் கட்டைகளும் வந்து இறங்கின.

வேலை ஆரம்பிக்கும் முதல் நாள் காலையில் ஐ. ஜி வெள்ளைச் சட்டையும், நீலப் பாண்டுமாய் கார் விட்டு இறங்கி வந்தார். பையன்களுடன் பேசினார். டீ குடித் தார். சமையல் வேலைகளைப் பார்வையிட்டார்,

பரேட் நடந்து அனைவரும் ஆழ்நிலைத் தியானத்தில் அமர்ந்த போது வியப்பால் விழி உயர்த்தினார். சின்ன அசைவு கூட இல்லை. பையன்களின் முகங்கள் பூச்செடி களைப் போல அமைதியாய் இருந்தன. கராத்தே டெமான்ஸ்ட்ரேஷனில் செங்கல் உடைத்த போது.

''இருங்க...இருங்க...நமக்கு செங்கல் வேணும்.'' என்று சொல்ல பையன்கள் சிரித்தார்கள்.

''சரவணன். பசங்க கட்டுக்குள்ள இருக்காங்க. ஆனா ஜாக்கிரதை சாரம் கட்டினா வெளிய ஓட வாய்ப்பு உண்டு. செக்யூரிடி பொஸிஷன் என்ன...''

''ரொம்ப வீக் சார்.''

''சரி...நான் ஒரு இன்ஸ்பெக்டர் இரண்டு கான்ஸ டபிள் டெப்யூட் பண்றேன். ஒரு மாசத்துக்குப் பிறகு அனுப்பிடுங்க.''

தேங்காய் உடைத்து, கற்பூரம் ஏற்றி பூஜை செய் தார். கிளம்பினார்.

''சார்...இந்த இடத்துக்கு வர விரும்பற ஆளா அனுப்புங்க சார்.''

''யாருக்கும் வர விருப்பம் இருக்காது. உங்க கவலை புரியுது. புதுசா ட்ரெய்ன் ஆன பையனை அனுப்பறேன், குட்ஃபெல்லோ, துடிப்பா இருப்பான்.''

வேலைகள் துவங்கின. நாலு நாளில் இன்ஸ்பெக்டர் வசந்த குமார், இரண்டு கான்ஸ்டபிள்களோடு வந்து சல்யூட் அடித்தார்.

இருபத்தேழு வயசுப் பையன்.

''ஐ.ஜி உங்களைப் பத்தி உயர்வா சொன்னார் சார். ரவுண்ட் த கிளாக் உங்களோட இருக்கச் சொன்னாரு.''

''தேவையில்லை, வசந்தகுமார். பசங்க ஈஸியா படிஞ்சுட்டாங்க. கொஞ்சம் அலர்ட்டா இருந்தா போதும்.''

''வெறும் தியானம் மட்டும்தானா? யோகா செய்ய மாட்டீங்களா'' வசந்த குமார் வியந்தார்.

''கராட்டே செய்வோம் சார்.''

''வீக்கான பசங்க கராட்டே செய்யுங்க. தடி ஆளுங்க என் பக்கம் வாங்க யோகா சொல்லித் தரேன்.''

''யோகான்னா என்ன சார்?''

வசந்தகுமார், ஜட்டியோடு தரையில் உட்கார்ந்தார். உடம்பைப் பல கோணங்களில் வளைத்தார். ஒற்றைக் கட்டை விரலால் நின்று காட்டினார். எல்லா பையன்களும் ஆவலானார்கள்.

''சார்...கராட்டே மார்ஷியல் ஆர்ட். அதை விட யோகா பெட்டர். இந்தப் பசங்களுக்கு அடிதடி -சொல்லித் தரலாமா?''

''கராட்டே கூட ஒரு வகை யோகா, வசந்தகுமார்.''

''கரெக்ட் சார், பதிலுக்கு நம்ம மேலயே பாஞ்சுட்டாங்கன்னா...''

''கராட்டே டிஸிப்ளின் வர விஷயம்.''

''டிஸிப்ளின் போயிடுச்சுன்னா ரொம்ப டேமேஜ் நடக்கும் சார்...''

''நீங்க சொன்ன மாதிரி இரண்டு குருப்பா பிரிச்சிடுங்க. பெரிய பசங்களுக்கு யோகா சொல்லித்தாங்க.''

எட்டு மணிக்கு சுவர் கொத்தும் வேலை துவங்குமுன், ஆழ்நிலைத் தியானம், யோகா, கராத்தே வகுப்புகள் நடந்து முடிந்து வரும் பையன்கள் சாரங்கட்டி உச்சியில் ஏறி, ஓடு பிரித்தார்கள். உச்சி சாரத்தில் ஸ்ரீநிவாசன் இரண்டு கைகளாலும் தலைகீழாய் நின்று காட்டினான். கலவரப்படுத்தினான். மேல் கூரை மட்டும் புதிதாகப் போடப்பட்டது. மற்ற இடங்களில் சிமெண்ட் ஒட்டு வேலைகள் நடைபெற்றன. கழிவு நீர் குழாய்கள் செப்பனிடப்பட்டன. தளத்தில் அங்கங்கே ஒட்டு வேலை செய்யப்பட்டு, சுவர் பூசப்பட்டு சுத்தமாய் வெள்ளை அடிக்கப் பட்டது.

இரண்டு மூன்று பேருக்கு சுண்ணாம்பு ஒவ்வாமல் ஜுரம் வந்தது. கலவை கலந்தது பையன்கள். பூசியது பையன்கள். ஜன்னல்களை இடித்து மறுபடி செப்பனிட்டுப் பொருத்தியது பையன்கள். இரண்டு உதவி இஞ்சினியர்களும் மிக ஆதரவாய் இருந்தார்கள். வசந்தகுமார் பம்பரமாய்ச் சுழன்று வேலை வாங்கினான்.

டி.வியில் இரண்டாம் உலகப்போர் பற்றி படம் காட்டிய போது வசந்தகுமார் அதுபற்றி அதிகம் விளக்கினான். 'டர்ட்டி டசன் பார்த்தீங்களா?' என்று கேட்டான். இரண்டு மூன்று பேர்தான் கை தூக்கினார்கள். ஒரு கார்ட்டூன், ஒரு டர்ட்டி டசன் படம், ஒரு தமிழ்ப் படம் என்று ஒரு நாள் இரவுக்கு வீடியோ வாடகைக்கு எடுத்தான். சனிக்கிழமை இரவு முழுவதும் பையன்கள் படம் பார்த்தார்கள்.

சிறையிலிருந்த பன்னிரண்டு கொலைகாரர்களைப் பொறுக்கி, அவர்களை ட்ரெய்ன் செய்து ஒரு ராணுவக் கூடத்தை அழிக்கும் படம். பார்த்துவிட்டுப் பையன்கள் உணர்ச்சி வசப்பட்டார்கள். பன்னிரண்டு பேரில் பத்து பேர் ஒவ்வொரு விதமாய் செத்துப் போன போது அழுதார்கள். வேலைகள் நடக்கும்போது நடுவே டி.ஐ. ஜி. இரண்டு முறை வந்தார். ''என்ன சரவணன், வத்தி வச்சிட்டியா ஐ. ஜிகிட்ட.''

''இல்ல சார்.''

''உன்னை அப்ளிகேஷன் எழுதச் சொல்லியிருக்கக் கூடாது. டைப் அடிச்சி வாங்கியிருக்கணும். முதல்வர் கிளம்பினதுல வுட்டுட்டேன். கையெழுத்து வச்சு உன் ப்ளானா உன் ப்ளானான்னு கேட்டாரு. கிடையவே கிடையாது. என் ஐடியான்னுட்டேன்.''

''சரி, சார்.''

''நீயும் அப்படியே சொல்லிடு.''

''யெஸ் சார்.''

கட்டடச் சீரமைப்புப் பணி முடிந்த பிறகு முதல்வருக்கு அழைப்பு அனுப்பினார் ஐ. ஜி. கடைசி நேரம் அவர் வர முடியவில்லை. வேறு ஒரு மந்திரி வந்தார். பாராட்டினார். சுற்றிப் பார்த்தார்.

''நகரத்து மையத்தில் நல்லா இருக்கே கட்டடம்'' வியந்தார்.

நான்கு நாள் கழித்து இடி விழுந்தது.

''செங்கல்பட்டு அருகே உள்ள புதிய கட்டடத்தில் இனி பள்ளி செயல்படும். இந்தக் கட்டடம் அரசுக்குத் தேவைப்படுகிறது. எப்போது வேண்டுமானாலும், காலி செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.''

சரவணன் ஐ. ஜியிடம் ஓடினார்.

''சார் பசங்க... தாங்க கட்டினதா பெருமையா நினைச்சுக்கிட்டு அந்த இடத்தையே தங்களுடைய இடமா மாத்திட்டாங்க. சிறைங்கற எண்ணமே போயிடுச்சு. இப்ப போய்...''

ஐ.ஜி. உதடு பிதுக்கினார்.

''அதற்குப் பெயர்தான் அரசு இயந்திரம். ஆணா, பெண்ணா, கையா, காலா? எதுவும் பார்க்காத இயந்திரம்.''

மந்திரியை வரவழைத்தது பிசகு.''

''கெல்லீஸ் நடுவுல இத்தினி பெரிய கட்டடம் ஜெயிலா இது.''

''சிறுவர் குற்றப்பள்ளி சார்.''

''அக்கம் பக்கம் எதும் புகார் வரலை?''

''சின்ன சின்னதா பிரச்சனை வருதுன்றீங்களா?''

பதில் சொல்லாதுதான் இருக்க முடிந்தது.

''கல்வி இலாகா பெருத்துப் போச்சுப்பா. புதுசா கட்டடத்துக்கு சாங்ஷன் வாங்கிட்டடம். அடைசலா இருக்கு இப்ப. இங்கிருந்து பசங்களைக் கழட்டி வுட்டா என்ன... ஐ. ஜி. எங்கப்பா?''

என்ன பேசினாரோ? எது பேசினாரோ? மறு வாரம் தாக்கீது வந்து விட்டது.

தடுக்க முடியும் என்று தோன்றவில்லை. சரவணன் இடிந்து போனார்.

பையன்கள் அந்தக் கட்டடத்தின் மீது உயிராய் இருந்தார்கள். ஒரு ரூபாய் கூலி கூட இல்லாமல், செப்பனிட்டார்கள், கூட ஒரு குவளை பார்லி கஞ்சிக்காகச் சகலமும் செய்தார்கள்.

இது என் பிசகு. கட்டின பிசகு.

பாதுகாப்பு உதவிக்கு வந்திருந்த வசந்தகுமாரும் ஸ்பெஷல் கிரைம் பிராஞ்சுக்கு மாற்றப்பட்டு விட்டார். வசந்தகுமார் அறைக்கு வந்து சல்யூட் அடித்தார்.

''என்ன வசந்த்?''

''ஸ்பெஷல் கிரைம் பிராஞ்ச் மாத்திட்டாங்க சார்.''

''குட். ஆல் த பெஸ்ட்.'.

''பள்ளிக்கூடம் இடம் மாறுதுங்களா?''

''ஆமா.''

''பசங்க அப்ஸெட் ஆவானுங்க சார்.''

''யெஸ் வசந்த குமார்.''

''சார்.''

''இந்தப் பசங்களைப் பத்தி என்ன நினைக்கிற?''

''எமோஷனல் சார். ஜெயில் கைதிங்க மாதிரி ஆடி அடங்கினவங்க இல்லை, தட்டிக் கொடுத்தா ஒட்டிக்கறானுங்க. அடிச்சா முறைக்கறானுங்க.''

''ஸோ...?''

''ரொம்ப அணைச்சுக்கவும் கூடாது. ரொம்ப உதறிடவும் கூடாது சார்.''

''பர்ட்டிகுலரா யாராவது ப்ராப்ளமா?''

''பெரிய பையன் சார்...பிறகு...''

''பிறகு?''

''ரமேஷ் சார்''

''ரமேஷா?''

''யாரோ பொண்ணு தினம் பார்க்க வருமாம். இப்ப வர்றதில்லையாம். கொலை வெறியோட இருக்கான்.''

''உன்கிட்ட அப்படி...?''

''வெளிய சொல்லலை சார். பெரிய பையன் முரட்டு கேஸ். தட்டி அடக்கிடலாம். ரமேஷ் ரிவைஞ்ஜ் டைப். அமைதியா திட்டம் போடறவன்.''

''பிறகு?''

''ஸ்ரீநிவாசன் கிறுக்கன். பாராட்டுக்கு எது வேணா செய்வான். நீங்களும் நானும் எதிரின்னா உங்க பாராட்டுக்கு என்னைக் கொல்லுவான், என் பாராட்டுக்கு...''

''அந்தப் பையன் ஆறுமுகம்...''

''அமைதியான பையன் சார். திடமானவன். மத்த பசங்க பத்தி அதிகம் கவலை இல்லை. பெரிய பையன், ரமேஷ், ஸ்ரீநிவாசன்...''

''ஸ்ரீநிவாசன் பத்தி...''

''அவன் கடை முதலாளிய எச்சரிக்கை பண்ணி வாக்குவாதம் நடத்திட்டு, அவரு போடா நாயேன்ன பிறகு சுவிட்ச் போட்டு கொன்னவன் சார், கிரிமினல் மைண்டட்.''

''தேங்க் யூ வசந்தகுமார்.''

''சார்...உங்களைப் பத்தி முழுக்க ஐ. ஜி. சொன்னாரு.''

''எப்ப...?''

''ஒரு நைட் ரவுண்ட்ல.''

''எனிதிங் பர்டிகுலர்?''

''உங்களுக்கு வீடுகூட சரியா இல்லையேன்னு கஷ்டப் பட்டாரு.''

''நோ...நோ.''

''உங்களை டிரான்ஸ்ஃபர் பண்ணச் சொல்லி உங்க மேடம் அவருக்கு பர்ஸனலா லெட்டர் எழுதியிருக்காங்க சார்.''

''கடவுளே...''சரவணனுக்கு அதிர்ந்தது.

''சார் என் ரிலீவிங் ஆர்டர்...?''

கையெழுத்திட்டார். உள்ளே கொதித்தது. புஷ்பா... புஷ்பா...இது கேவலமில்லையா? என்று கொதித்தது.

என் வாழ்க்கையில் எங்கோ ஒரு தவறு நடந்திருக்கிறது. மாபெரும் தவறு நடந்திருக்கிறது. இருபத்தி மூன்று வயதில். லட்சியம், சமூக சிந்தனை. தெளிந்த

வாழ்க்கை என்று கனவு கண்டது தவறா? இல்லை. புருஷன் என்பவன் காசு கொண்டு வந்து கொட்டுபவன் என்கிற பெண்ணை மணந்தது பிசகா. தாடியைக் களைந் தெறிவதா இல்லை கூழ் வேண்டாம் என்று முடிவு செய் வதா? இரண்டும் இல்லாது கூழில் முடி விழுந்தாலும் போகட்டும் என்று குடிப்பதா? இத்தனை நாள் இப்படித் தான் குடித்தனம் நடந்தது. நீ என்ன சொன்னாலும் சரி...எத்தனை இம்சைப் படுத்தினாலும் சரி. இதான் என் வழி என்று போய்க் கொண்டிருந்தது. இன்றைக்கு வேறு வடிவம் எடுத்திருக்கிறது.

இதுவரை ஐ. ஜி. கேட்கவில்லை. ஒரு வேளை அவர் குடித்தனமும் முடி விழுந்த கூழ்தானோ...வீட்டுக்கு வீடு வாசற்படி என்கிற நினைப்பா? நேற்று போலீஸில் சேர்ந்த வசந்தகுமார் வாயால் இது கேட்க நேரிட்டது என் தலையெழுத்து.

வசந்தகுமார் நீயாவது ஜாக்கிரதையா இரு. உன் மனைவியை நீயே தேர்ந்தெடு.

இப்போது எது முக்கியம்? புஷ்பாவா...? பள்ளியின் மாற்றமா? புஷ்பா பெரனியல் ப்ராப்ளம். பள்ளி மாற்றம் தடுக்க முடியுமா? எங்கிருக்கிறது அந்தப் புதிய பள்ளி? எப்படி மாற்றப் போகிறோம்?

பையன்களை முதலில் மனத்தளவில் தயார் படுத்தி விட வேண்டும். ''எங்க சார் இருக்கு பூதலூர்?'' என்று கேட்டார். அந்த இடம் போய்ப் பார்த்துவிட்டு சொல்லலாமா.

''ஜீப் எடுங்க கதிரவன்.'' பிற்பகல் வண்டி ஏறினார்.

இரண்டு மணி நேரத்தில் பூதலூர் கிராமம் போனார். பஞ்சாயத்து தலைவருக்கு ஆள் அனுப்பினார். எழுபது

குடிசைகள் நிறைந்த குக்கிராமம். கிழக்குத் தொடாச்சி மலையில் பல பிரிவுகள். அதில் ஒரு பிரிவு நாலு ஐந்து குன்றுகள் அடங்கிய மலைத் தொடர். அதன் அடிவாரம் பூதலூர் கிராமம்.

பொட்டல்காடு மண்ணில் அங்கங்கே தலை நீட்டிக் கொண்டிருக்கிற பாறைகள். சோளம் விதைக்கப்பட்டு வற்றியிருந்தது— உற்று தெருவைக் கவனிச்சு நிறைய ஓட்டாஞ்சல்லிகள். இது சாராய கிராமம். ஊறல்தான் வருமானம். பின்னே இருக்கிற மலைக்கு ஏறிப்போய் சாராயம் காய்ச்சி, தலைச்சுமையாய் கொண்டு வந்து... கிராமத்தில் கடை போட்டு விற்பார்கள். மது விலக்கு அமுலில் இருப்பதோ, அரசாங்கமே சாராய வியாபாரம் செய்வதோ, இவைகளைப் பாதிக்காது. இது தனித் தயாரிப்பு. தனி விற்பனை. வரியில்லாத வியாபாரம். பிழைக்க வேறு வழியில்லாததால் உண்டான நிலைமை.

''இங்கே எங்கே இருக்கிறது பள்ளி?''

''அது இன்னும் ஒரு மைலு உள்ள போவணுங்க.'

''நேரா மலை தெரியுது. எங்கய்யா போறது உள்ள?''

''மலைய ஓட்டினாப்பல ஒரு மைலு போவணுங்க. அங்க இரண்டு மாடி கட்டிடம் கட்டறாங்க. ஜெயிலு வருதாம். நாங்க கூடாதுன்னு மனு கொடுத்துருக்கோம்.''

''ஏன்?''

''கொலைகாரன், கொள்ளைக்காரன், ஜேப்படி. கன்னக்கோலுன்னு ஊருக்குள்ள கொண்டாந்து வச்சா... பொண்டு புள்ளைங்க இருக்கற இடம். எங்க இடம் கெட்டுடுமே.''

''இப்போது என்ன வாழ்கிறது? சாராயம் காச்சறது தானேய்யா தொழிலு.''

''அப்படியெல்லாம் இல்லீங்க.''

''யோவ்...''

''யாரோ ரெண்டு மூணு பேர் செய்யறானுங்க. எங்களுக்குக் கெட்ட பேரு.''

''ஊதுய்யா...''

''நாங்களும் சாப்பிடறதுதான். உழைப்பாளிங் களுக்கு அதாங்க தாய்ப் பாலு.''

ஜீப் கிராமம் தாண்டி உள்ளே போயிற்று. மண் சாலை. பனை உள் வாங்கி வளைந்திருக்க பனையை ஒட்டினாற்போல சாலை போயிற்று. முற்றிலும் உள் வாங்கின இடத்தில் மற்றொரு மலைத்தொடர் துவங் கியது. இரண்டு மலைகள் இணையும் இடத்தில், ஒற்றை முள் கம்பி வேலி போட்டு ஒரு இரண்டு மாடிக் கட்டடம், ஜன்னல்கள் இல்லை. கதவு இல்லை. மேலும் கீழுமாய் இரண்டு தளம். அரைவிட்டக் கட்டடம். நடுவே ஹால். ஒரு கோடி சமையலறை, எதிர்க் கோடி கழி வறை. உள் சுவர் பூசப்பட்டிருக்கிறது. வெளிச்சுவர் செங்கல்லாய் நின்றது.

பின்பக்கம் மலை ஒட்டி சுவர் எழுப்பிக் கொண்டிருந் தார்கள்.

''எப்போது வேலை முடியும்?''

''முடிஞ்சுடுச்சுங்களே. இதோ இந்தச் சுவர் எழுப் பினா ஆச்சு.''

''என்னய்யா இது... ஜன்னலு வாசக் கதவு எப்ப வைப்பீங்க.?''

''அதுல சிக்கலுங்க. இது கட்டறதுக்கு டெண்டர் கொடுத்தது நாலு வருஷம் முந்தி. இப்ப கட்டு, கட்டுன்னு உசிரு எடுத்தாங்க. நம்ம காண்ட்ராக்டர்

கட்டடம் எழுப்பிட்டு, இந்த துட்டுக்கு இதான் முடியும். மேற்கொண்டு வேலைக்கு வேற டெண்டர் வுடுங்கன்னுட்டாரு நாலு வருஷத்துல சிமெண்ட்டு மூணு தரம் விலை உசந்து போச்சுங்களே. இந்தச் சுவருகூட தர்மத்துக்குக் கட்டினதுதான். இது பிளான்லயே இல்லை. கவர்மென்ட் கேட்டுச்சு...கட்டுனாரு.''

''என்ன கட்டறீங்க தெரியுமா?''

''யாருக்குத் தெரியும்?''

''யாரு கண்ட்ராக்டர்?''

'அவர ஏன் கேட்கறீங்க. கவர்மென்ட்டைக் கேட்கணும். ஐயா யாருங்க?''

''கவர்மென்ட்.''

ஜீப் சீறித் திரும்பிற்று. சரவணன் ஐ. ஜியிடம் கட்டட விவரம் போனில் சொன்னார். ஐ.ஜி கவலையானார்.

''சரி, பார்க்கலாம். உள்ளாட்சித் துறைலேர்ந்து உங்களுக்குத் தகவல் வரும்''

இரண்டு நாளில் நேரிடையாகத் தாக்கல் வந்தது. வந்து பார்க்கச் சொல்லி சப்கலெக்டர் கே. ரமணி என்று போடப்பட்டிருந்தது. சைதைக் கோட்டம் காம்ப் என்று எழுதப்பட்டிருந்தது. ஐ. ஜி தகவல் தெரிவித்துவிட்டுப் போனபோது போன இரண்டு நிமிடத்தில் கதவு திறந்து உள்ளே கூப்பிட்டார்கள்.

எதிரே பூ மாதிரி ஒரு முப்பத்தைந்து வயதுப் பெண்மணி நின்றார்.

மெல்ல சல்யூட் அடித்து ''நான் சரவணன் சூப்பரின்டெண்டெண்ட், சிறுவர் குற்றப்பள்ளி'' என்றார்.

''நான் ரமணி, சப்கலெக்டர் செங்கை மாவட்டம்.''

மறைக்க முயன்றும், ரமணி என்பது பெண் பிள்ளை என்கிற ஆச்சர்யம் முகம் விட்டுப்போகவில்லை.

''லைக் டு ஹேவ் காஃபி''

''யெஸ் மேடம்.''

''உட்காருங்கள்.''

சரவணன் நெளிவோடு உட்கார்ந்தார்.

''நேற்று ஐ.ஜி அரைமணி நேரம் உங்களைப் பற்றிப் பேசினார். உங்களைப் பற்றி ஒரு முழு படம் எனக்கு அவரிடமிருந்து கிடைத்தது.''

''நான் சாதாரண போலீஸ்காரன் மேடம்.''

''சாதாரணமாக்கப்பட்டீர்கள் என்பது எனக்கும் தெரியும். விஷயத்துக்கு வருவோம்.''

''கட்டடம் முடிக்கப்படவில்லை.''

''முடித்துவிடலாம்.''

''எப்போது மேடம். எனக்குத் தாக்கீது வந்து விட்டது.''

''இதில் சிக்கல்கள் வந்திருக்கின்றன, அந்தக் கட்டடத்தை நீங்கள் ரிப்பேர் செய்திருக்கக்கூடாது.''

''ஏன்?''

''அதையும் பையன்களை வைத்து செய்திருக்கக் கூடாது.''

''அது பையன்கள் நலனுக்காக, அவர்களை உற்சாகப்படுத்த. மேலும் மழை நாளில் தூங்கவே முடியாத இடமாய்...''

''அதுதான் தவறு. இந்தக் கட்டடத்தால் சிக்கல்கள் வந்துவிட்டன. பொருளாதாரச் சிக்கல், சிகப்பு நாடா

சிக்கல். இப்போது ஒரு புதிய யோசனை தரப்பட்டிருக்கிறது.''

''என்ன?''

''அந்தக் கட்டட மிச்ச வேலைகளையும் அந்தப் பள்ளி மாணவர்களையே வைத்து முடித்து வைத்தால் என்ன?''

''மேடம்''

''நீங்கள் காட்டிய வழி.''

''அது பொட்டல் காடு. எந்த வசதியும் இல்லாத இடம். மேலும் பாதுகாப்பு கொஞ்சமும் இல்லை. ஆறு போலீஸ் வைத்து நாற்பத்தெட்டு பையன்களை எப்படி? ஒரே ஒரு முள்வேலி.''

''கதவு வேண்டாம் ''

''பிறகு?''

''என்னிடம் ஆலோசனை கேட்டிருக்கிறார்கள். இது சரிவருமா என்று கேட்கிறார்கள். உங்கள் ஒப்புதல் பேரில் என் ரிப்போர்ட் தருவதாய் சொல்லியிருக்கிறேன்.''

''என்ன ஒப்புதல் தர...?''

''பையன்கள் பாதுகாப்புக்கு-அவர்கள் வேலை முடிப்பார்கள் என்கிற நம்பிக்கைக்கு—நீங்கள் ஒப்புதல் தர வேண்டும்.''

''என்னால் முடியாது.''

'ஏன் என்று கேள்வி வரும்.''

''பல காரணங்கள் சொல்வேன்,''

''ஒத்துழைக்க மறுக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டு வரும் மிஸ்டர் சரவணன். நான் சகல பொருட்களும் தருகிறேன். அரசாங்கக் கட்டடத்தில் உள்ள பழைய

பொருட்கள், உடைக்கப்பட்ட மரங்கள் நிலைப்படிகள். பழைய கற்கள், ஒதுக்கப்பட்ட இரும்புக் கம்பிகள்.''

''ஸ்கிராப்பிலிருந்து கட்ட வேண்டுமா?''

''இதுவும் யோசனையாகச் சொல்லப்பட்டது.''

''யார் யோசனை இது?''

''டி.ஐ.ஜி.''

''பாஸ்டர்ட்.''

''எனக்குப் புரிகிறது மிஸ்டர் சரவணன். ஆனால் கடுமையான வார்த்தை தவிர்ப்பது நல்லது, ஐ.ஜி. உங்களை இதை ஏற்றுக் கொள்ளச் சொன்னார்.''

''கடவுளே...''

''உங்களை நிரூபிக்க இது ஒரு வழி சரவணன். நீங்கள் காட்டிய வழி.''

''இது எப்படி?''

''முடியும். உங்களால் முடியும். இன்னும் பத்து நாட்களுக்குள் பழைய மரக்கட்டைகள். இரும்புக் கம்பிகள் அனுப்பப்பட்டு விடும். புதிய உபகரணங்கள் வாங்க இருபதாயிரம் தனியே என்னிடம் தரப்பட்டிருக்கிறது.''

''இது கட்டளையா?''

''கிட்டத்தட்ட.''

''என்றைக்கு அங்கே வரவேண்டும்?''

''நாளையே வரலாம்.''

''ஒரு முள்வேலி துணை வைத்து நாற்பது பையன்கள்.''

''மாணவர்களைச் சரவணன் நல்ல கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார். முள்வேலி தேவையில்லை என்று எழுதப்பட்டிருக்கிறது. ஏற்றுக் கொள்ளுங்கள் சரவணன். உங்களுக்கு இது உதவும். ஒன்று நிச்சயம். இது வெற்றி யானால் பெரிய திருப்பம் கிடைக்கும்.''

''யாருக்கு?''

''சிறைப்பள்ளிக்கு. ஒரு ஆய்வு அரசால் நடத்தப்பட் டிருக்கிறது. சிறைப்பள்ளியை மாடல் ஸ்கூல் என்று அழைக்கப்பட வேண்டும். யூனிஃபார்ம் கூடாது. அவர் களைக் குற்றவாளிகளைப் போல் கருதாமல் மாணவர் களாகக் கருத வேண்டும் என்று ஆய்வு செய்யப்பட்டு பரிந் துரை வழங்கப்பட்டிருக்கிறது. மாடல் ஸ்கூலுக்கு மாட லாக இருக்கப் போகிறீர்கள்.''

''நான் இதற்குப் பதில் கஞ்சா பயிர் வளர்த்திருக் கலாம்.''

''தவறு—தவறு சரவணன். சற்று முன் நீங்கள் சொன்ன கெட்ட வார்த்தையை விட இந்த வாசகம் மோசமானது. ஒரு போதும் இப்படிப் பேசாதீர்கள் ப்ளீஸ் மீட் த சேலஞ்ஜ். நான் துணையிருக்கிறேன்.''

''ப்ச்சு.''

''என்னைப் பற்றி உங்களுக்கு அதிகம் தெரியாது. தெரிந்து கொள்வீர்கள்.''

சரவணன் சோர்வோடு எழுந்தார்.

''இதில் கையெழுத்திடுங்கள்.''

''என்ன இது?''

''வரும் பதினாலாம் நாள் நீங்கள் இடம் பெயர ஒத்துக் கொள்கிறீர்கள். ஆறு கான்ஸ்டபிள், நாற்பத்தி எட்டு பையன்கள்.''

சரவணன் கையெழுத்திட்டார், சென்னை வந்தார்.

சொல்லியிருந்தபடி, தேவையான சாமான்கள் அங்கே போய் சேர்ந்து விட்டது என்று தகவல் வந்தது, இரண்டு லோக்கல் போலீஸ் காவல் இருக்கிறது என்று சொல்லப்பட்டது.

குடி பெயர்தலுக்கு நூறு ரூபாய் செலவிட உத்தரவும் இரண்டு மணல் லாரி வாடகைக்கு அமர்த்திக் கொள்ள அனுமதியும், தலா ஐநூறு ரூபாய் காசாகக் கொடுக்கலாம் என்றும் சொல்லப்பட்டிருந்தது. கடிதம் வந்த அன்று இடி இடித்து மழை பெய்தது. மறுநாளும் பெய்தது.

அதற்கு மறுநாள் கிளம்ப வேண்டும். இந்தக் கட்டடம் மழைக்குச் சிறிய ஒழுகல் கூட இல்லாமல் உறுதியாய் சிரித்தது.

பையன்கள் கோபப்பட்டார்கள்.

''இந்த ஆட்சி மாறணும். நான் அப்பமே சொல் லலை. ஏமாத்திடுவாங்க.''

''ஆட்சியைக் குறை சொல்லாத தம்பி. அரசு அதிகாரி கள் பண்ற கூத்து இது''

மனுஷனாவே மதிக்கலை.''

''போலீஸ் லாரி கொண்டார வேண்டியதுதான்.''

''நாய் அடைக்கிற மாதிரி அடைச்சுக்கிட்டு போவாங்க இதுக்கு மண்ணு லாரி பெட்டர்.''

''மழை பெய்யறதே,''

''சந்தோஷமா நனைஞ்சிக்கிட்டு போவோம்.''

''நம்மாளு கோயான், யாரும் இந்தாளை மதிக்கற தில்லை. மதுரைல ஏதோ தப்பு பண்ணித் துரத்திட்டாங் களாம்.''

''ஒன்னு செய்யலாம் மண்ணு லாரில ஏறுன்னா மாட்டேன்னுடுவோம். வேன் வேணும்னு ஸ்டிரைக் பண்ணுவோம் ''

''உதைப்பாங்க.''

''அதையும் பார்த்துடலாம்''

''சும்மா இருங்கப்பா. பாவம். அவரு நமக்காக கஷ்டப்படறாரு.''

''யாரு, இவரா? நீ நம்பாத இவரை, இவரு நல்ல பேரு வாங்க நம்மளை சுவரு பூசச் சொன்னாரு. அவன் குடுடா கட்டடத்தைன்னு புடுங்கிட்டான்.''

''செங்கல்பட்டுகூட நல்ல இடம்தானே,''

''மலைப்பக்கம், பாம்பு, தேளு,நரி எல்லாம் வரும். பட்டணம்னா எங்கய்யா பஸ் ஏறி வந்துருவாங்க. இனி யார் வீட்லேர்ந்து யாரும் பார்க்க வர முடியாது.

''நாம போயிட வேண்டியதுதான்,''

''புடிச்சு மறுபடி உள்ளே போட்டுரு வாங்க.''

''மாட்டினாதான்,''

சரவணன் சகலமும் ஒட்டுக் கேட்டார். கவலையானார்.

மணல் லாரிகள் மாலை நாலு மணிக்கு வந்தன. வானம் பொத்துக் கொண்டு கொட்டியது.

சரவணன் வெள்ளைப் பனியன், வெள்ளை நிக்கர் போட்டுக் கொண்டார். காலில் சாம்பல் நிற கான்வாஸ் அணிந்தார். முற்றத்து மழையில் வந்து நின்றார். விஸில் கொடுத்தார்.

நாற்பத்தியெட்டு பேரும் வரிசையாய் நிற்க மழை வலுத்தது.

''மாணவர்களே இந்த இடம் விட்டு நமது சொந்த வீட்டிற்குப் போகப் போகிறோம். நீங்கள் புறக்கணிக்கப்பட்டவர் இல்லை என்பதை இப்போது நிரூபிக்கப் போகிறீர்கள். உணர்ச்சி வசப்பட்டு செய்த தவறை மறந்து விட்டு நாங்களும் நல்ல பிள்ளைகள், சட்டத்துக்கு உட்பட்டவர்கள் என்று நிரூபிக்கப் போகிறீர்கள்.''

''ஒரு லாரியில் நமது பொருட்கள் போகட்டும். மற்ற லாரியில் நாம் போவோம்.''

''நீ ஜீப்புல வருவியா...''பெரிய பையன் கேட்டான்

''மறுபடி கேளு.''

''நீங்க ஜீப்புல வருவீங்களா?''

''தட்ஸ் குட். நான் உங்களோடு லாரியில் வருவேன்.''

''மழை பெய்யுதுங்களே.''

''எல்லாருக்கும்தான் மழை பெய்யுது.''

''இல்லை சார்...''

''ரெடி. டிஸ்மிஸ்.''

மாணவர்கள் கலைந்து மழையில் நனைந்தபடி பொருட்கள் ஏற்ற கான்ஸ்டபிள்கள் நாலு பேர் பட்டியல் எடுத்தார்கள். படுக்கைகள் நனையாது கூரை போடப் பட்டு முதல் லாரி போயிற்று மூன்று போலீஸ் கான்ஸ் டபிள்கள் ஏறிக் கொண்டார்கள்.

மீதி அனைவரும் அடுத்த லாரியில் ஏற, மணல் லாரிகள் பூதலூர் நோக்கிப் போயின.

''இதான்...இதான் எங்க வீடு.'' மாம்பலம் திருப்பத்தில் ரமேஷ் உரக்கக் கத்தினான். ''டாடி...டாடி...'' வாயில் கை வைத்துக் கூவினான். பெரிய போசன்

வில்லா வளைவோடு விளக்குகள் மின்ன அந்த பங்களா அமைதியாய் இருந்தது.

''இறங்கி ஓடணும் போல இருக்கு சார். டாடி...'' மறுபடிக் கத்தினான். சரவணன் அவனை அணைத்துக் கொண்டார். அவன் உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது. குளிராலா? உணர்ச்சியாலா என்பது தெரியவில்லை.''

''உடம்பு முழுவதும் கண்ணாகப் பையன்களையே உற்றுப் பார்த்தபடி சரவணன் வந்தார்.

''நீங்க ஏன் சார் நனையறீங்க. முன்னாடி போய் உட்கார்ந்துக்கங்க.''

''மழையில நனையறது ஒரு சந்தோஷம்.''

கிண்டி போனதும் ஜீப் தாண்டி வேகமாய் போயிற்று.

''கதிரேசன் முன்னாடி போயிட்டாரு சார்.''

''ஆமா டீக்கு ஏற்பாடு பண்ணச் சொல்லியிருக்கேன்.''

''கடை டீ குடிச்சு ரொம்ப நாளாச்சுப்பா...''யாரோ சொன்னார்கள்.

தாம்பரம் தாண்டி வண்டி நின்றது. பாலம் ஏறுமுன் ஓரம் கட்டியது.

பெரிய கூரை போட்டு, ட்யூப் லைட் போட்ட இடத்தில், சுகலருக்கும் பரோட்டா குருமாவும், டீயும் வழங்கப் பட்டன. நாற்பது பேருக்கும் உட்கார இடமில்லை. நெருக்கி அடித்து உட்கார்ந்த பிறகும் சிலர் நிற்கும்படி ஆயிற்று.

சரவணனுக்குத் தனி டேபிள் போட்டு பரிமாறினார்கள். கணக்குப் போட்டு காசு கொடுத்து வண்டியில்

பையன்களை ஏறச் சொன்னபோது தூறல் லேசாய் விழுந்து கொண்டிருந்தது.

எண்ணி ஏற்ற ஆள் குறைந்தது தெரிந்தது. ''ஸ்ரீநிவாசனைக் காணம் சார்...'' ஆறுமுகம் கூவினான். சரவணன் பரபரப்பானார். கான்ஸ்டபிளை லாரி விளிம்பில் நிற்க வைத்தார். ஹோட்டலுக்குள் ஓடினார். பின் பக்கம் போய் நின்றார்.

கடைக்குப் பின்னால் வயல்வெளி. கடும் இருட்டு. ஓடி விட்டிருப்பானா? டார்ச் எடுத்து அடித்துப் பார்த்தார். சேற்றில் காலடித் தடங்கள் தெரிந்தன. சேறு முடித்து புல்வெளி ஆரம்பித்தது. ஆமணக்குச் செடிகள் முளைத்திருந்தன. செங்கல் உடைந்திருந்தன. ஒடிந்த செங்கல்லைக் கவனித்து நடந்த போது ஸ்ரீநிவாசன் ஒரு புதர் பாறையிலிருந்து எழுந்து நின்றான்.

''சார் இங்க இருக்கான்.''

சட்டென்று கோபம் கிளம்பி மண்டையைத் தாக்கிற்று.

''என்ன செய்யற இங்க?''

''வயிறு வலிக்குது சார்.''

''சொல்லி விட்டுப் போகக் கூடாது?''

''ரமேஷ்கிட்ட சொன்னேன் சார்.''

''வாடா வெளில.''

''முடியலை சார்.''

சரவணன் யோசித்தார்.

''சரி முடிச்சுட்டு வா. என்ன செய்யுது.''

''வயித்துப் போக்கு சார்.,'

' மாத்திரை, முத லாரியிலே போயிடுச்சே. வா அங்க மருந்து தரேன் ''

அங்கேயே நின்று கவனித்து கூட்டி வந்தார். வண்டியில் ஏற்றினார்.

''முன்னால போய் உட்கார்ந்துக்கங்க சார்'' கான்ஸ்டபிள் வற்புறுத்தினார்.

மறுத்து விட்டு லாரியில் எகிறிப் பின்னால் போய் நிற்க, வண்டி செங்கல்பட்டு பாதையில் கிளம்பியது.

''நீங்க ஏன் சார் மழைல நனையறீங்க.'' ஆறுமுகம் கேட்டான்.

''ஒரு ஆள் தப்பிப் போயிட்டா சார்தானே பதில் சொல்லணும்.''

''ஒரு பதிலும் சொல்ல வேணாம். கத்தி காட்டினான். விட்டுட்டேன்னு எழுதிக் கொடுத்தா போறும், வலை போட்டு புடிச்சுடுவாங்க, உனக்குக் கூட ஒரு வருஷம் தண்டனை கிடைக்கும்.

''நான் நிக்கறது எனக்காக. உங்களுக்கு முடிய வேம்னா, பஸ்ஸோ ஏற்பாடு செல்ய முடியலை. எதுக்கு உள்ள உக்காந்து நான் வரணும். நீங்க நனையற மாதிரி நானும் நனைஞ்சா என்ன?''

''அரசியல்வாதி மாதிரிப் பேசறீங்க சார்.''

''வாஸ்தவம் இப்ப யார் உண்மை பேசினாலும் கேலியாயிடுச்சு. அது அரசியலா போயிடுச்சு.''

''சார்...ஒரு கேள்வி.''

''கேளு.''

''நீங்க மதுரைலேர்ந்து இங்க வந்ததுக்குக் காரணம் கஞ்சாப் பயிர் பண்றவன் கிட்ட லஞ்சம் வாங்கினது தானா...?''

''லஞ்சம் வாங்காதது தப்புன்னுட்டாங்க. கண்டுக்காத போயிருக்கனும்னாங்க. நான் அழிச்சு ஒழிச்சேன். தூக்கி உங்களுக்கு நடுவுல போட்டுட்டாங்க.''

''அப்ப இது தண்டனை.''

''நான் தண்டனையா நினைச்சா தண்டனை.''

''ஏன் தண்டனையா நினைக்கலை?''

''ஒரு பெரிய ப்ராஜக்ட் இருக்கு ஆறுமுகம். சிறுவர் குற்றப்பள்ளி மொத்தமும் மாத்தனும். பதினெட்டு வயசுக்குக் கீழ உள்ளவங்களுக்குத் தண்டனை கிடைச்சாலும், குற்றவாளியா அவர்களை நடத்தக் கூடாது.''

''தண்டனை உண்டு. குற்றவாளியா நடத்தக் கூடாதுன்னா?''

''ஆமாம். சட்டத்துக்கு முன்னால குத்தம் செஞ்சவங்க சமம். தண்டனை உண்டு. ஆனா தண்டனை உன்னைக் கடுமையாக்கிடக் கூடாது. நீ வாழ வேண்டியவன். உனக்குச் சொல்லித் தரனும். தப்பு பண்ணாத வாழ்க்கைக்கு உன்னை வழிப்படுத்தனும்.''

''கேட்க நல்லா இருக்கு.''

''நடைமுறைக்கு வரும். உனக்கு இப்படி நீல யூனிஃபார்ம் கிடையாது. உன்னை நாலு சுவத்துக்குள்ள அடைச்சு வைக்கக் கூடாது. உனக்குப் படிப்பு சொல்லித் தரனும். வேலை சொல்லித் தரனும். வருஷத்துக்கு இரண்டு தரம் லீவு கொடுத்து வீட்டுக்குப் போகவுடனும் டூர் கூட்டிட்டுப் போகனும்.''

''அதாவது நிச பள்ளிக்கூடம் மாதிரி.''

''ஆமா. ஹாஸ்டல்ல தங்கிப் படிக்கிற மாதிரி.''

''இப்ப நாம போறது அப்படிப்பட்ட இடமா?''

“கிட்டத்தட்ட ஆமாம். ஆனா ஒரு முள் வேலி உண்டு. நீ தாண்டறதா இருந்தா தாண்டலாம். அது ஒரு மரியாதைக்குப் போடப்பட்ட வேலி... ஒரு எல்லை. உனக்கு அது தாண்டற அவசியம் வரக்கூடாது.”

“ஆனா வீடு மாதிரி வருமா சார்.”

“வராது ஆறுமுகம் உன் வயசுக்கு உனக்குத் தண்டனை தர்றது அதிகம். ஆனா கொடுத்தே ஆகணும் தண்டனையை நீ தண்டனையா நினைக்காம, மனசு மாறி நல்ல ஆளா வெளிய வரணும்னு கவலைப் படறோம்.”

“நம்மளுது மாதிரியே பழைய பில்டிங்கா சார்.”

“இல்லை, புதுசு.”

“நிம்மதி. அப்ப ஒழுவாது. கக்கூஸ் நாறாது.”

“போய் பார்க்கணும்”

பூதலூருக்குத் திரும்பும் பாதையில் முதலில் போன லாரி நின்று கொண்டிருந்தது,

“என்னப்பா?”

“கும்மிருட்டா இருக்கு சார். ரோடே தெரியலை.”

“நாங்க முன்னால போறோம். பின்னால வா.” இரண்டாவது லாரி முன்னே போக ஆடி அலுங்கிற்று. கிராமம் சுற்றிப் போகும் பாதையில் வண்டி நகர பையன் கள் ஆவலாய் பார்த்து வந்தார்கள்.

“பாம்பு...பாம்பு போவுது பார்.” லாரி வெளிச் சத்தில் காட்டினார்கள்.

ஆறடி நீளமுள்ள பாம்பு சேற்றில் துள்ளிப் புரண்டு ஓடிற்று.

“காடா இருக்கு சார்.”

மலை ஒட்டிய பாதையில் லாரி போக பையன்கள் மிரட்சியோடு பார்த்தார்கள். "வீடே இல்லீங்களா கிட்டக்க."

"மலைக்கு மேலயா சார் ஜெயிலு..." ரமேஷ் கேட்டான்.

"இது ஜெயில் இல்ல ரமேஷ்."

"எப்படி சார். ஒரு காட்டு வெளில தனிக் கட்டடமா இருந்தா, அது ஜெயிலா இல்லாத எப்படி சார் இருக்கும் "

"ஸிடில இருந்து சுவரு எகிறி குதிச்சு ஓடறம்னுட்டு காட்ல கொண்டாந்து போட்டுட்டாங்க," பெரிய பையன் பதில் சொன்னான்.

வண்டி மேடேறிற்று. முள் வேலிக் கதவருகே நின்றது வாசலில் ஒரே ஒரு பல்பு எரிய, இரண்டு கான்ஸ்டபிள்கள் மஃப்டி உடையில் எழுந்து நின்றார்கள். வண்டி உள்ளே போயிற்று.

இரண்டு வண்டிகளும் உள்ளே நுழைய, பையன்கள் குதிததார்கள். "இரண்டு லைட்டுதான் எரியுது. இந்த லைட்டு, ஹால் லைட்டு."

பையன்கள் உள்ளே நுழைந்து வரிசையானார்கள். பெயர் சொன்னார்கள்.

"டார்ச் கொடுங்க சார்." ஸ்ரீநிவாசன் டார்ச் வாங்கி ஒயரிங்கை ஆராய்ந்தான். "ட்ரிபிள் பேஸ் கனெக்ஷன் வரலை சார். மெயின் பாக்ஸுல ஃப்யூஸ் கேரியர் இல்லை. இதுக்கு மின்சார இலாகா வரணும்."

"கேரியர் இல்லைன்னா எரியாதா?"

''நாம கட்டைல கம்பி சுத்தி சொருகிடலாம். ஆனா தப்பு.''

''செய் ஸ்ரீநிவாசன்.''

''சார்.''

''செய்துடு.''

கட்டை தேடினான். ஒயர் சீவினான். கம்பி சுற்றி விளிம்படித்து மெயின் சுவிட்சில் தள்ளினான். பளீர் பளீர் என்று விளக்குகள் எரிந்தன. இடம் ஜெக ஜோதியாயிற்று.

''ஜன்னல் கதவு எதுவும் இல்லை சார்.''

''எல்லாரும் டிரஸ் மாத்திட்டுப் படுங்க.'' உடை மாற்றினார்கள். இடம் தேடிப் படுத்தார்கள். சமையலறை சாமான்கள் போய் உட்கார்ந்தன. கதிரேசன் ஜீப்பில் பால் வாங்கப் போனார்

விடியலில் காய்கறிகளோடும், பால் ட்ரம்மோடும் வந்தார்.

சூரியன் வெளி வரும் வரை பையன்களை எழுப்பாதே என்று சரவணன் சொன்னார்.

ரமேஷ் மட்டும் இடம் சுற்றிப் பார்ப்பதை மனசில் குறித்துக் கொண்டார். தன் பங்களாவுக்குப் போய் படுத்தார். தூங்கிப் போனார்.

அம்பாஸிடர் கார் உள்ளே வந்தது.

''ஐயா தூங்கறாங்க.'' கதிரவன் சல்யூட் அடித்தார்.

மிஸ் ரமணி, சப்கலெக்டர் நிதானமாய் கீழிறங்கினாள்.

''ராத்திரியோட ராத்திரியா வந்துட்டோங்க. உள்ள வந்து சாமான் இறக்கற நேரம் விடிஞ்சு போச்சுங்க.

விடிஞ்சதுக்கு அப்புறம்தான் ஐயா படுத்தாரு. எழுப் பட்டுங்களா?''

''வேணாம். வழில ப்ராப்ளம் இல்லையே.''

''இல்லீங்க. ரோல்கால் சரியா இருக்குங்க. ரோல் கால் கூப்பிடட்டுங்களா?''

தலையசைத்தாள்.

பையன்கள் எழுந்து வரிசையானார்கள். ஒரு பெண் வந்து பார்ப்பதை மெல்லிய புன்னகையோடு கண்சிமிட்டி ரசித்தார்கள்.

''சௌகார் ஜானகி மாதிரி இல்லடா?''

''இல்லை. இவங்க தேவிகா சாயல்.''

''தேவிகா குண்டுடா.''

''முகம் மட்டும் சொல்றேன்.''

ரமேஷ் நம்பர் கூப்பிட்டு சல்யூட் செய்தான்.

''தாங்க் யூ. உன் பேர் என்ன''

''ரமேஷ்.''

''ஓ...கான்வென்ட்ல படிச்சீங்கல்ல,

''யெஸ் மேடம்.''

''நீங்கதான் லீடரா?''

''அட் ப்ரஸன்ட்.''

''உங்களுக்கு இந்த இடம் புடிச்சிருக்கா?''

''ஒன்னும் புரியலை. ஏதோ காடு மாதிரி இருக்கு.''

''மாத்திடுவோம் ஏ க்ளாஸ் இடமா செய்துடலசம். பசங்களை எனக்கு அறிமுகப்படுத்துங்க.''

"நீங்க யாரு, மேடம்."

"ஸாரி. ஐயம் ரமணி, ஐ ஏ.எஸ். சப்-கலெக்டர். செங்கல்பட்டு மாவட்டம், இருங்க, நானே அறிமுகப் படுத்திக்கறேன்."

"நண்பர்களே" கொஞ்சம் உரக்க குரல் கொடுத்து பேசினாள். "நான் பேசறது கேட்குதா. நான் செங்கல் பட்டு மாவட்ட சப்கலெக்டர். உங்களுக்கு இங்கே வேண்டிய வசதிகளைச் செய்யச் சொல்லி அரசு அனுப்பி யிருக்கு. இந்த இடம் முழுக்க முடியலை. சில குறைகள் இருக்கு நாம சரி செய்துடலாம். மத்தபடி இந்த இடம் ஐ லவ் திஸ் ப்ளேஸ்.உங்களுக்குப் பிடிச்சிருக்கா?"

பையன்கள் பேசாதிருந்தார்கள்.

"ஏன் லைன்ல நிக்கணும்? வாங்க இப்படி. மரத்தடி ஓரமா உட்கார்ந்து பேசலாம்."

கதிரவன் நாற்காலி எடுத்து வந்தார். "உட்காருங்க எல்லாருமே." உத்தரவு போட, அமைதியாய் உட் கார்ந்து கொண்டார்கள்.

"ஆறுமுகம் யாரு?"

"நான்தாம்மா."

"உட்காருங்க. நீங்கதான் கடைசியா வந்தது?"

"ஆமாம்மா."

"இடம் எப்படி இருக்கு?"

"நடுவாந்தரம் இருக்குங்க."

"அது என்ன நடுவாந்தரம்."

"ரொம்ப நல்லா இருக்குன்னும் சொல்ல முடியாது. ஒண்ணுமேயில்லைன்னும் சொல்ல முடியாது."

''என்ன குறை?''

''ஜன்னல் கதவு இல்லை.''

''எதுக்குக் கதவு பூட்டு? ஓடவா போறீங்க?''

''மழை பெஞ்சா சாரல் அடிக்குமே?''

''சரி, ஜன்னல் கதவு போட்டுரலாம்.மரம் வந்திருச்சு. அப்புறம்.''

''பாத்ரூம்ல துணி தோய்க்க முடியாது போலருக்கு.''

''வெளிய பின்பக்கம் பத்து கல்லு போட்டு பைப் போடறம்.''

''சுத்தி முள்ளா இருக்கு. பாம்பு, பூச்சி நிறைய இருக்கு.''

''நாம வந்துட்டமில்லை. அதெல்லாம் ஓடிடும்.''

''பாம்பவிட நாங்க விஷம்கறீங்களா?'' பெரிய பையன் எழுந்தான்.

''நாமன்னு என்னையும் சேர்த்துதான் சொன்னேன். முள்ளெல்லாம் வெட்டிப்போட்ரலாம்.அது மட்டுமில்லை. தோட்டம் போடணும்.''

''பாறைங்க.''

''புரட்டினா பூ மாதிரி ஆயிடாது?''

''கடப்பாறை, சம்மட்டி வேணுமே.''

''எல்லாம் தரேன், தோட்டம் போடலாமா?''

''போடலாம்.''

''ஒருத்தர் மட்டும் சொன்னா?''

நாலைந்து பேர் குரல் கொடுத்தார்கள்.

''எல்லாரும் சொல்லுங்க.''

''போடலாம் மேடம்.''

''வெரிகுட். இந்தக் குரலுக்கே பரிசு தரணும். மொத்தம் நாப்பத்தெட்டு பேரா. கதிரவன் என் கார்ல ஸ்வீட்பாக்ஸ் ஒரு பெரிய டப்பா இருக்கு எடுத்தாங்க. நல்ல சூழல். சுகமான காத்து. ஆரோக்கியமான இடம். நல்லா விளையாடலாம். விளையாட வாலிபால் நெட், பந்து வாங்கி வந்துருக்கேன். யாருக்கு வாலிபால் ரூல்ஸ் தெரியும்?''

ரமேஷ் கைதூக்கினான்.

''பேட்மின்டன் இன்னும் ஈஸி கேம் மேடம்'' ஸ்ரீநிவாசன் குரல் கொடுத்தான்.

''யாரு அது?''

''நான்தான்.'' எழுந்து நின்றான்.

''ஏன் வாலிபால் புடிக்கலை...''

''முரட்டு கேம் மேடம்...''

''சரி அடுத்த வாரம் பேட்மின்டன் வாங்கிடலாம். ஷட்டில் காக் பேட் ஒரு டஜன், ஒரு பாக்ஸ் காக்.''

''வேற?''

''எங்களுக்குன்னு தனியா சினிமா போடணும்.''

''எதுக்குப்பா?''

''இரண்டு வருஷமா சரியான படமே பார்க்கலைங்க''

''ட்ரை பண்றேன். பத்திரிகை படிக்க மாட்டீங் களா? யாரும் கேட்கலையே. நான் புஸ்தகம் கொண்டாந் திருக்கேன் நிறைய. வேணுமா...வேணுமா?''

''கதை புஸ்தகமா?''

''கதையும் இருக்கு, கட்டுரையும் இருக்கு.''

''படிக்கத் தோணாதுங்க...''

''சினிமா மாதிரி வராதுங்கறியா.''

''இங்கிலீஷ் படம் போடலாமா மேடம்?''

''கஷ்டம்பா. முடிகிற காரியமா பார்க்கணும். ஒண்ணே ஒண்ணு புரிஞ்சுக்கங்க. இது உங்க இடம் உங்க பள்ளிக்கூடம். பழைய குற்றங்கள் மாறப் போகிற நேரம். உங்களை அடிக்கறதோ, தண்டனை தரதோ இனிமே இல்லை. அதே சமயம் நீங்க நல்ல மாதிரி நடந்துக்கணும். ஒரு வேலிதானேன்னு தாண்டிப் போயிட்டா மறுப்படி 'பழைய குருடி கதவத் திறடி'ன்னு ஆயிடும். இனிமே வரப்போற பசங்களுக்கும் கடவுளே யாரும் வரக் கூடாது. அப்படி வரப்போற பசங்களுக்கும் உங்களால இடைஞ்சல். புரியுதா? தண்டனைக் காலத்தில் நல்ல விஷயங்கள் கத்துக்கிட்டு போய் நல்ல ஆளா வெளிய வரணும்.''

இனிப்பு வழங்கப்பட்டது. வாலிபால் நெட்டும் பந்தும் தரப்பட்டன.

ரமணி மட்டும், தனியே கட்டடம் சுற்றிப் பார்த்தாள். தனியே இருந்த சரவணன் பங்களாவுக்குப் போனாள். கதவு திறந்தாள், ஹாலில் மரக்கட்டிலில் தலையணை மட்டும் வைத்து முதுகுக் காட்டி தூங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்தாள். மெல்ல கதவின் மீது தட்டினாள்.

விருட்டென்று சரவணன் எழ, பின் வாங்கினான்.

''யாரு...நீங்களா, ஸாரி மேடம்.''

''பரவாயில்லை, ராத்திரி பூரா தூங்கலைன்னு கேள்விப்பட்டேன். உங்கக்கிட்ட பேசணுமே.''

''பத்து நிமிஷத்துல ஆபீஸ் வரேன்.''

''பர்ஸனலா பேசணுமே.''

''பர்ஸனலாவா?''

''யெஸ்.''

''உட்காருங்க. காபி குடிச்சீங்களா?'' உள்ளே சுதிரவன் இரண்டு டீ கோப்பைகளுடன் நுழைய, சரவணன் முகம் கழுவிக் கொண்டு வந்தார்.

''எனக்கு ஒரு லெட்டர் வந்திருக்கு. அதை உங்களுக்குப் படிச்சுக் காட்டணும்.''

''என்னங்க...''

''படிக்கிறேன். புரியுதா பாருங்க.''

''ரமணி, உன் கடிதம் ஆச்சரியமாக இருந்தது, சரவணனைப் பார்த்தாயா? எப்படி இருக்கிறார். என்னை நினைவு இருக்கிறதா? எங்களையறியாமல் இன்னும் தொடர்பு எங்களுக்குள்ளே இருக்கிறது. அதிசயம்தான். ஆசை ஆசையாகக் கேட்டார். 'லவ்யூ' என்று சொல்லியிருந்தால் ஏதேதோ நடந்திருக்கும். சொல்ல முடியவில்லை. நெஞ்சுவரை வந்து நின்றுவிட்டது. டீப்பீரமோஷனா மதுரை டி.எஸ்.பி. என்று கேள்விப்பட்டேனே...என்ன விஷயம். என் விஷயம் சொல்ல வேண்டாம், என் அன்பு மட்டும் தெரிவி, போதும். வேறென்ன... அம்மாவுக்கு நமஸ்காரம். உனக்கு எப்படி மோட்சம்? உண்டா? இல்லையா? அன்புடன், ஸ்ரீமதி.'

''ஸ்ரீமதியா...என் கூட படிச்சு.''

''யெஸ். அதே ஸ்ரீமதிதான்.''

''நீங்க...?''

''அவளுடைய அக்கா.''

"நல்லா இருக்கா ஸ்ரீமதி...நான் கேட்டதுக்கு மறுத்துட்டு இப்ப இப்படி எழுதியிருக்காங்க."

"விதி. தலையெழுத்து."

"எப்படி இருக்காங்க? என்ன பண்றாங்க?"

"மத்திய சர்க்கார் உத்தியோகம். நாலாயிரம் சம்பளம்."

"கல்யாணம்?"

"இல்லை."

"ஏங்க..."

"நாங்க மூணு பேரும் கல்யாணமே வேண்டாம்னு இருந்துட்டோம்."

"என் விஷயம் சொல்ல வேண்டாம்னா."

"அதான் ஏன் எழுதினாள்னு புரியலை."

"என்னவோ தொடர்புன்னு..."

"ஒண்ணுமில்லை. அவ இந்தியா முழுக்க உள்ள சிறுவர் குற்றப்பள்ளி பார்த்துட்டு இது மாத்தணும்னு ரிப்போர்ட் பண்ணியிருக்கா. இரண்டு வருஷமா கிடப்புல கிடக்கு. நீங்களும் அவளும் ஒரே விஷயத்துல ஓர்க் பண்றீங்கன்னு சொல்றா."

"அந்த ரிப்போர்ட் பத்தி நானும் கேள்விப்பட்டேன்."

"மறந்திடுங்க. அது பேப்பர். நாம பிராக்டிக்கலா செய்து பார்க்கலாம். பசங்களை மாத்தி நல்லவிதமா கொண்டு வரலாம். ஒருவேளை அந்த ரிப்போர்ட் க்ளிக் ஆச்சுன்னா நமக்கு உதவியா இருக்கும். நாங்க இதைச் செயல்ல நடத்தறமேன்னு மார் தட்டிக்கலாம். வந்து பார்க்கச் சொல்லலாம்."

''எனக்கு நம்பிக்கை இல்லை.''

''ஏன்?''

''பொட்டல் காட்டுல கொண்டாந்து வச்சுட்டு...''

''ஸிடியை விட இது நல்லது.''

''பக்கத்துல சாராயம் காச்சற கிராமம்.''

''அதையும் சேர்த்து மாத்தலாம். முதல்ல ரோடு போடணும்.''

''பசங்களைக் கூலிக்காரங்களா மாத்திடக் கூடாதுங்க. வெறுப்பாயிடுவாங்க.''

''ஒரு நாளைக்குப் பத்தடிக்குப் பத்தடி போட முடியாதா?''

''வேலை வாங்கறாங்கன்னு பசங்களுக்குத் தோணிட்டா உட்கார்ந்துடுவாங்க.''

''இரண்டு டீமா பிரிச்சு...''

''நோ, நெவர். பசங்களைப் பிரிக்கவே கூடாது.''

''பிறகு...?''

''நான் கட்டட வேலை முதல்ல ஆரம்பிக்கறேன்.''

''இருபதாயிரம் சாங்ஷன் ஆயிருக்கு ஒரு லிஸ்ட் கொடுங்க.''

''கலப்பை வேணுங்க முதல்ல.''

''கலப்பையா?''

''ஆமாங்க. பாறை புரட்டி இரண்டு தடவை உழுதா, தோட்டம் வளமாயிடும்.''

''விவசாயமா?''

"காய்கறித் தோட்டம். நாங்களே காய் விதைச்சு நாங்களே சாப்பிடப் போறோம்."

"குட், கலப்பை, அப்புறம்?"

பெரிய லிஸ்ட் தயார் செய்தார்கள். விவாதித்தார்கள்.

வெளியே வர, பையன்கள் இரண்டு குழுவாய் பிரிந்து வாலிபால் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

"பசங்களைப் பரிக்கக் கூடாதுன்னீங்களே...தானா பிரிஞ்சுட்டாங்க பார்த்தீங்களா. பிரிச்சாதான் போட்டி வரும். போட்டிதான் ஜெயிக்கத் தூண்டும்."

"அது வேற இது வேறங்க."

"சரி. நான் வரேங்க. வணக்கம்."

"வணக்கம். ஸ்ரீமதி கிட்ட..."

"நீங்க லவ் யூன்னு சொன்னதா சொல்லணுமா?"

"என் வணக்கத்தைச் சொல்லுங்க போதும்"

"அவ அன்பு சொல்லுன்னு எழுதியிருக்கா"

"வணக்கத்துல அன்பு தானா வருங்க. வெறும் அன்பு மட்டுமில்லை, மரியாதை கலந்த அன்பு வரும்."

"உங்களுக்கு எத்தனை பசங்க?"

"ஒரு குழந்தைதான்."

"வீட்ல எப்ப வராங்க?"

"தெரியலை. வரணுமான்னு கேள்வி இருக்கு."

"உங்களுக்கா...அவங்களுக்கா?"

சரவணன் பேசாதிருந்தார்.

''ஐ. ஜி. இது பத்தியும் என்கிட்ட பேசினார், சரவணன். இரண்டு வருஷத்துல மறுபடி மதுரை போயிடலாம்.''

''தாங்க்யூ.'' சரவணன் மறுபடி சல்யூட் அடிக்க ரமணி ஐ.ஏ.எஸ். வணங்கி விடை பெற்றாள். இருவர் முகத்திலும் சோகம் எஞ்சியது.

**கோ**சு, காரட், வராது இந்தப் பூமில. கத்தரிக்கா, வெண்டைக்கா, அவரை, புடலம், பீர்க்கன் போடலாம், எல்லா கீரையும் போடலாம். சாண உரம் போட்டு இரண்டு வேளை விடாத தண்ணி பாய்ச்சினா...''

ஆறுமுகம் பெரிய எக்ஸ்பர்ட் மாதிரி உரக்கப் பேசினான்.

சரவணனும் பையன்களும் கேட்டுக் கொண்டிருந் தார்கள்.

''பூச்சி வரும். மருந்து போடணும். வாரத்துக்கு ஒருக்கா களை எடுக்கணும்.''

**ஒ**ரு மாதம் ஆயிற்று, பாறைகள் புரட்டி மண் தரைப்படுத்த, ஜன்னல்களும், மரக் கதவுகளும் வைக்கப் பட்டு விட்டன. ரமேஷ் ஒரு தனிக்குழுவாய் அதில் ஈடுபட பெரிய பையன், ஆறுமுகம், மண்புரட்டும் வேலையில் இறங்கினார்கள்.

''தோட்டத்துல ஆடு நுழைஞ்சிடும். முள்வேலி அடில பூந்துடும். முத வேலை சுத்தி வேலிக்காத்தான் நடணும்.'' நட்டார்கள்.

''மலை மேல செம்மண் இருக்கும். இரண்டு வண்டி செம்மண் புரட்டி அடிச்சா ரோஸ் போடலாம்.''

''பூ எதுக்கு ஆறுமுகம்?''

''ஒரு ரோஜாப்பூ பத்து பைசா சார். ஒரு நாளைக்கு இருநூறு பூ பறிக்கலாம். அஞ்சு பைசா வையுங்களேன்.''

''இருநூறா...''

''கிளை வெட்டி, கிளை வெட்டி, நடலாம், தோட்டம் சுத்தி வேலி போட்டு நடுவுல காய்கறி போடலாம்.''

''மலைக்கு எப்படிப் போறது?''

''போலாம் சார்.''

''ஒரு டீம் கிளம்பியது.

சுற்றி ஒரு ஒற்றையடிப் பாதையில் கோணியும்,கூடையுமாய் தூக்கிக் கொண்டு ஏறியது.

பாதி மலை ஏற, நாய்கள் மறித்துக் குரைத்தன. சரவணன் சுற்றிலும் உற்றுப் பார்த்தார். மெல்ல மேலேறினார்.

ஒரு சரிவுக்குப் பின்னாலிருந்து கல் வந்து விழுந்தது. பையன்கள் ஒண்டிக் கொண்டனர்.

''யாருடா அது?'' சரவணன் அதட்டினார். மடமடவென்று பத்துப் பதினைந்து கற்கள் விழுந்தன. சரவணன் தோளில் ஒரு அடி வாங்கினார்.

பையன்கள் கல் எடுத்து கல் வந்த திசை நோக்கி சரமாரியாய் வீசினார்கள். வீசியபடியே முன்னேறினார்கள். பெரிய பையன் பதுங்கிப் பதுங்கி முன்னேறினான். மலை உச்சியில் சிறிய சமதளம் இருந்தது. கரி அடுப்பும், சாராயப் பானைகளும் தெரிந்தன.

யாரோ ஒரு ஆள் வீச்சரிவாளுடன் நிற்க, சரவணன் ''கண்ணபிரான் போகாதே'' என்று கத்தினார். பெரிய பையன் தைரியமாகப் போய் நின்றான். அரிவாள் ஓங்க, குனிந்து மண் எடுத்து முகத்தில் அடித்தான். இரண்டு

உதையில் வீழ்த்தினான். பையன்கள் தாவி அவனை அழுத்திக் கொண்டனர். சரவணன் கோணி கிழித்து பின் கையில் அவனைக் கட்டினார். திமிர, தலையில் அடித்தார்.

செம்மண் வாரிய கூடைகளும், கோணிகளும் நிரப்பி கீழே வர, ஒரு கூட்டம் கம்பு, தடிகளுடன் மடக்கிக் கொண்டது.

அநேகமாய் சரவணன் தவிர எல்லார் தலைகளிலும் சுமைகள் இருந்தன. மண்வெட்டி தவிர வேறு ஆயுதம் இல்லை. வந்த கும்பலில் ஒரு ஆள் சுருள் கத்தி வைத்திருந் தான்.எல்லோரிடமும் தடிகள் இருந்தன. யாரோ ஒருவன் ஓடிவந்து மான் கொம்பு வைத்து சுழற்றிக் காட்டினான்.

மலைச் சரிவிலிருந்து பள்ளிக்கூடம் இன்னும் ஒரு கிலோ மீட்டர் இருந்தது. எதிரே பதினேழு பேர் மடக்கிக் கொண்டு நின்றார்கள்.

சரவணன் யோசித்தார். தாக்கலாம் தாக்கிவிட்டு ஓடலாம்.பையன்கள் சேதமாவார்கள்.செம்மண் மூட்டை இத்தனை தூரம் சிரமப்பட்டுச் சுமந்தது சிதறும், வேக மாய் முரட்டுத்தனம் காட்ட கையோ, காலோ வெட்டுப் படும் இல்லை இது சண்டையிடும் நேரமில்லை.

''என்னப்பா யாரு நீங்க?''புன்சிரிப்புடன் கேட்டார்.

''நாங்க மலை மேல இருக்கற ஆளுங்க. உங்க இடம் கீழதானே...யாரைக் கேட்டு மலை மேல போனீங்க?''

''எவனடா கேட்கணும்?'' பெரிய பையன் சுமையைக் கீழே இறக்கி வைத்தான்.

''சும்மா இரு'' சரவணன் அவனை அடக்கினார்.

''எங்க இடம் கீழதான். செம்மண் எடுக்கப் போனோம். சாராயம் காச்சற ஆளுங்களா.''

''அதில்லீங்க. சாராயமில்லீங்க, தலைவலித் தைலம் இறக்கறோம்.'' எல்லோர் முகத்திலும் பொய் தெரிந்தது.

''மலைமேலையா?''

''ஆமா. கீழ புகை போட்டா கத்தறாங்க. அதனால மலை மேல புகை போடறோம்.''

''ஆமா. பார்த்தோம். ஏன் கத்தி, கபடாவோட மடக்கறீங்க?''

''எங்க ஆளை அடிச்சு இழுத்துக்கிட்டு போறீங்களே...''

''இது உங்க ஆளா...அப்ப ஏன் எங்க மேல கல்லு விட்டாரு?''

''போலீஸ் மடக்கறாங்கன்னு நினைச்சேன்,'' கட்டுப் பட்டவன் பதில் சொன்னான்.

''நாங்க போலீஸ் இல்லை.''

''எனக்குத் தெரியும். நான் அப்பமே சொன்னேன், இவங்க வேற, இதுக்கு வரமாட்டங்கன்னு. அதான் அந்த எச்சக்கலைப் பசங்களுக்குத் தனியா வெட்டறமே.''

''எங்க ஆளை விடு.''

''விடுங்கப்பா.''

கோணித் துணியைப் பிரித்து அவனை விடுவித்தார்கள்.

அவன் கை உதறிக் கூட்டத்தோடு கலந்து கொண்டான்.

''உங்க இடம் உண்டு, நீங்க உண்டுன்னு இருக்கணும். எங்கனா மலைக்கு மேல வந்தீங்க. பொல்லாதவனா இருப்பேன்.'' சுருள் கத்திக்காரன் கர்ஜித்தான்.

இப்ப என்ன சொல்ற?''

''போவட்டும் விடுங்கப்பா. செம்மண்ணுக்கு மலைக்கு வராதீங்க. அடிவாரத்துலயே எடுத்துக்கலாம் வழி விடுப்பா.''

பையன்கள் சுமைகளுடன் நடந்தார்கள். சகலரும் போன பிறகு சரவணன் நின்றார். பையன்கள் மலையின் அடிவாரத்துக்குப் போகும் வளைவான பாதையில் திரும்பின பிறகு, கூட்டத்துக்கு நடுவே வந்தார்.

''சாராயம் காய்ச்சறத தடுக்கறது வேற போலீஸ் தான். ஆனா இந்த வேலை இனிமே நடக்கக்கூடாது முத முறையா ஒருத்தரை ஒருத்தர் பார்க்கறோம்னு எச்சரிக்கை பண்ணி விடறேன். இன்னொரு தடவை மலை மேல புகையோ, நெருப்போ பார்த்தேன்...நடக்கறதே வேற. சுருள் கத்தி வச்சு ஆடிக் காட்டறீங்களா. போலீஸ்காரன் மேல கல்லு வுட்டெறிஞ்சா சும்மா வுட்ருவாங்களா? கத்திய கீழ போடுறா,'' இடுப்பிலிருந்து ரிவால்வர் உருவி அவன் நெஞ்சு நேரே நீட்டினார். தயங்கியவன் வயிற்றில் எட்டி உதைத்தார்.

சுருள் கத்தி எகிறி பலத்த சத்தத்துடன் விழுந்தது.

''சுட்டுப் பொசுக்கிடுவேன். கல்லடிச்சவன் வாடா இங்க, திரும்புடா.'' மறுபடி கீழே கிடந்த கோணிக் கிழிசல் எடுத்து அவனைப் பின் கையாய் கட்டினார்.

''சாமி வுட்ருங்க, நமக்குள்ள ராசியா போயிடுவம். அப்பமே சொன்னேன். கட்டை கம்பு எல்லாம் வேணாம். பாக்கு வெத்தலைத் தட்டோட பார்ப்பம்னு.''

''பாக்கு வெத்தலைத் தட்டா?''

''உங்களுக்கு உண்டானத கொடுத்துடறோம்.''

''அதற்கு வேற ஆள் பாரு. பத்து செகண்ட்ல இந்த இடம் காலியாகணும். இல்லை. நிக்கறவன் அத்தினிப் பேர் உடம்புலயும் ஓட்டை வுழும்.''

கூட்டம் சரசரவென்று கலைந்தது. மலைப்பாதையில் இறங்காமல் செங்குத்தாய் சரியும் இடத்தில் கால் வைத்து ஆட்கள் இறங்கினார்கள். மலையோடு பழக்கப்பட்டவர்கள் என்று தெரிந்தது.

சுருள் கத்தி எடுத்து, அந்த ஆளை நெட்டித் தள்ளி பள்ளிக்கூடத்துக்கு வந்தார். கான்ஸ்டபிள் மூலம் அந்த ஆளைக் கடிதத்துடன் செங்கல்பட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பினார். தனது டைரியில் சாராயம் காய்ச்சுபவர்களுக்குத் தந்த எச்சரிக்கை பற்றி எழுதி விட்டு, மதுவிலக்குத் தடுப்பு பிரிவுக்குத் தனிக் கடிதம் எழுதினார்.

வெளியே பின்பக்கமாய் தோட்டவேலை துவங்கியது. காலம் காலமாய் புரட்டப்படாத மண், பையன்கள் குத்தி எடுத்துப் புரட்டியதும் புல்லின் வேர்கள வானம் பார்த்தன. செம்மண் கலந்து நீர் பாய்ச்ச குழமபாகிச் சிரித்தது. நீர் பாய்ச்ச பூமி இழுத்தது. ''இரண்டு மழை பெஞ்சா தளதளன்னு பயிர் புடிச்சுக்கும் ஐயா'' காலால் மண் மிதித்துக் கொண்டே ஆறுமுகம் கூவினான்.

இரவு மாணவர்கள் டி.வி. பார்த்துக் கொண்டிருந்த போது உலக விஷயங்கள் பற்றிக் கேள்வி கேட்டார்கள். வான மண்டலம் பற்றி விசாரித்தார்கள்.

''அமெரிக்கா பணக்கார நாடு. நம்ம நாடு ஏழை நாடு, இது எப்படி சார்?'' பெரிய கேள்வி கேட்டார்கள்.

''யு. ஜி. ஸீ ப்ரோக்ராமில் வேர்க்கடலை பயிர் பண்றது காட்டினான் சார். விரல் நீளம் சார். மூணு

பருப்பு கடலைதான். கோலிகுண்டு மாதிரி இருக்கு, ஒவ்வொரு கடலையும். எப்படி சார் அது?''

''உழைப்பு இல்லை. உழைக்கறவனுக்கு உதவி இல்லை.'

''அரசாங்கம் சரியில்லையா?''

''மக்கள் சரியில்லை. படிப்பு போறலை. உழைப்பு இல்லை. இந்தப் பள்ளிக்கூடம் சுத்தி எத்தினிப் பரப்பு தரிசு நிலம். விடலாமா? தண்ணி இல்லைன்னு காய விட்டுட்டோம். ரஷ்யாவுல, பாலவனத்துக்கு நடுவே நதி போயிருக்கு. ஜனங்க வெட்டின நதி. இங்க முடியாதா? செய்யலை—மானம் பார்த்த பூமின்னு விட்டுட றோம்.''

இரவு பெரிய பையன் டார்ச் வேண்டுமென்று கேட்டான்.

''எதுக்குப்பா?''

''காட்டுக் கோழி பிடிக்கலாம் சார்.''

''எடுத்துக் கொடுங்க.''

மறுநாள் இரண்டு கோழிகள் உறிக்கப்பட்டு, சமையலறையில் கிடந்தன.

''யோவ் முட்டாள்யா நீ.''

''ஏன் சார்.''

''உசிரோட வச்சிருந்தா முட்டை போடும்ல. அறுத்திட்டியே.'

மறுநாள் இரவு வாலிபால் நெட் வலையாயிற்று ஆறு பெட்டைக் கோழிகள் பிடிபட்டன. வலைக்கம்பி கூண்டுகளில் அடைக்கப்பட்டன. சேவலுக்குக் கதிரவனை அனுப்பினார்.

நட்ட விதைகள் துளிர் விட்டன.

ஒரு விடியலில் பெரிய போலீஸ் படை கிராமம் சூழ்ந்து பெண்கள், ஆண்கள் எல்லோரையும் பிடித்து அடித்து நொறுக்கிற்று. மலை மீது தள்ளிக் கொண்டு போய் சாராய ஊறல்களுடன் போட்டோ எடுத்து, சரவணனை அந்த இடம் சர்வே செய்யச் சொல்லி சாட்சிக் கையெழுத்து வாங்கியது.

''இனிமே சாராயத் தொந்தரவு இருக்காது சார்.''

''லேடீஸை பிடிச்சுக்கிட்டு போறீங்க அநியாயமா.''

''அநியாயமா, விக்கறதே இவளுங்கதான். குடிசைத் தொழில். அஞ்சு வயசுப் பொண்ணு தனியா பாட்டில் எடுத்துக்கிட்டு மார்க்கெட் போவும்.''

''அதையும் அரெஸ்ட் பண்ணுவீங்களா?'

''பண்ணலாம். அப்புறம் உங்களாண்டதான் கொண்டாந்து விடுவாங்க. அதான் எதுக்குத் தொந்தரவுன்னு. சார்...''

''என்ன?''

''பசங்க கிராமத்துக்குள்ள பூந்து பெண்களைக் கேலி பண்றதா ஒரு பெட்டிஷன் இருக்கு.''

''பொய்...''

''சரி. பெட்டிஷனை மடக்கி வச்சுட்டம், ஆனா ஜாக்கிரதை. இவனுங்க தப்பான ஆளுங்க. எதுக்கும் துணிஞ்சவனுங்க.''

''எனக்குத் தெரியும்.''

''அதுக்கில்லீங்க. நாளை மறுநாள் ஜாமீன்ல வந்துடுவான், பத்துநாள் கழிச்சு ஆயிரம் ரூபா ஃபைன் கட்டுவான். அலுத்துப் போய்தான்...''

''தேவையில்லைன்னு நான் ரிப்போர்ட் பண்றேன்.''

''சரவணன் உங்களுக்கு நல்லது பசங்களைச் சுதந்தி ரமா விடுங்க. காம்பவுண்ட் இருக்கட்டும்.''

''பத்தடி உயரச் சுவரு. உள்ளே கட்டடம். அதுக்குப் பேரு ஜெயில் இல்லாம வேற என்ன?''

''இருந்துட்டுப் போவுது.''

''இல்லீங்க. இந்த வேலை முழுக்க தனக்குச் சொந் தம்னு பசங்க நினைக்கறாங்க இந்த இடம் முழுக்க விவ சாயம் பண்றாங்க, இப்ப போய் காம்பவுண்டு சுவர்... தப்புங்க.''

''பிரச்சனை வரும்.''

''நான் மறுத்து எழுதப் போறேன்.''

''உங்க இஷ்டம். அப்புறம் சரவணன், ஒரு பர்ஸனல் மேட்டர்.''

''முதலமைச்சருக்கு உங்க வீட்டுலேர்ந்து ஒரு புகார் போயிருக்கு. என்கிட்ட அதை அனுப்பியிருக்காங்க, மனிதாபிமானத்தோட நடவடிக்கை எடுக்கச் சொல்லி.''

சரவணன் கண்கள் மூடி நின்றார்.

''என்ன புகார்?''

''கஞ்சா பயிர் விவகாரத்துல உங்க மனைவிக்குத் தலைகுனிவும், மனக்கஷ்டமும் ஏற்பட்டதாகவும்... அவர் கள் எடுத்துச் சொல்லியும் நீங்கள் புறக்கணித்ததாகவும எழுதியிருக்காங்க. ப்ளீஸ், ஒரு தடவை ஊருக்குப் போயிட்டு வாங்களேன்.'

''வேற என்ன புகார்?''

''புகார் இல்லை, விண்ணப்பம். உங்களைப் பணியிலிருந்து நீக்கச் சொல்லி. பெட்டிக் கடை வச்சாவது மானமா பொழைச்சுப்பாங்களாம். முட்டாள் தனமா இருக்கு அந்த மனு.''

''என்ன நடவடிக்கை எடுக்கப் போறீங்க.''

''தெரியலை, நீங்க மதுரைக்கு டிரான்ஸ்ஃபர் வாங்க தந்திரமா செய்யற நடவடிக்கைன்னு...உங்க டிபார்ட்மென்ட்ல சந்தேகப்படறாங்க.''

சரவணன் இறுகினார்

''நான் எங்கயும் போகலை மேடம்.''

''அப்ப அவங்களை இங்க வரச் சொல்லிக் கடிதம் எழுதுங்க. எனக்கு அதனுடைய பிரதியை அனுப்புங்க.''

''ஏன்...?''.

''உங்களைக் கடிதம் எழுத வச்சது என் நடவடிக்கைன்னு ஃபைலை முடிச்சிடுவேன்.''

''சரி மேடம்.''

''டெல்லிலேர்ந்து ஸ்ரீமதி வரா, உங்க இடத்தைப் பார்வையிடறதுக்கு வரா.''

''எப்ப?''

''வர மாசம்.''

''என்ன விஷயம்?''

''அநேகமா, எல்லா சிறுவர் குற்றப்பள்ளியும் வேற விதமா அமையணும்னு மத்திய சர்க்கார் உத்தரவு வரலாம் ப்ளானிங் ரெடி. அப்ரூவல் வரலை. இரண்டு

மாசத்துல கிடைக்கும். உங்க வீட்டு விஷயம் சொன்னேன். பதிலே சொல்லலை நீங்க.''

''ஏன் மேடம், எல்லாரும் என் தலையை உருட்றீங்க.'' சரவணன் கிட்டத்தட்ட கத்தலாய் பேசினார்.

''ஐயம் ஸாரி, சரவணன்.''

''யாருக்கு முன்னாடியும் நான் துக்கப்பட்டு நிற்க விரும்பலை. யாருடைய அனுதாபமும் எனக்குத் தேவையில்லை. இந்த நாப்பத்தெட்டு பசங்கள்ல ஒரு பத்து பசங்களைப் பெரிய ஆளாக்கினா போதும். எல்லாரும் ஜெம்ஸ்தான். சந்தர்ப்ப வசத்துல தப்பு பண்ணவங்கதான். தோட்டம் பாத்தீங்களா? ஒரு ஆறுமாசம் கழிச்சு வந்து பாருங்க. பூத்துக் குலுங்கும். டி.வி. பாக்கறாங்க. நிறையக் கேள்வி கேட்கறாங்க. ஒரு லைப்ரரி வேணும். பூகோளம், சரித்திரம், இயற்கை பற்றி படம் உள்ள புஸ்தகங்கள் வேணும்.''

''செய்யறேன் சரவணன். இது மட்டும்தான் வாழ்க்கைன்னு நினைக்கறீங்களா?''

''போறும் மேடம். ஐயம் ஹாப்பி.''

''காம்பவுண்ட் சுவர்?''

''நோ- நான் அஃபிஷியலா லெட்டர் எழுதறேன். அதுக்குப்பதிலா ஒரு லைப்ரரி கட்டலாம்னு எழுதறேன்.''

''உங்க இஷ்டம். பசங்களை பாக்கலாமா?''

பரேட் நடந்தது. தனித்தனியே சப்-கலெக்டர் ரமணி பையன்களுடன் பேசினார். ஒன்றாய் உட்கார்ந்து பகல் உணவு சாப்பிட்டார். சூரியகாந்திச் செடி பரிசாக வாங்கிக் கொண்டார். 'காம்ப்பவுண்ட் சுவர் வேண்டாம்'

என்று சரவணன் எழுதிக் கொடுத்த கடிதத்துடன் திரும்பினார்.

மறுநாள் தபாலில் ரமேஷுக்கு ஒரு கல்யாண அழைப்பிதழ் வந்தது. அந்தப் பெண் தினமும் வந்து பார்க்கும் பெண். அவன் காதலித்த பெண்.

பெரிய பையனை அழைத்தார். கல்யாண அழைப்பிதழை அவனிடம் கொடுத்து. "ரமேஷுக்கு வந்த பத்திரிகை அவனைக் கொஞ்சம் கவனிச்சுக்க இது பார்த்துட்டு எதுனா செய்துக்கப் போறான். கூடவே இரு" என்றார்.

ரமேஷ் வாய்விட்டு அழுதான். பையன்கள் சுற்றி நின்று தேற்றினார்கள்.

மாலையில் அவர் அருகே வந்து 'திருமணத்திற்குப் போக அனுமதி கிடைக்குமா' என்று கேட்டான்.

"போகாதே ரமேஷ். ரொம்ப கஷ்டமாயிடும் உனக்கு" சமாதானப்படுத்தினார்.

"கிட்டத்தட்ட என் கதையும் இப்படித்தான் ரமேஷ்" தன் சுய சரிதை சொன்னார். மனைவி முரண்டு பிடிப்பதைச் சுட்டிக் காட்டினார் "லேடீஸை வாழ்க்கையில் முக்கியமா நினைக்காதே. மற, மறக்க முயற்சி செய்"

"என்னிக்குக் கல்யாணம் ரமேஷ்?'

"நாளைக்கு"

"அப்ப எப்படி அனுமதி கிடைக்கும். ஒரு வாரம் டைம் வேணுமே, பரோல்ல போக, அவங்களுக்கு நீ வரது விருப்பமில்ல ரமேஷ்."

''அவளுக்காக...அவளுக்காகத்தானே இத்தனையும் செய்தேன்.''

''தப்பு ரமேஷ். ஆத்திரப்பட்டுச் செய்ததை அவங்களுக்காகச் செய்தேன்னு சொல்லாதே.''

''அவ காத்திருக்கேன்னா சார்.''

''முடியாம போயிருக்கலாம். உனக்கு வேற பெண்ணா கிடைக்காது. அமைதியா இரு. மறுபடி மறுபடித் தியானம் பண்ணு. கராட்டே எக்ஸர்ஸைஸ் பண்ணு.''

எதுவும் ரமேஷுக்கு மன அமைதி தரவில்லை.

இரவு பதினோரு மணிக்கு வேலி அடியில் புரண்டு படுத்து வெளியேறினான்.

திரும்பிப் படுத்த பெரிய பையனுக்கு ரமேஷ் காணோம் என்றதும் விழிப்பு வந்து விட்டது. தேடினான் கிடைக்காததால், சரவணனை எழுப்பினான். பையன்கள் விளக்கு போட்டார்கள். கால் தடம் கண்டு பிடித்து வேலி வரை வந்தார்கள்.

''ஜீப் எடு கதிரவன்.'' ரிவால்வரும் டார்ச்சுமாய் சரவணன் வண்டியில் தாவி ஏறினார். பெரிய பையனையும், ஸ்ரீநிவாசனையும் அழைத்துக் கொண்டார்.

வண்டி நெடுஞ்சாலை நோக்கி சீறிக் கிளம்பியது.

மலையிலிருந்து கிராமத்துக்குப் போகும் பாதை அது கிராமம் தாண்டினால் நெடுஞ்சாலை.

ஜீப் விளக்கு வெளிச்சத்தில் யாரோ குறுக்கே ஓடுவது தெரிந்தது. நெஞ்சோடு அவன் உருட்டுக் கட்டை எடுத்துப் போவதை உணர முடிந்தது.

''நிதானமா போ கதிரவன்.'' சரவணன் ஜாக்கிரதை யாக எச்சரித்தார். பெரிய பையன் ஜீப்பின் பின்பக்க விளிம்பில் எப்போது வேண்டுமானாலும் குதிக்கக் காத்தி ருந்தான்.

ஜீப் கிராமத்தில் நுழைந்தது.

பெரிய பாறாங்கல் ஒன்றும், சின்ன இளநீர் அளவு மலைக்கல்லும் பளீரென்று இடது பக்க லைட்டைச் சிதறடித்தன.

அடியின் வேகமோ, இல்லை மிரட்சியோ ஜீப்பை அலைமோத விட்ட கதிரவன் நிறுத்தினார்.

சரவணன் கீழே குதித்தார்.

டார்ச் அடித்து நாலு திக்கும் பார்த்தார்.

''யாருடா அது?'' என்று குரல் கொடுத்தார்.

''ஐயா...எங்க வூட்டு பொண்ணை நாசம் பண்ணிட் டானே...பாவி...சண்டாளா...'' ஒரு பெண் குடிசையிலி ருந்து தலை விரி கோலமாய் ஓடி வந்தாள். இன்னும் இரண்டு பெண்கள் அவள் பின்னால் ஓடி வந்தனர்.

பதினைந்தடித் தொலைவில் நின்ற அந்தப் பெண் தரையில் விழுந்து புரண்டாள். ஒருக்களித்து ஒரு கையால் மண் வாரி தூற்றினாள்.

தரையில் அடித்த புழுதி மேலே தெறித்தது.

''யாரும்மா நீ'' சரவணன் முன்னேறினார்.

''ஜெயில்ல இருக்கற பையன் எங்க பொண்ணை கெடுத்துட்டுப் பூட்டானே...''

''ஏய் என்ன கதை வுடறே...''

''ஆமா, நாங்க கதை வுடறோம். நீ காலைப் பரப்பிக்கினு கேளு கிளியாட்டம் இருந்த பொண்ணை ஜாக்கெட் கிழிச்சு இழுத்து கெடுத்துட்டானே...''

''பையன் எங்கே?''

''அடிச்சு செங்கல்பட்டு போலீஸுக்கு கூட்டிக்கிட்டு போறாங்க. இப்பத்தான் போவுது ஜனம்.''

''கதிரவன் வண்டி எடுங்க.''

''எம் பொண்ணு கதி என்னா...பதில் சொல்லிட்டுப் போ.'' அந்தப் பெண் வழி மறிக்க, ஜீப் அவளைச் சுற்றிக் கொண்டு ஓடியது.

குலுங்கிக் குலுங்கி மேடேறியது. தொலைவில் நெடுஞ்சாலையில் வண்டி ஒளியுடன் விரைவது தெரிந்தது. நெடுஞ்சாலைக்கு அருகே ஆட்கள் விரைவது நிழலாய் புலப்பட்டது.

''கதிரவன் சீக்கிரம் போங்க.''

''ரொம்ப நொடிப்பு சார்.''

''போங்கய்யா சீக்கிரம்.''

ஜீப் தாறுமாறாய் ஓடிற்று. ஒரு மேடேறி இறங்கும் இடத்தில் பெரிய பாறை புரட்டி வைக்கப்பட, வினாடி நேரத்தில் வலப்பக்கம் திரும்ப, இடது டயர் பாறையில் இடிக்க, துள்ளிப் பெரிய பையன் கீழே விழுந்தான். ஜீப் புரண்டு வலது புறம் சரிய, சரவணன் கீழே குதித்தார். கதிரவன் காலூன்றி குதித்து வெளியே ஓடினார். விழுந்

தார். ஸ்ரீநிவாசன் மாட்டிக் கொண்டான். ஜீப்போடு புரண்டான். தலை குப்புற கிடக்கும் ஜீப்பிலிருந்து ஊர்ந்த படி வெளியே வந்தான்.

''சீனு, என்ன ஆச்சு?''

''தெரியலை சார்...பின் மண்டைல அடி,'' டார்ச் அடித்து சோதித்தார். ரத்தம் கசிந்தது. கர்ச்சீப் எடுத்தார். பொத்தினார். கதிரவனுக்குச் சிராய்ப்பு. நொண்டிக் கொண்டு ஜீப் நிமிர்த்தினார். பெரிய பையன் உதவினான்.

''சீனு பொத்திக்க அப்படியே. பெரிய பையா வா என் கூட.'' சாலையில் டார்ச் அடித்து ஓடினார்.

எதிரே கூட்டம் வெளிச்சம் கண்டு நின்றது. இரண்டு பேர் முன்னேறிக் கொம்பு சுற்றினார்கள்.

சரவணன் ரிவால்வர் எடுத்தார்.

''சுட்டுப் பொசுக்கிடுவேன் யாருடா அது?''

''சார் என்னை அடிக்கறாங்க சார்'' ரமேஷ் அலறல் கேட்டது.

பெரிய பையன் குனிந்து இரண்டு கற்கள் எடுத்து தயாராய் நின்றான்.

''யார் அது...?'' கொம்பு சுற்றிய ஆட்களைத் தாண்டி சரவணன் முன்னேற, கூட்டத்தில் சிலர் ஓடினார்கள். ரமேஷைப் பிடித்துச் கொண்டிருந்தவர்களைத் தள்ளிவிட்டு அவன் கட்டுகளை அவிழ்த்த போது ஒரு ஆள் சரவணன் முதுகில் தாக்கினார்.

பெரிய பையன் எகிறி அந்த ஆள் இடுப்பில் உதைத்தான். நெட்டித் தரையில் தள்ளினான்.

''சீனு...சீனுவாசா. ஓடிப்போய் நம்ம பசங்களை இட்டா.'' பெரிய பையன் தலையைப் பொத்திக்கொண்டு உரக்கக் கூவினான். மலை முக்குவரை அவன் குரல் எதிரொலித்தது. ஜீப் வெளிச்சம் வீசிப் பள்ளிக்கூடம் திரும்புவது தெரிந்தது. குலுங்கிக் குலுங்கி அது போவதை சிகப்பு வெளிச்சம் காட்டிக் கொடுத்தது.

''ரமேஷ், உட்கார்ந்துக்க, ஏன் வெவியே வந்தே.'' இருவரும் தலை பொத்தி குனிந்து உட்கார்ந்து கொண்டார்கள்.கற்கள் சிதறி விழுந்தபடி இருந்தன. அடிபட்டுச் சரிந்தவன் முகத்தில் அறைந்து ''கல்லடிக்கறதை நிறுத்தச் சொல்லு. கொன்னுடுவேன் உன்னை.'' மறுபடி அறைந்தார்.

அவன் வலி தாங்காமல் ஊளையிட்டான். இன்னும் அதிக கற்கள் வந்தன. தோளை, முதுகைத் தாக்கின. ''ஓடு ரமேஷ், பள்ளிக்கூடம் பார்த்து ஓடு.'' அவனை அழுத்திக் கொண்டபடி மெல்ல முன்னே நகர்த்தினார்.

''ரமேஷ், ஏதாவது பொண்ணைத் தொட்டியா?''

''சத்தியமா இல்லை சார். மெயின்ரோடுக்குப் போகலாம்னு வந்தேன். மடக்கி யார்னு கேட்டாங்க ஓடினேன். மடக்கிப் புடிச்சு அடிச்சாங்க சார்.''

''ஓடு...ஓடு.'' ரமேஷ் தலைதெறிக்க பள்ளிக்கூடம் நோக்கி ஓடினான். குனிந்து நகர்ந்தபடி அருகே உள்ள வேலிக்காத்தான் செடி மறைவில் பெரிய பையனும், சரவணனும் ஒதுங்கிக் கொண்டார்கள்.

''சுட்டுருங்க சார்.''

''தப்பு தம்பி. அனாவசியமா சுடக்கூடாது.''

''கொன்னுடுவாங்க சார்.''

''கிட்ட வந்தா பார்ப்போம். அப்படியே இரு.''

கல் எறிதல் நின்றது. ஆட்கள் நடமாட்டம் பாதையில் தொலைவில் தெரிந்தது. பள்ளிக்கூடத்துக்கும், சரவணனுக்கும் நடுவே ஆட்கள் மறைந்து இருக்கிறார்கள். மறுபடி நாலுபேர் கம்பு சுற்றி முன்னேறினார்கள்.

''பெரிய பையா, மெயின்ரோடுக்கு ஓடு பஸ் லாரி புடிச்சு செங்கல்பட்டு போ. போலீஸுக்குச் சொல்லு.''

''சார்...நீங்க தனியா...''

''போ, உடனே ஓடு.''

''மாட்டேன் சார். உங்களைத் தனியா விட்டுட்டு...

''என்கிட்ட துப்பாக்கி இருக்கு. நீ ஓடு, உடனே போ.''

பெரிய பையன் பின்பக்கமாகவே மெயின்ரோடு ஓடினான். ஏதோ வேன் நிறுத்தி தாவி ஏறினான்.

சரவணன் அமைதியாய் வேலிக்காத்தானுக்கு அடியில் பதுங்கிக் கொண்டார்.

கிட்ட வரும் கூட்டம் பார்த்தார். 'ஒரு ஆளைமுழங்காலில் சுட்டு விடலாமா?' துப்பாக்கியில் விரல்களை அழுத்தினார்.

ஒரு எச்சரிக்கை தரலாமா? வானம் நோக்கி ஒரு ரவுண்ட் சுடலாமா?

தயாரானார். வானம் நோக்கித் துப்பாக்கி உயர்த்தினார் விரலை அழுத்தினார். படாரென்று துப்பாக்கி வெடித்தது.

நெருப்புப் பொறி இருட்டில் மின்னி அடங்கிற்று.

கூட்டம் கலவரமாயிற்று.

''சுடறான். சுடறான். பதுங்கிச் சுடறான்.'' கூட்டம் பின்னடைந்தது, சரவணன் எழுந்து பாதைக்கு வந்தார். நாற்பதடி தூரத்தில் உள்ள ஆளுக்கு அவர் நிற்பது தெரிந்தது. கையிலிருந்த அரிவாளைச் சுழற்றி முழுவேகத்துடன் வீசினான்.

இருட்டில் ஏதோ பறந்து வருவது பார்த்து குனிந்தார் வயிற்றுக்கு வர வேண்டிய அரிவாள் தலையில் பட்டது. 'அம்மா' என்று அலறல் வெளிப்பட்டது.

பொத்திக் கொண்டு உட்கார, பெரிய கல் காலைத் தாக்கிற்று. சரவணன் கண்கள் ஒருகணம் இருண்டு தெளிவாயிற்று. துப்பாக்கி தூக்கி முதல் ஆளைச் சுட்டார். பொத்தென்று விழுந்தான்.

''கொல்லுடா அவனை.''

ஒரு ஆள் வெளியேறி அருகே வந்தான். மறுபடி சுட்டார். அவன் வயிறு பிடித்து சரிந்தான்.

மறுபடி கண்கள் இருண்டன.

வேல் கம்பு அருகே வந்து விழுந்தது.

ஜீப் குலுங்கி வருவது தெரிந்தது.

பின்னால் பையன்கள் ஓடி வந்தார்கள். கூட்டம் சிதறியது.

சரவணன் தள்ளாடினார். பையன்கள் கூட்டம் பின்னாலிருந்து தாக்கத் துவங்கிற்று கூட்டம் முன்னே ஓடி வந்தது, சரவணனைத் தொடர்ந்து வேலிக்காத்தான் இடையே ஓடியது. இடதும் வலதும் பிரிந்து கூடியது.

அவர் ஒளிந்து கொண்டிருந்த வேலிக்காத்தான் அருகே ஒரு ஆள் ஒளிந்து கொண்டான். ஐந்தடித் தொலைவில் வலியில் தள்ளாடிக் கொண்டிருந்த சரவணனை உற்றுப் பார்த்தான்.

கையில் உள்ள உருட்டுக் கட்டையை இறுகப் பிடித்துக் கொண்டான்.

இடது பக்கம் ஒரு கும்பலைக் கவனித்தபடி சரவணன் அவனுக்கு முதுகு காட்ட பாய்ந்து எழுந்தான். பின் தலையில் ஓங்கிப் போட்டான். சரவணன் துப்பாக்கி வானம் பார்த்து வெடித்தது மறுபடி ஓங்கிப் போட்டான். சரவணன் தரையில் சரிந்தார்.

நெஞ்சில் அடித்தான். துவண்டு சுருண்டார். முதுகில் அடித்தான். உலுக்கி நிமிர்ந்தார்.

இரண்டு கைகளில் கட்டையை உலக்கை போல பிடித்துக் கொண்டு முழு பலத்துடன் அவர் தொடைகளுக்கு நடுவே பலங்கொண்ட மட்டும் குத்தினான். சரவணன் துடித்து அடங்கினார்.

''ஃபைன் கட்டற காசை மாமூலா வாங்கிடறீங் களாக்கும்?''

''உங்களுக்குப் புரியலை சார். கோபப் படறீங்க.''

''கோபமில்லை, ஏட்டு. துக்கம். போலீஸ்காரனே இனிமே சாராயம் காய்ச்சினாலும் ஆச்சரியப் படறதுக் கில்லை.''

''எங்களுக்கென்ன தலையெழுத்தா? பதினெட்டு மணி நேரம் ட்யூட்டி எப்படா வீடு பார்ப்பம்னு இருக்கும். அப்படி என்ன கொடுத்துடப் போறாங்க. அஞ்சு பத்துன்னு கிடைக்கும். கஞ்சாப் பயிறுல அதிகம்றாங்க. இங்க விளையறதில்லை.''

''ஹெட்கான்ஸ்டபிள், மரியாதையா பேசு.''

''இப்ப நோவுதுங்களா? வூட்டுக்கு வூடு வாசப்படி. இது நானா செய்யலை சார். நான் நாலு பேர் தயவுல வாழறவன். என் தலைக்கு மேல பல ஆளுங்க இருக்கு. உங்கக்கிட்ட அவங்க நேரா பேசமாட்டாங்க, நான்தான் பேசணும். என் மேல கோபப்பட வேணாம். பதமா நடந்துக்கறது நல்லது. உங்க இடத்துல தொந்தரவா, அடிச்சுப் பின்னிடறேன். மலை மேல நெருப்பு எரிஞ்சா என்ன...புகை வந்தா என்ன...நான் வரேன் சார்.''

அந்த ஆள் இறங்கிப் போனான்.

உள்ளே கார் நுழைந்தது. சப்-கலெக்டர் ரமணி உள்ளே நுழைந்தார்.

''வாங்க.''

''என்ன கம்ப்ளெயிண்ட் வருது? பசங்க வில்லேஜ் குள்ள நுழைஞ்சுதா...?''

''இல்லை மேடம்.''

''சாராய கேஸ் ஆளுங்கன்னு தெரியும். மலைக்கு மேல பசங்களைக் கூட்டிக்கிட்டு இனி போக வேணாம்.''

''இந்தச் சூழ்நிலை சரியா இல்லை மேடம்.''

''நமக்கென்ன...பசங்க வரைக்கும் பாத்துக்க வேண்டியதுதானே.''

''அங்கயும் கூவம் கரையோரமா இதான் பிரச்சனை. அதே பிரச்சனை இங்கேயும் வர க்கூடாதுன்னுதான்.''

''எங்க போக முடியும்? சரவணன், எல்லா இடத்துலயும் இது இருக்கு. ப்ளீஸ், கொஞ்சம் ஜாக்கிரதையா இருங்க.''

''இதே நாக்கா வச்சு நான் எக்ஸ்ட்ராவா ஒரு காம்பவுண்டு சுவருக்கு சாங்ஷன் வாங்கிட்டேன். பத்தடி உயரம் வித் க்ளாஸ் பீஸ்.''

''மேடம். இது சரியில்லை. மறுபடி ஜெயிலாயிடும். பசங்களுக்குக் காம்பவுண்ட் ஜெயில் மாதிரி தோணிடும். நான் சும்மா ஒரு வேலி, சுதந்திரமா விட்டிருக்கேன். எதுக்கு காம்பவுண்ட்?''

''சரவணன், வேலி பார்த்தவுடனே இது தாண்ட முடியும்னு பார்க்கறவங்களுக்குத் தோணும். காம்பவுண்டுன்னா பசங்க ஜாக்கிரதையா உள்ள் வெளிய வர முடியாதபடி...''

''பசங்க போகமாட்டாங்க மேடம்.''

''ஒரு பையன் போனாக்கூட பெரிய தப்பாயிடும்.''

''ஒருத்தன் கூட போகமாட்டான். நான் காரண்டி.''

''சாங்ஷன் வாங்கிட்டுக் கட்டலைன்னா கேள்வி வரும்.''

அவன், கட்டையைக் கீழே போட்டு விட்டு ஓடினான்.

சரவணன் வலியின் உச்சத்தில் மறுபடி கத்தினார். வானம் பார்த்தார். சுடர்கள் சிரித்தன. ஒன்று நகர்ந்து பெரிதாகி அவரைத் தன்னுள் இழுத்துக் கொள்ள சரவணன் அந்த மண் பாதையில் செத்துப் போனார்.

ஸ்ரீநிவாசன் முதலில் ஓடி வந்து தூக்கினான். தலை தொங்கிற்று.

''அப்போ...அப்போ... அப்போ...'' ஸ்ரீநிவாசன் அலறினான். நெடுஞ்சாலை வாகனங்கள் மிரண்டு கிறீச்சிட்டு நின்றன. பையன்கள் சரவணனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

ஆறுமுகம் கீழே கிடந்த சரவணனைத் தொட முயன்றபோது கதிரவன் தடுத்தார். காவலர்கள் நெடுஞ்சாலைக்கு ஓடினார்கள்.

போலீஸ் வருகிற வரை அத்தனை பையன்களும் அங்கேயே நின்று கொண்டிருந்தார்கள்.

நாலு லாரி போலீஸ் வந்து பெட்ரோமாக்ஸ் பொருத்தி அவர் தலைமாட்டில் வைக்க ''எங்கய்யா...எங்கய்யா...'' என்று கதறினார்கள். தூக்கி ஜீப்பில் வைத்த போது முகம் பொத்தி அழுதார்கள்

காலையில் கிராமம் போலீஸால் பிரித்துப் போடப் பட்டது. நாற்பத்தெட்டு பையன்களையும் வரிசையாய் நிற்க வைத்து எண்ணியது.

சப்-கலெக்டர் ரமணி கலைந்த தலையுடன் வந்து இறங்கினார்.

''என்னப்பா...என்னப்பா இது...''

பையன்கள் உணர்ச்சி வசப்பட்டார்கள். நான்கு வரிசையானார்கள். இரண்டு கைகளையும் வீசி 'ஹோ... ஹைய்' என்று கைகளை வீசி காராட்டே செய்தார்கள். காலால் சுழன்று உதைத்தார்கள். உடம்பு முறுக்கி வலு வோடு காற்றைக் குத்தினார்கள். அரைமணி சகலமும் செய்துவிட்டு அடங்கினார்கள். அமர்ந்தார்கள். கண் மூடித் தியானத்தில் ஈடுபட்டார்கள்.

ஜீப்பில் மோதி கவிழ்த்த பாறையைக் கதிரவன் கொண்டு வந்து காட்டினார்.

பையன்கள் அதைப் புரட்டி கட்டட வாசலுக்கு எடுத்துப் போனார்கள்.

'சரவணம்' என்று அதில் வெள்ளைப் பெயிண்டில் எழுதினார்கள். சுற்றி உட்கார்ந்து அழுதார்கள்.

மறுநாள் ஹிண்டுவில் ஒரு ஓரத்தில் 'சிறுவர் குற்றப் பள்ளிகளில் மாறுதல். இனி அவை மாதிரிப் பள்ளிகளாக இயங்கும். தனிப்பட்ட சீருடை இல்லாது சிறைவாசம் என்கிற உணர்வு தராது, ஏனைய பள்ளிகள் போல இயங் கும். இது மத்திய அரசின் புதிய உத்தரவு' என்று போடப்பட்டிருந்தது.

நாலு பக்கம் தள்ளி, 'குற்றப்பள்ளி போலீஸ் சூப்பிரண்டென்டென்ட் சரவணன், சாராயக் கும்பலால் தாக்கிக் கொல்லப்பட்டார். போலீஸ் புலன் விசாரணை செய்கிறது' என்று செய்தி வந்திருந்தது.

இரண்டுக்கும் சம்பந்தம் இருப்பது படிப்பவருக்குத் தெரியாது.சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியும். தெரிந்த வர்கள் யாருக்கும் சொல்லவில்லை.

● ● ●


பலாமரம்
பாலகுமாரன்